Viber : 076 636 3378
பக்கங்கள்:இருபத்து நான்கு
# வலம்புரி
E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk
Valampurii
சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 தை 28 வெள்ளிக்கிழமை (10.02.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 053

UNION MONEY TRANSFER உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392

# காணாமல் போனோர் மற்றும் அரசியல் கைதிகள் விடயத்தில்
# த.தே.கூ எம்.பிக்களில் நம்பிக்கை இல்லை!
## உரிய பதில் வழங்க அரசுக்கு ஒரு வார அவகாசம்; பாதிக்கப்பட்ட தரப்பு உறவுகள் நேற்று அறிவிப்பு



(கொழும்பு)
காணாமல் போனவர்கள் மற்றும் அரசியல் கைதிகள் விடயம் தொடர் பான அரச உயர்மட்ட கலந்துரையாடலில் நம்பிக்கையின்மை காரணமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை கலந்துரையாடலிருந்து வெளியேற்றி விட்டு, அரசாங்கத்திற்கு ஒரு வார கால அவகாசத்தை காணாமல் போனவர்களின் உறவினர்கள் கொடுத்துள்ளனர்.

04 ஆம் பக்கம் பார்க்க...

அடக்கு முறைகளுக்கு எதிரான ஒருமித்த குரலாக
# கிழக்கில் இன்று "எழுக தமிழ்"



(மட்டக்களப்பு)
கிழக்கில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி இன்று மட்டு. நகரில் பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் நடைபெறவுள்ளது.
இந்த எழுச்சிப் பேரணியில் வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ்மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான நீதியரசர் சி.வி.விக்

24 ஆம் பக்கம் பார்க்க...

## வடக்கு தண்ணீர்ப் பிரச்சினை; 23ஆம் திகதி சிறப்பு அமர்வு

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தின் தண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கு சிறப்பு அமர்வொன்று நடத்தப்பட வேண்டுமென சபையில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில் இதற்கு முதலமைச்சர் உள்ளிட்ட சில உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்த போதும் எதிர்க்கட்சி மற்றும் ஆளும் கட்சியின் சில உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கமைய எதிர்வரும் 23ஆம் திகதி சிறப்பு அமர்வொன்றை நடத்துவதற்கு மாகாண சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபை

23 ஆம் பக்கம் பார்க்க...

## சுமந்திரன் பாதுகாப்பு; சபாநாயகர் பணிப்பு

(கொழும்பு)
தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பாதுகாப்பு தரப்பிற்கு சபாநாயகர் கரு ஜயசூரிய பணிப்புரை விடுத்துள்ளார்.
நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்விலேயே சபாநாயகர்

23 ஆம் பக்கம் பார்க்க...

# உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை பறிக்கும் வகையில் அரசின் செயற்பாடு!
## சுற்று நிரூபம் சபையில் இரத்து

(யாழ்ப்பாணம்)
உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை மீளப்பெறும் வகையில் வெளியிடப்பட்ட சுற்று நிரூபத்தை இரத்துச் செய்து உள்ளூராட்சி மன்றங்கள் சிறப்பாக இயங்குவதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரச தரப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனக் கோரி வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களைப் பறிக்கும் வகையிலேயே அரசின் செயற்பாடு கள் அமைவதாகக் குறிப்பிட்ட முதலமைச்சர் 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகளிற்கு இருக்கின்ற அதிகாரங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமே ஒழிய அதனைப் பறிக்கின்ற வகையில் மத்திய அரசு செயற்படக் கூடாதென்றும் கேட்டுக் கொண்டார்.
வடக்கு மாகாண சபையின் 84 ஆவது கூட்டத் தொடர் நேற்றைய தினம் சபையின் அவைத் தலைவர் சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனால் கொண்டு

24 ஆம் பக்கம் பார்க்க...

## அரசியல் கைதிகள் இருவர் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழ் அரசியல் கைதிகள் இருவர் நேற்றைய தினம் கண்டி நீதவான் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
கண்டியை சேர்ந்த ராமையா ரூபச்சந்திரன், யாழ்ப்பாணத்தை சேர்ந்த விமலசிங்கம் தனயுகன்

24 ஆம் பக்கம் பார்க்க...

# இராணுவ ஜீப்-ரயில் விபத்து; இராணுவத்தினர் இருவர் உயிரிழப்பு



23 ஆம் பக்கம் பார்க்க...

# இராணுவத்துக்கென காணிகளை சுவீகரிக்க ஒருபோதும் அனுமதி வழங்கமாட்டேன்
## வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கருத்து

(யாழ்ப்பாணம்)
வடக்கில் எந்தவொரு காரணத்துக்காகவும் இராணுவத்தினருக்கென காணி சுவீகரிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என தெரித்துள்ள வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தான் மறுக்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்கள் நேரடியாக கொழும்பு தலைமைகளுடன் தொடர்பு கொண்டு அனுமதி பெறுவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
வடக்கு மாகாண சபையின் 84 ஆவது அமர்வு நேற்றைய தினம் பேரவை செயலகத்தின் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் காணி தொடர்பான விடயம் பேசப்படும் போதே

23 ஆம் பக்கம் பார்க்க...



## கேப்பாப்பிலவு போராட்டத்திற்கு ஜனாதிபதி தீர்வு வழங்க வேண்டும்
### வடக்கு சபையில் பிரேரணை நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)
சொந்த மண் மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற கேப்பாப்பிலவு மக்களின் உண்மை நிலைமைகளை அறிந்து கொண்டு விமானப்படையினரிடமிருக்கின்ற மக்களின் காணிகளை விடுவித்து அந்த மக்களிற்கு ஜனாதிபதி உரிய தீர்வை விரைவாகப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென வலியுறுத்தி வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
அத்துடன் போராட்டத்தை மேற்கொள்கின்ற மக்களுக்கு ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள்

23 ஆம் பக்கம் பார்க்க...

## மாணவர்கள் கொலை; சந்தேக நபர்களின் மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம்-கொக்குவில் கே.கே.எஸ்.வீதி பகுதியில் பல்கலைகழக மாணவர்கள் இருவரை பொலிஸார் சுட்டுக்கொலை செய்த வழக்கு விசாரணையில் கைதாகியுள்ள சந்தேக நபர்களை எதிர்வரும் 23

23 ஆம் பக்கம் பார்க்க...

## விடுவிக்கப்பட்ட வலி.வடக்கு காணிகளில் 225 வீடுகள்
### அமைக்க நடவடிக்கை என்கிறார் யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)
வலி-வடக்கில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட காணிகளில் 225 வீடுகள் அமைப்பதற்காக விரைவான நடவடிக்கைகள் அரசினால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

23 ஆம் பக்கம் பார்க்க...



# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 1952 . 12 . 07



மறைவு 2017 . 01 . 11

## அமரர் உதயகுமாரன் இராஜலட்சுமி

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 10.02.2017 இன்று வெள்ளிக்கிழமை பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கிறோம்.

அத்துடன் மரண சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோண்டாவில் வடக்கு,
அன்னுங்கை. (7903)

இங்ஙனம்
குடும்பத்தினர்

## சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான கற்கை நிறுவகம்

### மனித உரிமைகள் தொடர்பான சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

**சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான கற்கை நிறுவகமானது சமூகத்தில் மனித உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் தன்னிச்சையாக செயற்படக்கூடிய மனித உரிமை பாதுகாவலர்களை உருவாக்கும் நோக்கில் மனித உரிமை தொடர்பான சான்றிதழ் கற்கை நெறியினை நடத்த உள்ளது.**

**குறித்த கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.**

- சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் வகுப்புக்கள் நடைபெறும்.
- மூன்று மாதத்திற்கான கற்கை நெறி.
- இக் கற்கை நெறியானது முற்றிலும் இலவசமானது.

### விண்ணப்பிப்பதற்கான அடிப்படை தகைமைகள்

01. க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ், ஆங்கிலத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
02. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
03. மனித உரிமை செயற்பாடுகளில் ஆர்வம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

### விண்ணப்பிக்கும் முறை

01. சுயவிபர கோவையை தபால் மூலமாகவோ / மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.
02. விண்ணப்ப முடிவுத் திகதி - 2017.02.20

### மேலதிக தொடர்புகளுக்கு

**தொ.பே. இல. : 021 224 1494, 077 324 1808**
**மின்னஞ்சல் : lhreducation14@gmail.com**
**முகவரி : No.438, K.K.S Road,**
**Kondavil,**
**Jaffna.**

(7898)

# மரண அறிவித்தல்

## அமரர்
## கிட்டிணன் சிவப்பிரகாசம்

**(பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ.சங்க முன்னாள் தலைவர், வட மாகாண ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவர், தீபஜோதி சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவர், உரிமையாளர் புலோலி வைன் ஸ்ரோர்ஸ்)**



கூவில் புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணன் சிவப்பிரகாசம் நேற்று (09.02.2017) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற கிட்டிணன் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், பரிமளம் அவர்களின் பாசமிகு கணவரும், அருள்நந்தி, சிவரூபன், வாசுகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரேவதி, பரீனா, கிருஸ்ணன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர்களான பொன்னையா, சிவபாக்கியம், இலட்சுமி மற்றும் கோபாலன் (பிரான்ஸ்), அமரர்களான சந்திரசேகரம், விஜயரட்ணம், நற்குணம் மற்றும் சற்குணம், மதிவதனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சின்னம்மா, புஷ்பமலர், மகேஸ்வரன் (குவைத்), ரங்கா (லண்டன்), லலிதா, ரோகினி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், அபிஷன், நிதர்ஷன், திருபா, நிருஜா, கர்ஷா, சியாத், ஷரீஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2017) வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக மந்திகை கருகம்பன் இந்து மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கூவில்,
புலோலி தெற்கு,
புலோலி. (சி-7512)

தகவல் :
சிவரூபன் - 076 838 3724,
அருள்நந்தி - 077 420 3780

# சிங்கள மக்களின் பங்கேற்புடன் கேப்பாப்பிலவு மக்களுக்கு ஆதரவாக நீர்கொழும்பில் நேற்று பாரிய போராட்டம்






(கொழும்பு)

**தமது சொந்தக்காணிகளை விடுத்து மீளக்குடியேற அனுமதிக்குமாறு கோரி தொடர்போராட்டங்களில் ஈடுபட்டு வரும் கேப்பாப்பிலவு மக்களுக்கு ஆதரவாக நீர்கொழும்பில் நேற்று சிங்கள மக்களின் பங்கேற்புடன் பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.**

இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமது சொந்தக் காணிகளை விடுவிக்குமாறு கோரி தொடர் போராட்டத்தில் கேப்பாப்பிலவு பிலக்குடியிருப்பு மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக நீர்கொழும்பில் ஆர்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பல பொது மக்கள் கலந்து கொண்டு தங்களது ஆதரவை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## கடற்படை முகாமை மூடமுடியாது-பிரதமர்

(கொழும்பு)

இரணைதீவு கடற்படை முகாமை மூடிவிடக்கூடிய சாத்தியமில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இரணைதீவு கடற்படை முகாமை மூடிவிடுமாறு சிறிதரன் கோரியிருந்தமைக்கு அவ்வாறு குறித்த முகாமை மூடிவிட முடியாது என பிரதமர் பதிலளித்துள்ளார்.

இந்த முகாமை எந்த வகையிலும் மூட முடியாது என கடற்படையினர் தம்மை தெளிவுபடுத்தியுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.



தென்னிந்தியாவிலிருந்து வரும் மீனவர்களை தடுக்கவும், போதைப் பொருள் கடத்தல்களை இல்லாதொழிக்கவும் இந்த முகாம் மிகவும் அவசியமானது என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

## எனது ஜாதகத்தில் மரண கண்டம் எதுவும் கிடையாது

அமைச்சரவை மாற்றம் குறித்து ஊடகங்களே பிரசாரம் செய்து வருவதாக மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாநாடு ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த துறையில் உங்கள் தலைமையில் நீங்கள் பங்கேற்கும் இறுதி மாநாடு இதுவாக அமையுமா? என கேள்வி எழுப்பியுள்ளனர். இதற்கு என்னை கொலை செய்யத் திட்டமிட்டுள்ளதா? எனது ஜாதகத்தில் மரண கண்டம் எதுவும் கிடையாது என தெரிவித்தார். (இ-3)

## வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம் பெருமளவு பொலிஸார் திடீரென குவிப்பு



(கொழும்பு)

கொழும்பிலுள்ள குப்பைகளை ஏக்கல பகுதிக்கு கொண்டு வர வேண்டாம் என தெரிவித்து ஜா-எல மடம் சந்தியில் நேற்றுக் காலை பிரதேச மக்களால் பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு- குருநாகல் பிரதான வீதியின் ஜா-எல மடம் சந்தி பகுதியில் பாதையை இடைமறித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டதோடு பாரிய போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டுள்ளது. மேலும் ஆர்ப்பாட்ட இடத்துக்கு பெருமளவு பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். (இ-3)

# கர்ப்பிணிப் பெண் படுகொலை

## கைது செய்யப்பட்ட இருவர்மீதும் 14-ம் திகதி அடையாள அணிவகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் கர்ப்பிணி பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக கைது செய்யப்பட்ட இருவரதும் அடையாள அணிவகுப்பை எதிர்வரும் 14ஆம் திகதி நடத்துவதற்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றமானது கட்டளை பிறப்பித்துள்ளது.

கடந்த மாதம் ஊர்காவற்றுறை கரம்பொன் எனும் இடத்தில் வீட்டில் தனித்திருந்த ஏழு மாத கர்ப்பிணி பெண்ணொருவர் இனந்தெரியாதோரால் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தார். இவ்வாறான நிலையில் இச் சம்பவம் தொடர்பில் இருவரை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்திருந்தனர். அத்துடன் இக் கொலை சம்பவத்தை நேரில் பார்த்த கண்கண்ட சாட்சியமொன்று இருப்பதாகவும் பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரையும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துவதற்காக நேற்றுமுன்தினம் வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.எம்.எம்.றியால் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த இருவரையும் சாட்சிகளுக்கு இடையிலான உண்மைத் தன்மையில் ஏற்படும் முரண்பாட்டை தவிர்க்கும் வகையில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தியிருக்காத நிலையில் அவ் அடையாள அணிவகுப்பை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன் அதுவரை குறித்த இருவரையும் விளக்கமறியலில் வைக்கவும் கட்டளை பிறப்பித்திருந்தார்.

இதேவேளை சந்தேகநபர்களாக கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் சம்பவம் நடந்த நேரம் மருதனார்மடத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் அவரது வாகனத்திற்கு எரிபொருள் நிரப்பிக்கொண்டிருந்ததாகவும் மற்றைய நபரது உடல் மற்றும் உடையில் இருந்த இரத்த கறையானது அவர் விபத்திற்குள்ளானதால் ஏற்பட்ட இரத்த கறையெனவும் அவர்கள் தரப்பு சட்டத்தரணி மன்றில் நகர்த்தல் பத்திரமொன்றை தாக்கல் செய்து அதில் இவ் விடயத்தை குறிப்பிட்டிருந்தார்.

அத்தோடு குறித்த எரிபொருள் நிரப்பு நிலைய கண்காணிப்பு கமராவில் சந்தேகநபர் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பாக விசாரணை செய்யுமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (செ-4)

# வடக்கில் போரின் துன்பத்தைவிட போக்குவரத்து பெரும் துன்பம்!

## பணிப்புறக்கணிப்புகளால் பயணிகள் அவதி

(யாழ்ப்பாணம்)

வடக்கில் போரினால் அனுபவித்த துன்பத்தை விட தற்போது போக்குவரத்து சீரின்மையால் தொடர்ச்சியான துன்பத்தை அனுபவித்து வருகிறோம் என பொதுமக்கள் (பயணிகள்) விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இ.போ.ச ஊழியர்களால் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து வடமாகாண தனியார் போக்குவரத்து சங்கத்தினரால் நேற்றைய தினம் பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் வடக்கில் பல பகுதிகளிலும் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டிருந்ததனை அவதானிக்க முடிந்தது.

குறித்த விடயம் தொடர்பில் பயணிகளிடம் கருத்துக்களை கேட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்

வடக்கு மாகாணத்தில் போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகள் நாளாந்தம் அதிகரித்த வண்ணமே உள்ளது. இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் உரிய நடவடிக்கைகள் எடுப்பதாக எமக்கு தெரியவில்லை.

தொடர்ச்சியாக சுழற்சி முறையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனவே தவிர பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதாக தெரியவில்லை.இதனால் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், அரச உத்தியோகத்தர்கள் என பலரும் பெரும் துன்பத்தை அனுபவித்து வருகிறோம்.

எவ்வெப்போது பணிபுறக்கணிப்பை மேற்கொள்வார்கள் என தெரியவில்லை. நம்பிக்கையுடன் தூர இடங்களுக்கு சென்று வர முடியவில்லை.நாம் கடந்த காலங்களில் பல துன்பங்களை அனுபவித்து வந்தோம். தற்போது இவ்வாறான துன்பங்களை அனுபவிக்கிறோம். நேர வீண்விரயம், பண செலவு என்பன எம்மை துன்பப்பட வைக்கிறது.

தயவு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முதலில் போராட்டங்கள் முன்னெடுப்பதை நிறுத்தி மக்களுக்கு சிறந்த சேவையை முன்னெடுக்க உரிய நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான சீரற்ற போக்குவரத்து வடக்கு மாகாணத்திலேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தொடர்பில் அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-9)

# அழகுக்கலை நிபுணர்களுக்கான யாழ்ப்பாண மாவட்ட சங்கம்

யாழ். மாவட்டத்திலுள்ள அழகுக்கலை நிபுணர்களிற்கான மாவட்ட சங்கம் அமைப்பதற்கு அழகுக்கலை நிபுணர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம், பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள மாவட்ட முகாமைத்துவ திறன் அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் ஒன்று கூடுமாறு யாழ் மாவட்ட செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவின் செயற்திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் உள்ள அழகுக்கலை நிபுணர்களிற்கான மாவட்ட சங்கம் ஒன்றினை உருவாக்க வேண்டியுள்ளது.

அழகுக்கலை நிலையங்களுக்கான தேசிய தரத்தை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் உருவாக்கப்படும் சங்கம் தொடர்பான நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம், பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள மாவட்ட முகாமைத்துவ திறன் அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் (புதிய யாழ்ப்பாண பிரதேச செயலகத்திற்கு அருகில் உள்ளது) சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவு அலுவலகத்தினால் நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்டத்தில் உள்ள அழகுக்கலை நிபுணர்களினை தவறாது கலந்து கொள்ளுமாறும் மேலதிக விபரங்கள் தேவைப்படின் மாவட்ட சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவின் 0212213861 என்ற இலக்க தொலைபேசியுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (செ - 9)

# தமிழக அரசியல் நிலைவரம்; மத்திக்கு ஆளுநர் அறிக்கை

(சென்னை)

தமிழகத்தின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து ஆளுநர் வித்யாசாகர் ராவ் மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளார்.

தமிழகத்தில் ஆட்சியமைப்புக்கு முயன்று கொண்டுள்ள முதலமைச்சர் பன்னீர்ச்செல்வம் மற்றும் அதிமுக பொதுச் செயலாளர் சசிகலா ஆகியோர் அடுத்தடுத்து நேற்றிரவு ஆளுநரை சந்தித்தனர்.

இந்த நிலையில் தமிழகத்தில் தற்போது நிலவி வரும் அரசியல் சூழ்நிலை குறித்து ஆளுநர் வித்யாசாகர் ராவ் மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளார்.

குடியரசுத் தலைவர் அலுவலகம், பிரதமர் அலுவலகம், உள்துறை அலுவலகம் ஆகியவற்றிற்கு இந்த அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இதையடுத்து ஆளுநர் அறிக்கை கிடைத்துள்ளதாக மத்திய அரசின் உயர் அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில், "உரிய ஆலோசனைக்கு பிறகே முடிவு எடுக்கப்படும். சட்ட மற்றும் அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும்" என குறிப்பிடப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆளுநரிடம் மற்றொரு விரிவான அறிக்கை பெறப்படும் என்று மத்திய அரசின் உயர் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## த.தே.கூ எம்.பிக்களில் ...

வடக்கு கிழக்கு பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கும் சட்டமும் ஒழுங்கும் அமைச்சர் சாகல ரத்நாயக்க, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றைய தினம் காலை 11.30 மணிக்கு அலரிமாளிகையில் நடைபெற்றது.

அதில் கலந்து கொள்வதற்காக 24 பேர் கொண்ட குழுவினர் அலரிமாளிகைக்கு சென்றிருந்தனர். அப்போது குறித்த கலந்துரையாடல் நடைபெறும் இடத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சார்ல்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் மேற்குறித்த அமைச்சர்களுடன் இருந்துள்ளனர்.

அவர்கள் குறித்த கலந்துரையாடலில் கலந்துகொள்ளவுள்ளார்கள் என்பதை அவதானித்த காணாமல் போனவர்களின் உறவினர்கள், தமிழ் மக்கள் பிரதிநிதிகள் எனக்கூறும் எம்.பிகள் இதுவரை எமது கோரிக்கைகளுக்கு எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

எனவே உடனடியாக இந்த இடத்தை விட்டு அவர்கள் வெளியேற வேண்டும். அதன் பின்னர்தான் நாம் கலந்துரையாடலில் ஈடுபடுவோம் என ஆணித்தரமாக கூறினர்.

அவர்களை நாம்தான் அழைத்தோம். அவர்கள் குறித்த கூட்டத்தில் கலந்து கொள்ளட்டும் என மேற்குறித்த அமைச்சர்கள் கோரிக்கை விடுத்தனர். அதையும் ஏற்க மறுத்த உறவினர்கள் இவர்கள் இருந்தால் தாம் வெளியேறுவதாக தெரிவித்தனர். இதை அடுத்து அவர்களின் கருத்தை மறுத்த சுமந்திரன், இங்கு வந்த ஒருசில காணாமல் போனவர்களின் உறவினர்களுக்காக மட்டும் நாம் பேசவரவில்லை, பல்லாயிரக்கணக்கான மக்களின் பிரதிநிதித்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்ற அவசியம் உள்ளதனால் கலந்து கொண்டுள்ளோம். பல்லாயிரக்கணக்கில் காணாமல் போனவர்கள் தொடர்பில் நாம் பேச வந்துள்ளோம். ஒரு சிலரின் சுயலாபத்துக்கு இக்களத்தை பயன்படுத்த முடியாது என தெரிவித்தார்.

பல்லாயிரக்கணக்கான மக்களின் பிரச்சினைகளை பல தடவைகள் பேசிய நீங்கள் ஏன் இதுவரை ஆக்கபூர்வமான முடிவுகள் எவற்றையும் எடுக்கவில்லை. உங்கள் மேல் எமக்கு நம்பிக்கை இல்லை என தெரிவித்து வெளியேறும்படி மீண்டும் அந்த உறவினர்கள் விடாப்பிடியாக கூறியதை தொடர்ந்து அவ் இடத்தை விட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறிய பின்னர் கலந்துரையாடல் ஆரம்பமானது.

குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

காணாமல் போனவர்கள் எங்கே? அவர்கள் தொடர்பான தகவல்கள் எவையும் உள்ளதா? அவர்கள் தொடர்பில் உங்கள் நடவடிக்கைகள் என்ன? அரசியல் கைதிகளின் விடுதலை என்ன நிலையில் உள்ளது என கோரியிருந்தோம்.

அதற்கு அவர்கள் எந்த விதமான பதிலும் வழங்கவில்லை. அன்று வவுனியாவில் உணணாவிரதம் மேற்கொண்ட 17 உறவினர்களுடைய பெயர் விபரங்களை பெற்று அவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள விசேட பொலிஸ் குழு அமைக்கப்பட்டுள்ளது என தெரிவித்தனர்.

அத்துடன் அரசியல் கைதிகளை விடுவிப்பதில் தம்மிடம் அதிகாரம் இல்லை என்றும் அதற்கு பயங்கரவாத தடுப்பு பிரிவினர் முட்டுக்கட்டையாக உள்ளனர் எனவும் தெரிவித்தனர். இது எவையும் எம்மால் ஏற்றுக்கொள்ள கூடிய வகையில் இல்லை

எனவே குறித்த கலந்துரையாடலில் எந்த விதமான இணக்கப்பாடும் எட்டப்படவில்லை. ஏனெனில் கடந்த கால அரசைப்போலவே இந்த அரசும் செயற்பட்டு வருகிறது. இந்த அரசில் நம்பிக்கை வர வேண்டும் எனில் ஒரு வார காலத்துக்குள் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் அல்லது காணாமல் போனவர்களில் ஒரு சிலரை பற்றிய தகவல் ஏனும் எமக்கு தெரியப்படுத்த வேண்டும். இதை செய்யாவிடில் இந்த அரசில் மேலும் எமக்கு நம்பிக்கை இழந்து போய்விடும்.

எனவே ஒரு வார காலத்துக்கு இவை நடைபெறாவிட்டால் ஜெனிவா கூட்டத்தொடர் நடைபெறும் காலப்பகுதியில் பாரிய போராட்டங்களை தொடர்சியான முறையில் முன்னெடுப்போம் என அமைச்சர்களிடம் தெரிவித்துள்ளோம் என தெரிவித்தனர். (செ-9)


வைத்திய சேவை

சிறுநீர்குழாய் (Catheter) மாற்றுதல், இரத்தப்பரிசோதனை, காயங்களுக்கு மருந்து கட்டுதல் வீடு வந்து செய்யப்படும். (7902)

T.P : 0767256691



ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி



Spoken English

Veta Fluency Diploma

ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Mon,Wed,Fri 10 :00a.m<br>Sat, Sun 2.30 p.m. | Mon,Wed,Fri 5:30 p.m<br>Tue, Thu 3.30 a.m.<br>Sat, Sun 2:30 p.m. | Tue, Thu 10.30 a.m.<br>Tue, Thu 03.30 p.m.<br>Sat, Sun 08.30 a.m. | Mon,Wed,Fri 11:00a.m<br>Sat, Sun 2.30 p.m.<br>Tue,Thu 10:00 a.m | Sat, Sun 7.00a.m. |

பல்கலைக்கழகம் செல்லவிருக்கும் மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்

சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்

IELTS | IELTS Life Skills (A1,B1)

திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு 100% சித்தியடைவதற்கான உத்தரவாதம்

DMI COMPUTER EDUCATION

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்

DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (யூனியன் ஹோல் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) கிளிநொச்சி Tel.: 021-228 5655 |



சேவைநலன் பாராட்டும் பிறந்ததின வாழ்த்தும்



உயர்திரு.

முத்து சந்திரன்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் நீண்டகாலம் பணியாற்றி ஓய்வுபெறும் சேவையாளன் உயர்திரு. முத்து சந்திரன் அவர்களின் சேவையினை மனதார வாழ்த்துவதோடு அவரது ஓய்வுகாலத்திலும் சகல சௌபாக்கியத்துடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஊழியர் நலன்புரிச் சங்கத்தினர்
வலி. கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

(4628)

# ஐக்கிய சனசமூக நிலைய பௌர்ணமி விழா இன்று

கலட்டி ஐக்கிய சனசமூக நிலையப் பௌர்ணமி விழா இன்று 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு கரவெட்டியிலுள்ள ஜெயச்சந்திரன் கலையரங்கில் இடம் பெறும்.

தலைவர் சி. ஜி. திருமாலழகன் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக எழுத்தாளரும் பத்திரிகையாளருமான ஏகாம்பரம் ரவி வர்மா கலந்து கொள்ளவுள்ளார்.

இந் நிகழ்வில் உள்ளூர் பாடகர்களின் திறமையை வெளிக் கொணரும் முகமாக கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் கரவை சுப்பர் சிங்கர் நிகழ்வு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# சுகாதார அமைச்சினை ஜனாதிபதி பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்

## கூட்டு எதிரணி வேண்டுகோள்

சுகாதார அமைச்சினை ஜனாதிபதி பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரி தொடர்பில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பரிந்துரைகளை சுகாதார அமைச்சர் வேண்டுமென்றே உதாசீனம் செய்து வந்தால், ஜனாதிபதி சுகாதார அமைச்சின் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டுமென கூட்டு எதிர்க் கட்சியின் தலைவர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பொரளை என்.எம். பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலவச சுகாதாரம் மற்றும் கல்வித்துறைகள் பாரிய சவால்களை எதிர் நோக்கி வருகின்றன. ஜனாதிபதி சுகாதாரத்துறையை ஏற்றுக் கொள்ளத் தவறினால் ஆபத்தான நிலைமை ஏற்படக்கூடும்.

மாலபே தனியார் பல்கலைக்கழக விவகாரத்தில் ஜனாதிபதி நேரடியாக தலையீடு செய்ய வேண்டும். இலங்கையின் சுகாதாரத்துறை தொடர்பில் சுயாதீனமாக வழிகாட்டல்களை செய்யும் ஒரே நிறுவனம் மருத்துவ சபையாகும்.

இந்த நிறுவனத்தின் ஆலோசனைகளை, வழிகாட்டல்களை எவரும் உதாசீனம் செய்ய முடியாது. அரசாங்கத்தின் கடுமை யான நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்தார். (இ-3)


11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 12 04 1953

ஆண்டவன் அடியில் 10 02 2006

அமரர் லோறன்ஸ் அலெக்ஸ்சாண்டர்

கிழக்கில் உதிக்கும் சூரியன் போல்
எமக்கு ஒளிதந்து எம்மைப் பண்படுத்தி
எம்மைச் செழுமையாக்கி
எம்மில் நாம் பயன்பெற வழிகாட்டியாய் - எமக்கு
ஒளி காட்டியாய் நின்ற அப்பாவே
அவனியில் எமக்கு அனைத்துமானீர்
இன்று எமை அந்தரிக்க விட்டு
எங்கே சென்றீர்?

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், சகோதரிகள், பேரப்பிள்ளை.

(7893)



edexcel PEARSON CIOB RICS

After A/Ls...

வெற்றி கதவு
எப்போதும் திறந்துள்ளது...

INTAKE NOW ON



BTEC HNDs

UGC Recognized TVEC Approved

ENG ENGINEERING
Civil & Construction
Telecommunication
Electrical | Electronics

BM MANAGEMENT
Business Management | Marketing
Human Resource Management

IT COMPUTING & SYSTEM DEVELOPMENT

BMS BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY

LLB LAW

QS QUANTITY SURVEYING

BA (Hons) / BSc (Hons) / BEng (Hons) & LLB (Hons)

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

CALL 077 710 2131

Jaffna Campus
16, Point Pedro Road,
Jaffna.

Corporate Office
32, Dharmarama Road,
Colombo 6.
T: 011 258 5391

18 YEARS

HOTLINE : 021 2219910 Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk


# இராசி பலன்

10.02.2017

(தை 28, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு

சதுர்த்தசி முற்பகல் 8.05 மணிவரை

பூசம் முற்பகல் 10.15 மணிவரை

சுபநேரம் 6.34-8.04 மணிவரை

இராகுகாலம் 11.04-12.34 மணிவரை

பூரணை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூராடம் | | சந் |
| சூரி புத | | | ராகு |
| | சனி | குரு | |

**மீனம்** நீண்ட நாட்களாக திட்டமிட்ட காரியமொன்று இன்று கைகூடும், சுப சடங்குகளை செய்யும் எண்ணம் உருவாகும், வியாபார விருத்தியுண்டு.

**மேடம்** வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**இடபம்** விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்** கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி சமாளிப்பீர்கள்,வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, ஆன்மீக சிந்தனை மேலாங்கும் நாள்.

**கும்பம்** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், ஆரோக்கியமான நாள்.

**கடகம்** இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பயணங்கள் பலன் தரும்.

**மகரம்** இறை வழிபாட்டால் இனிமை சேரும் நாள், குடும்பத்தினரிடையே விட்டுக்கொடுத்து செல்வது நல்லது, அடிப் படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**சிம்மம்** காரியங்களை எடுக்க அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், சிந்தனை மிகுதியான நாள்.

**தனுசு** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, உங்கள் செயற்பாடுகளில் பிறர் குறை கண்டு கூறலாம், தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்.

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**துலாம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் முன்னேற்றகரமாக அமையும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கன்னி** ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணை புரியும் நாள், உறவினர்களின் வருகையால் குடும்ப மகிழ்ச்சி கூடும், போசன சுகமுண்டு.

# இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்க வடக்கு கடற்றொழிலாளர்கள் கடும் எதிர்ப்பு

## அமைச்சர் அமரவீரவிடம் நேரில் எடுத்துரைப்பு

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் படகுகளை நல்லிணக்க அடிப்படையில் விடுவிக்க வேண்டும் என்ற கடற்றொழில் அமைச்சரின் கோரிக்கையை ஏற்க மறுத்த வடமாகாண கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள், இது தொடர்பாக தமது கடும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளனர்.

மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கும் வடமாகாண கடற்தொழிலாளார் சங்க,சமாச,சம்மேளன பிரதிநிதிகளுக்கும் இடையிலான அவசர கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள மீன்பிடி அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

அமைச்சரின் வேண்டுகோளுக்கிணக ஏற்பாடு செய்யப்பட்ட இக் கலந்துரையாடலின் போதே மேற்குறித்த கோரிக்கைகளை அமைச்சர் முன்வைத்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்ட மீனவ சங்க பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 2015, 2016 ஆம் ஆண்டுகளில் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களிடம் இருந்து இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விடுவிப்பதற்கு கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் முன்வர வேண்டும் என்ற கோரிக்கைகளை அமைச்சர் எம்மிடம் முன்வைத்திருந்தார்.

அதாவது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதனால் நல்லிணக்க அடிப்படையில் குறித்த படகுகளை விடுவிக்க வேண்டும் என்றும் அத்துடன் குறித்த படகுகளை நிறுத்துவதற்கு போதிய இடப்பற்றாக்குறை காணப்படுவதுடன் பழுதடைந்தும் வருகின்றன என தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சரின் கோரிக்கையை நாம் ஏற்கமறுத்ததுடன் எமது எதிர்ப்பையும் தெரிவித்துள்ளோம்.

ஏனெனில் இந்திய மீனவரின் அத்துமீறலால் அதிகளவில் வடமாகாண மீனவர்களே பாதிக்கப்பட்டு வருகின்றனர். குறித்த விடயம் தொடர்பாக பலமுறை இரு நாடுகளுக்கிடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போதும் எந்தவித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை.

அத்துடன் இந்திய மீனவரின் தொடர்ச்சியான அத்துமீறலால் நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு, ஏழாலை, காரைநகர், வடமராட்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் தொடர்சியாக பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அத்துமீறும் மீனவர்களை கடற்படையினர் கைது செய்யும் நடவடிக்கையும் குறைவடைந்து வருகிறது.

இந்த நிலையில் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விடுதலை செய்வது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம், குறித்த படகுகளை அரசுடமையாக்கி வடபகுதி மீனவர்களுக்கு வழங்கும் நடவடிக்கையை அமைச்சர் மேற்கொள்ள வேண்டும்.அத்துடன பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும் எனவும் அமைச்சரிடம் கேட்டுக் கொண்டோம்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் , நட்டஈடு வழங்குவது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும், கைப்பற்றப்பட்ட படகுகளை அரசுடமையாக்கும் சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அது நடைமுறைக்கு வருவதற்கு கால தாமதமாகும் எனவே தற்போது, கைப்பற்றியுள்ள படகுகளை இந்திய அரசிடம் ஒப்படைக்க இணக்கம் தெரிவிக்க வேண்டும் எனவும் ஏனையவர்களுடன் இது தொடர்பில் பரிசீலித்து அடுத்த மாதம் முடிவை அறிவிக்குமாறும் கேட்டுக்கொண்டார். அமைச்சரின் கருத்துக்களை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை இருப்பினும் ஏனைய மீனவர்களுடன் இது தொடர்பில் கலந்துரையாட வேண்டியுள்ளது.

அமைச்சின் இவ்வாறன நடவடிக்கைகள் வேதனையளிக்கிறது.ஏனெனில் குறித்த படகுகளை விடுவித்தால் இந்திய மீனவரின் அத்துமீறல் மேலும் அதிகரிக்கும் அதனால் எமது மீனவ மக்களின் வாழ்வாதாரம் அழிந்து போகும் என தெரிவித்தனர்.

மேற்குறித்த கலந்துரையாடலில் வடமாகாணத்திலுள்ள கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஆகிய கடற்றொழிலாளர் அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (இ-9)

# நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது

## ஜனாதிபதி மைத்திரி பெருமிதம்

(கொழும்பு)

முன்னொருபோதும் இல்லாத வகையில் நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களை விடவும் நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே நாளஒன்றுக்கு மூன்று நான்கு போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரி மற்றும் வில்பத்து பிரச்சினைகள் கடந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டவை.

இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பொது வேட்பாளராக போட்டியிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்திருந்த சிவில் அமைப்புச் செயற்பாட்டாளர்கள் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்ததுடன், தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து இந்த சந்திப்பில் பேசப்பட்டுள்ளது.

19ம் திருத்தச் சட்டத்தின் ஊடாக ஈட்டப்பட்ட வெற்றியைப் போன்றே எதிர்காலத்தில் அனைவரும் இணைந்து நாட்டுக்கு வெற்றியை ஈட்டிக் கொடுக்க வேண்டுமென சிவில் அமைப்பு பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர். (இ-3)

# தொண்டராசிரியர்களுக்கு முக்கிய கலந்துரையாடல்

யாழ். மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான மிகவும் அவசரமானதும் முக்கியமான துமான கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 10. மணிக்கு ஆசிரியகுளம் புதிய உயர்கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அனைத்து தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் இதன்போது நேர்முகத் தேர்விற்கு தகுதியானவர்களின் பெயர்ப்பட்டியலை பார்வையிட முடியுமென யாழ்.மாவட்ட பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (இ

# குடும்பப்பெண் உயிரிழப்பு

மோட்டார் சைக்கிள் மோதுண்டதில் படுகாயமடைந்த குடும்பப்பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

குப்பிளான் தெற்கை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான மகாலிங்கம் பொன்றோஸ் (வயது- 66) என்ற பெண்ணே உயிரிழந்தார்.

இவர் கடந்த 4 ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் குப்பிளான் சந்திக்கு அண்மையில் நடந்து சென்றுள்ளார்.

இதன்போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளியதில் அந்த இடத்திலேயே மயக்கமடைந்து விழுந்துள்ளார். உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

தலையில் படுகாயமடைந்த இவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். குறித்த பெண்ணை மோட்டார் சைக்கிளால் மோதிய நபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ-9)

# சபாநாயகரிடம் பிரதமர் புகார்

(கொழும்பு)

ஊடகங்களில் பிழையான செய்தி வெளியிடப்படுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

சிங்கள பத்திரிகை ஒன்றில் பிரசுரமான செய்தியினால் தமது உரிமை மீறப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று தொடர்பில்லையென செய்திகளை குறித்த ஊடகம் வெளியிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த பிழையான செய்திக்கு ஊடகங்கள் வழங்கிய முன்னுரிமை அதனை திருத்தி வெளியிடும் போதும் வழங்கப்பட வேண்டுமென கோரியுள்ளார்.

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கும், நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக்க அனுரத்த ஹேரத்திற்கும் இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் தொடர்பில் பிழையான செய்தி வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (இ-3)

# சுற்றுலாத்துறை வேலைவாய்ப்பு குறித்து இளையோருக்கு விழிப்புணர்வு இல்லை




(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள இளைஞர்,யுவதிகளுக்கு சுற்றுலாத்துறையில் அதிகளவான வேலைவாய்ப்புக்கள் காணப்படுகின்ற போதிலும் அது தொடர்பான விழிப்புணர்வு எமது இளைஞர்கள் மத்தியில் குறைவாகவுள்ளது என வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் செயலாளர் சி.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தற்போது வடமாகாணத்தில் புதிய பல ஹோட்டல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் குறித்த ஹோட்டல்களில் தொழில் புரிவதற்கு பல இளைஞர், யுவதிகள் தேவைப்படுகிறார்கள்.

பல தொண்டு நிறுவனங்கள் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கென வறுமைக் கோட்டுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு இலவசமான ஹோட்டல் துறை கல்வியை வழங்குவதற்குத் தயாராகவுள்ளன.

ஆனால், இது தொடர்பான சரியான விழிப்புணர்வு எம் மக்கள் மத்தியில் இன்னமும் சென்றடையவில்லை. இதன் காரணமாக வடமாகாணத்திலுள்ள ஹோட்டல்களில் தொழில்களில் ஈடுபடுவதற்கு அதிகமான வெற்றிடங்கள் நிலவி வருகிறன. இந்த நிலை மாற வேண்டும். பல இளைஞர், யுவதிகள் படித்து விட்டு வேலைவாய்ப்பில்லாமல் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் இவ்வாறான தொழில்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள அவர்கள் முன்வர வேண்டும்.

ஏற்கனவே, வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் மூலம் பயிற்சி பெற்ற நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் வடக்கு மாகாணத்திலுள்ள ஹோட்டல்களில் பணியாற்றி வருகிறார்கள்.

வடமாகாணத்தில் சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள பலரும் வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் அங்கத்தவர்களாக இல்லாதிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் எங்கள் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

எங்களுக்கு நிரந்தரமானதொரு அலுவலகம் இல்லை. எனினும், நாங்கள் தற்போது யாழ். வணிகர் கழகத்துடன் இணைந்து செயற்பட்டு வருகிறோம். எங்களது தற்காலிக அலுவலகம் தற்போது இலக்கம்-88, மூன்றாம் குறுக்குத் தெருவில் இயங்கி வருகிறது.

எங்கள் ஒன்றியத்தில் அங்கத்தவர்களாகவுள்ள முதலீட்டாளர்களுக்குப் பல நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் எம்மால் முடிந்த உதவிகளை வழங்கி வருகிறோம். ஆகவே, ஏனைய சுற்றுலாத்துறை முதலீட்டாளர்களும் எம்முடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் பல நன்மைகளைப் பெற முடியும்.

கடந்த 30 வருட கால யுத்தத்திற்குப் பின்னர் ஏனைய துறைகள் போன்று வடக்கில் சுற்றுலாத்துறையையும் அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையிருப்பதால் வெளிநாட்டு வாழ் முதலீட்டாளர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் அவர்களுக்கான உரிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் நாம் தயாராகவிருக்கிறோம் என மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் வடமாகாண சுற்றுலா ஒன்றியத்தின் தலைவர் எஸ்.யசோதரன் மற்றும் சர்வோதயத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் இ.யுகேந்திரா ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துக்கள் தெரிவித்தனர். (இ-9)

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும்

# கம்பன் விழா 2017

(கொழும்பு) 10.02.2017 (வெள்ளிக்கிழமை)

**இரண்டாம் நாள் நிகழ்வு**
**காலை 9.30 மணி**
**மங்கல விளக்கேற்றல்**
திரு.கே.ஜெகதீசன் தம்பதியர்
(உபதலைவர், விவேகானந்த சபை)
**கடவுள் வாழ்த்து**
திருமதி. ஹம்சானந்தி தர்மபாலன்
**தலைமையுரை**
திரு.தம்பு.சிவா
(தலைவர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்)
**தொடக்கவுரை**
திரு.என்.நஜுமுல் ஹுசைன்
(தலைவர், வலம்புரி கவிதா வட்டம்)
**தனியுரை**
புலவர் தா.கு.சுப்பிரமணியம்
**பொருள்**
**'மாறியது நெஞ்சம்'**
**இலக்கிய ஆணைக்குழு**
ஆணையாளர்: பேராசிரியர் வி.அசோக்குமாரன்
பொருள்:
**'யாரது முயற்சி அதிகம் வலியது?'**
கைகேயியை மாற்றிய கூனியின் முயற்சியே!
-ஜெ.ஜெய்ராம்
தசரதனிடம் வரம்பெற்ற கைகேயியின் முயற்சியே!
-ந.விஜயசுந்தரம்
இராமனை நெறி செய்த சடாயுவின் முயற்சியே!
-சோ.முரளி
இலக்குவனைத் தடுத்த தாரையின் முயற்சியே!
-ஸ்ரீ.பிரசாந்தன்
இராவணனை வீழ்த்திய சூர்ப்பனகையின் முயற்சியே!
-ரி.ரெங்கராஜன்

**மாலை 5.30 மணி**
**மங்கல விளக்கேற்றல்**
திரு.மு.கந்தவேள் தம்பதியர்
(அதிபர், பெற்றா எசன்ஸ்)
**கடவுள் வாழ்த்து**
திரு.ம.தயாபரன்
**தலைமையுரை**
கௌரவ சி.தவராசா (வடமாகாண சபை, எதிர்க்கட்சித் தலைவர்)
**தொடக்கவுரை**
கௌரவ எம்.ஏ.சுமந்திரன்
(பாராளுமன்ற உறுப்பினர்)
**கவியரங்கம்**
தலைவர்: கவிஞர் சிதம்பரப்பிள்ளை சிவகுமார்
பொருள்: **வேற்றுமை ஒழியக் கம்பன் விளம்பிடும் செய்தி கேட்போம்**
யாரொடும் பகை கொள்ளலன் என்றபின் - நாக.சிவசிதம்பரம்
சிறந்தது போரே என்றான் - த.ஜெயசீலன்
பொறையொடும் பொருந்தி வாழ்தல் - அலி அக்பர்
நந்தனன் நினக்கு நானே தலைமை - த.சிவசங்கர்
தூதுவன் ஒருவன் தன்னைத் தூண்டி - ஸ்ரீ.பிரசாந்தன்

**இன்று சந்திக்கும் இவர்கள்**

| | |
|---|---|
| வால்மீகி | - வி.அசோக்குமாரன் |
| குலசேகர ஆழ்வார் | - தா.கு.சுப்பிரமணியம் |
| கம்பர் | - இ.ஜெயராஜ் |
| சந்திப்போர் | |
| பரதன், இலக்குவன் | - அ.வாசுதேவா, ச.லலீசன் |
| வாலி, சுக்கிரீவன் | -இரா.செல்வவடிவேல் ஐ.கதிர்காமசேகரம் |
| சூர்ப்பனகை, கூனி | - எஸ்.சிவலிங்கராஜா, எம்.எஸ். ஸ்ரீதயாளன் |
| இராவணன், தசரதன் | - செ.சொர்ணசீலன், லோ. பிரசன்னவருண் |

சீடர்கள்: கோ.கஜதன், எஸ்.கஜன், எஸ்.ரவி, ஏ.எச்.ஜலால், செ.மதுரகன்


**கொழும்பு கம்பன் கழகம்**

# ஒரு புலித் தொப்பி; மூவருக்கும் மறியல்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரின் இலட்சினை பொறிக்கப்பட்ட தொப்பியொன்றை லண்டனுக்கு அனுப்ப முயன்ற குற்றச்சாட்டுத் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுப்பில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் மூவரினதும் விளக்கமறியல், இம்மாதம் 22ஆம் திகதிவரை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் நீடிக்கப்பட்டது.

பிணை மனுத் தொடர்பிலான நிலைப்பாட்டை அறிவிக்குமாறு, பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினருக்கு, கொழும்பு நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் அருணி ஆட்டிகல, கட்டளையிட்டிருந்தார். அதற்கமைய, தமது நிலைப்பாடு தொடர்பான அறிக்கையை பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் சமர்ப்பித்தனர்.

அறிக்கை தொடர்பில் ஆராய்ந்து, பிணை வழங்குவது தொடர்பில் 22ஆம் திகதி அறிவிக்கப்படும் என உத்தரவிட்ட நீதவான், சந்தேகநபர்களான ஜேசுரத்னம் ஜெகசம்சன், மகாதேவா பிரசன்னா மற்றும் சுப்பிரமணியம் நகுலராசா ஆகியோரின் விளக்கமறியலையும் நீடித்து உத்தரவிட்டார்.



சந்தேகநபரான நகுலராசா, அரச புலனாய்வுச்சேவையில் இருந்தவர் எனவும் தற்போது அவர், 9 மாதங்களாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என பிணை மனுவில் கோரப்பட்டிருந்தது.

நாரஹேன்பிட்டியிலுள்ள விரைவு அஞ்சல் (கொரியர்) நிறுவனத்தினூடாக, புலிகளின் இலட்சினை பொறிக்கப்பட்ட தொப்பியொன்றை மிகவும் சூட்சுமமான முறையில் பொதியொன்றுக்குள் மறைத்து வைத்து, அதனை லண்டனுக்கு அனுப்ப முயன்றமை தொடர்பில் விசாரிக்கப்பட்டு, வவுனியாவைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

அதன் பின்னர், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து, சுப்பிரமணியம் நகுலராசா என்பவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# ஷஷி வீரவன்சவின் வழக்குத் திகதிகள்



(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவின் மனைவியான ஷஷி வீரவன்ச மீதான வழக்கை, மே மாதம் 25, 30, 31ஆம் திகதிகளில் விசாரணை செய்வதற்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், நேற்று முன்தினம் திகதிகளை குறித்தது.

போலிப் பெயர் மற்றும் போலியான பிறந்த தினத்தைக் கொண்டு, ஷஷி வீரவன்ச, இரண்டு அடையாள அட்டைகளை எடுத்துள்ளமை, அவற்றைக் கொண்டு இராஜதந்திர மற்றும் சாதாரண கடவுச் சீட்டுக்களை பெற்றார் ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

ரணசிங்ககே ரண் முதது, முதியன்சலாகே ஷேஹசா, உதயகாந்தி மற்றும் ரணசிங்கே ரண் முத்து, முதியன்சலாகே ஷிரஷா, உதயகாந்தி ஆகிய பெயர்களில் இரண்டு கடவுச்சீட்டுகள் பெறப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்ட அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பான வழக்கு, கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க பண்டார முன்னிலையில், நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிணை வழங்கப்பட்ட போது, மாதாந்தம் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு ஆஜராக வேண்டும் என, ஷஷி வீரவன்சவுக்கு உத்தரவிடப்பட்டிருந்தாக சிரேஷ்ட அரச சட்டத்தரணி திலீப பீரிஸ் மன்றின் கவனத்துக் குக் கொண்டுவந்தார்.

நகர் வுப் பத்திரமொன்று தாக்கல் செய்யப்பட்டு அந்த உத்தரவு மாற்றப்பட்டதாகவும் நீதிமன்றப் பதிவாளர் முன்னிலையில் மாதாந்தம் ஆஜராக வேண்டும் என, உத்தரவிடப்பட்டிருந்ததாகவும் கூறிய அவர், அந்த உத்தரவை இரத்துச் செய்யுமாறு கோரினார்.

இதனையடுத்து, வழக்கு விசாரணைக்கு திகதிகளை நிர்ணயித்த நீதவான், வழக்கை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (இ-3)


**தேசிய அபிவிருத்தி லொத்தர்**

மகாஜன சம்பத, அபிவிருத்தி அதிர்ஷ்டம், வாசனா சம்பத போன்ற லொத்தர் சீட்டுக்களையும் மற்றும் உடனடி அதிர்ஷ்டலாப டிக்கெட்டுக்களையும் லொத்தர் கூடுகளில் இருந்து விற்பனை செய்யக்கூடிய விற்பனை உதவியாளர் தேவை.
கீழ்க் குறிப்பிடப்பட்ட இடங்களில் (திருநெல்வேலிச் சந்தை, யாழ். நகர், கொக்குவில், பூநாறி மடத்தடி)
சம்பளம் மற்றும் கொமிஷன் அடிப்படையில் வழங்கப்படும்.
வயதெல்லை: (40 -65)- ஆண்கள்
லொத்தர் அலுவலர்களுக்கு கணனி மற்றும் சிட்டை எழுதுநர் தேவை. (பெண்கள்)
தொடர்புகளுக்கு: 077 438 9864 (7894)



இவர்களுக்கு **மணமகள் தேவை** — **கல்யாண மாலை** — இவர்களுக்கு **மணமகன் தேவை**

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:A/L/தனியார்தொழில<br>தொ.இ: B/6900 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 12<br>உயரம்: 5'4"<br>தகைமைதொழில்:பொறியியலாளர்<br>தொ.இ: G/4204 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 31செவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:BSc Eng/ பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/4028 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 30 செவ் 12 இல்<br>தகைமைதொழில்:HNDM<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4216 |
| பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 19<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில<br>தொ.இ: B/5409 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 17<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:HNDIT, BIT<br>தொ.இ: G/4232 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 42 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:BSc, Mphill/ பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும<br>தொ.இ: B/5827 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 25 செவ் 2 இல<br>உயரம்: 158cm<br>தகைமைதொழில்:பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4240 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com**
**குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.**
**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**

# பிரதமர் விரைவில் காணிகளை விடுவிப்பதாக கூறிய போதும் மக்கள் போராட்டம் தொடர்கிறது



(பனிக்கன்குளம்)

அரசாங்கக் காணிகளை இராணுவத்தினரின் செயற்பாடுகளுக்குபெற்றுக்கொண்டு பொதுமக்களின் காணிகளை விரைவில் விடுவிப்பதற்குபரிசீலனை மேற்கொள்ளவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரதமரின் வாக்குறுதி செயல் வடிவம் பெறும் வரை எமது போராட்டம் தொடருமென போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி 7 ஆவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களில் 5 பேர் அடங்கிய குழுவினர் நேற்று முற்பகல் 10 மணியளவில் பிரதமரை அலரிமாளிகையில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இச் சந்திப்பின் போதே விரைவில் இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள பொது மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் சம்மதம் தெரிவித்ததாகவும் எனினும் காணிகள் விடுவிக்கப்படும் வரை போராட்டம் தொடருமெனவும் தாங்கள் தெரிவித்ததாகவும் நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர். நேற்றைய சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)




# கேப்பாப்பிலவு போராட்டத்துக்கு தென்னிலங்கையிலிருந்து வந்த சிவில் அமைப்புக்கள் ஆதரவு

(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு பிலவுக் குடியிருப்பு விமானப்படை முகாமிற்கு முன்பாக கடந்த 31 ஆம் திகதி தொடக்கம் நேற்று 10 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின் காணி விடுப்பு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் அவர்களது நிலைப்பாடுதொடர்பில்அறிந்து கொள்வதற்கும் தென்னிலங்கையில் இருந்து நேற்று காலை பல்வேறுபட்ட சிவில் அமைப்புகளைச் சார்ந்தவர்களும் ஊடகவியலாளர்கள் அடங்கியகுழுவொன்றும் போராட்டம் நடைபெறுகின்ற இடத்திற்கு வருகைதந்து அவர்களது போராட்டத்திற்கு ஆதரவு வழங்கினர்.



அத்தோடு மக்களின் காணி விடுவிப்பு போராட்டம் குறித்தும் வருகை தந்த குழுவினர் அம் மக்களுடன் கலந்துரையாடி யுத்தத்தின் போது சந்தித்த இழப்புகள் தொடர்பிலும் இன்று வரை தமது சொந்தக் காணிக்குச் செல்லாத நிலையில் கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமம் உள்ளிட்ட பகுதிகளில் வாழ்கின்ற நிலையில் அனுபவிக்கும் துன்பங்கள் தொடர்பிலும் வாழ்வாதாரத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பிலும் அவர்களை கேட்டறிந்ததுடன் இவர்களின் உண்மை நிலைப்பாடுகள் தொடர்பில் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்த சகோதர மொழி ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பிலும் ஈடுபட்டனர்.

தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்ட மக்களின் நிலைப்பாடு தொடர்பில் தங்களின்பகுதியில்சென்றுதெளிவு படுத்துவதாகவும் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்தவர்கள் தெரிவித்தனர்.

தென்னிலைங்கையிலிருந்து வருகை தந்தவர்களில் ஒருவர் ஊடகங்கங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், மக்களின் வாழ்விடங்கள், மனித உரிமைகள்தொடர்பாகவேலை செய்கின்ற ஒரு அணியினரே நாம் எனவும், இன்று தமது சொந்த நிலத்தை விடுவிக்கக் கோரி போராட்டம் செய்யும் மக்களின் நிலைப்பாடு நியாயமானதொன்றாகும்.

இம்மக்கள் தமது சொந்தக் காணியில் குடியேறி தாம் இதுவரை மேற்கொண்ட தொழில்களைச் செய்வதற்கு உரித்துடையவர்கள். அந்த வகையிலேயே இவர்களுடைய போராட்டத்திற்கு நாம் ஆதரவு வழங்குகின்றோம்.

அதாவது தமிழ் மக்களுடைய வாக்குகளின் ஊடாகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த நல்லாட்சி அரசாங்கத்தை பொறுப்பேற்றார்.

''தமிழ் மக்களின் வாக்குகள் மூலமாகவே தான் உயிர் வாழ்வதாகவும் அவ்வாறு கிடைக்கவில்லையெனில் தான் ஆறு அடி மண்ணுக்குள் சென்றிருப்பேன்'' என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

அந்தவகையிலேயே ஜனாதிபதி காணி விடுவிப்பு போராட்டத்தில் பங்கேற்றுள்ள மக்களின் சொந்தக் காணிகளை விடுவிக்கும் பொறுப்புள்ளது.

ஆதலால் இம் மக்களின் காணிகளை வழங்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இந் நிலையிலேயே நாம் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதாகவும் தெரிவித்தார். (2-281-310)







காணிப் பிரச்சினை தொடர்பாக அலரிமாளிகையில் நடைபெறும் கலந்துரையாடலுக்கு வருமாறு அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட அழைப்பை போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்கள் நிராகரித்துள்ளனர். இந்த நிலையில் அவர்கள் தமது நில மீட்பு போராட்டத்தை 10 ஆவது நாளான நேற்றும் முன்னெடுத்தனர். (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வடபகுதிக்கான தனியார் போக்குவரத்து; உள்ளூர்,வெளியூர் சேவைகள் ஸ்தம்பிதம்

## பயணிகள் நேற்று கடும் சிரமத்துக்குள்ளாகினர்

வடபிராந்திய தனியார் போக்குவரத்து சேவையினர் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதன் காரணமாக வடபகுதிக்கான உள்ளூர் மற்றும் மாவட்டங்களுக்கிடையிலான தனியார் போக்குவரத்து சேவைகள் முழுமையாக ஸ்தம்பிதமடைந்தது.



மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் உருவப்பொம்மைகள், கொடும்பாவி எரிக்கப்படுவதை கண்டித்தும், அண்மையில் இலங்கை போக்குவரத்து சபையினரால் வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரின் உருவப்பொம்மை எரியூட்டப்பட்டதைக் கண்டித்தும் வடபிராந்திய தனியார் பேருந்து உரிமையாளர்கள், நடத்துநர்கள், சாரதிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். யாழில் கண்டன ஊர்வலமும் நடைபெற்றது.

இந்நிலையில் வவுனியா தனியார் பேருந்து சாரதிகள், நடத்துநர்கள், உரிமையாளர்களும் பணிப்புறக்கணிப்பில் நேற்றையதினம் ஈடுபட்டிருந்தமையால் புதிய பேருந்து நிலையம் வெறிச் சோடி காணப்பட்டது. அதேவேளை அலுவலக மற்றும் பாடசாலை நாள் என்பதால் உள்ளூர் சேவைகள் இடம்பெறாமையால் பலரும் கடும் சிரமங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

இதே வேளை, வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் மூன்று பேருந்துகளில் யாழில் இடம்பெறவுள்ள எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றனர். (2-250)

# இரணைமடு நீர்ப்பாசனத் திட்ட முகாமைத்துவ அலுவலகம் திறப்பு



(ப்ரந்தன்)

கிளிநொச்சி இரணைமடு பாரிய நீர்ப்பாசன திட்ட முகாமைத்துவ அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. கிளிநொச்சி கோவிந்தன் கடை சந்தியில் அமைந்துள்ள மேற்படி அலுவலகம் இபாட் திட்டத்தின் இரணைமடு விவசாயிகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 12.7 மில்லியன் ரூபா செலவில் திட்ட முகாமைத்துவ அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. (2-312)

# சுகாதார விதிமுறைகளை மீறி இயங்கிய உணவகங்கள் சிக்கின

## எச்சரிக்கப்பட்டு 7 உரிமையாளர்களிடமிருந்து குற்றப்பணம் அறவீடு

(மல்லாவி )



ஏ - 9 வீதியிலுள்ள மாங்குளம் பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் திருமுறிகண்டி, மாங்குளம் ஆகிய இடங்களில் இயங்கி வரும் சிற்றுண்டிச்சாலைகள், உணவகங்கள் மற்றும் நடமாடும் உணவு வண்டி ஆகியவற்றின் மீது ஒட்டுசுட்டான் பிரதேச சுகாதார பரிசோதகர்களினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனை நடவடிக்கையின் போது, நடமாடும் உணவு விற்பனை வண்டி உட்பட 7 உணவகங்கள் சுகாதார விதிமுறைகளை மீறி சுகாதாரமற்ற முறையில் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தமை விற்பனை செய்தமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை ஆகியன தொடர்பில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மாங்குளத்தில் நடமாடும் உணவு விற்பனை வண்டி உட்பட மூன்று உணவகங்களும் திருமுறிகண்டி, பிள்ளையார் ஆலய சுற்றாடல் பகுதியில் அமைந்துள்ள 4 உணவகங்களுமாக மொத்தம் 7 உணவகங்கள் சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாங்குளம் பொது சுகாதார பரிசோதகர் வி.விஜயஜங்கரனினால் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் துணுக்காய் ஆரம்ப நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினமே குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது உணவக உரிமையாளர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து 7 உரிமையாளர்களுக்கும் மொத்தம் 86 ரூபா குற்றப்பணம் விதித்து தீர்ப்பை நீதிபதி வழங்கியதுடன் 14 நாட்களுக்குள் உணவகங்களை புனரமைப்புச் செய்து பொது சுகாதார பரிசோதகர்களின் ஒப்புதலுடன் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து அனுமதி பெற்ற தன்பின்னர் உணவகங்களை மீள திறக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு 14 நாட்களுக்குள் அனுமதி பெறத் தவறும் பட்சத்தில் உணவகங்களின் வியாபார அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் என நீதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார். (2-15)

# காணி விடுப்பு போராட்டத்திற்கு ஆதரவாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் வவுனியாவில் இன்று கண்டனப் போராட்டம்

(மல்லாவி )

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களும் மற்றும் புதுக்குடியிருப்பு மக்களினாலும் முன்னெடுக்கப்பட்டு வரும் காணி விடுவிப்புப் போராட்டத்திற்கு ஆதரவாக வவுனியா மாவட்ட "சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு" இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தமது ஆதரவைத் தெரிவித்து கண்டன போராட்டத்தை வவுனியா நகரப் பகுதியில் அரச பேருந்து நிலையம் முன்பாக நடத்தவுள்ளதாக அவ்வமைப்பின் வவுனியா மாவட்டச் செயலாளர் சு.டோன் பொஸ்கோ அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

யுத்தம் முடிவடைந்து ஏழு வருடங்கள் கடந்த போதிலும் குடிமக்களின் காணிகள் மீளவும் படையினர் திருப்பி கையளிக்கவில்லை. இதனால் மக்கள் தமது காணிகளை மீட்பதற்காக பல்வேறு பிரதேசங்களிலும் பல்வேறு வகையான போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள்.

இந் நிலையில் ஆட்சியில் உள்ள நல்லாட்சி அரசானது,

"காணிகளை மீள வழங்குவோம்"

அரசியல் கைதிகளை விடுவிப்போம்"

"பயங்கரவாத சட்டத்தை நீக்குவோம்"

"காணாமல் போனோருக்கு பதில் கூறுவோம்"

"தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்போம்."

"மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்கு வழி செய்வோம்"

எனப் பல வாக்குறுதிகளை வழங்கி பதவிக்கு வந்து இரண்டு வருடங்கள் கடந்த போதும் மக்களுக்கு வழங்கிய 'வாக்குறுதிகளை நிறைவேற்றாது மக்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்து வருகின்றது. தனது வாக்குறுதிகளை நிறைவேற்றப் பின்னடிக்கின்றது.

அரசாங்கம் இம் மக்களின் கோரிக்கையை ஏற்று நிலத்தை அம்மக்களிடமே மீளவும் கையளிக்க வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

எனவே இம்மக்களின் கோரிக்கையை வலியுறுத்தி கவனயீர்ப்புப் போராட்டம் ஒனறினை இன்று வெள்ளிகிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா நகரப் பகுதியில் உள்ள அரச பேருந்து நிலையம் முன்பாக நடத்த தீர்மானித்துள்ளோம்.

இந்த அகிம்சை ரீதியான போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மக்களின் போராட்டத்திற்கு ஆதரவான அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், முற்போக்கு சக்திகள், தொழிற்சங்கங்கள், பொது மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)







கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நேற்று முன்தினம் நடைபெற்றபோது... (படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

# சுற்றுவட்டப் பாதைகளை அமைக்க நடவடிக்கை எடுங்கள்

(மல்லாவி)

கிளிநொச்சி நகரப்பகுதியிலே உள்ள டிப்போச்சந்தி மற்றும் கரடிப்போக்குச்சந்தியை அண்மித்த பகுதிக்கு இடையில் சுற்றுவட்டப் பாதைகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட நகர வர்த்தகர்கள்,பொது மக்கள் உட்பட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சிவஞானம் சிறீதரன் ஆகியோர் கோரிக்கை அடங்கிய கடிதங்களை துறை சார்ந்த அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி நகரப்பகுதி ஊடாக செல்லும் ஏ-9 வீதியில் டிப்போச்சந்தி முதல் கரடிப்போக்குச் சந்தி வரைக்குமான பகுதி அதிக வாகன நெரிசல் கொண்டதுடன் மக்கள் நெரிசல் உள்ள பகுதியாகக் காணப்படுகின்றது.

இதனை கருத்தில் கொண்டு கிளிநொச்சி நகரப்பகுதி ஊடாக செல்லும் ஏ-9வீதியில் டிப்போச் சந்திப் பகுதியில் சுற்றுவட்ட பாதை ஒன்றை அமைத்து மின் விளக்குகள் பொருத்தப்பட வேண்டும். அதே வேளை கரடிப்போக்கு சந்திக்கும் கந்தசுவாமி கோவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் முடக்கு திரும்பல் ஒன்று அமைக்கப்பட வேண்டும். கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந் நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும் இதனை வலியுறுத்தி எழுத்து மூலமாக கடிதங்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். (2-15)

# வவுனிக்குளத்தின் நீர்மட்டம் 7 அடியாகக் குறைந்துள்ளது

## நீரை சிக்கனமாகப் பயன்படுத்துங்கள் என விவசாயிகளுக்கு வேண்டுகோள்



(மல்லாவி)

முல்லைத்தீவு வவுனிக் குளத்தின் கீழ் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள விவசாயிகள் நீரைச்சிக்கனமாக பயன்படுத்துமாறு வவுனிக்குள நீர்ப்பாசனப் பொறியியலாளர் பாக்கிராஜா விகர்னன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு வவுனிக் குளத்தின் கீழ் தற்போது ஆறாயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது நிலவும் கடும்வரட்சி காரணமாக 24 அடி கொண்ட வவுனிக்குளத்தின் நீர்மட்டம் வவுனிக் குளத்தின் நீர் மட்டம் தற்போது 7 அடியாக வுள்ளது.

இந்நிலையில் குளத்தின் நீரைச் சிக்கனமாக பயன்படுத்தி விவசாயச் செய்கைளைப் பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்குமாறு வவுனிக்குள பொறியியலாளர் பா.விகர்னன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் வவுனிக் குளத்தில் இருந்து பயிர்ச் செய்கை நிலங்களுக்காக நீர் விநியோகங்களை மேற்கொள்வதற்கு இடது வலது கரை மத்திய துருசு ஆகியவற்றிற்கு நீர் விநியோகம் மேற்கொள்ளும் குளத்தின் நீர் மட்டம் குறைவடைந்துள்ளதால் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நீர் விநியோக வாய்க்கால்கள் குளத்தின் உட்பகுதி பைக்கோ இயந்திரம் கொண்டு நேற்று முன்தினம் தூர்வை மண் கொண்டு இவ்வாறு அகற்றப்படுவதனால் சுமார் ஆறாயிரம் ஏக்கருக்கும் இரண்டு தடவைகள் நீர் விநியோகம் மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (2-15)

# 15 அரச நிறுவனங்களால் நாட்டுக்கு 110 பில். நட்டம்

## கோப் குழுவின் அறிக்கையில் அதிர்ச்சி

(கொழும்பு)

**அரச நிறுவனங்கள் தொடர்பான அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) விசாரணை அறிக்கையை சபைக்கு நேற்று முன்தினம் சமர்ப்பித்த அக்குழுவின் தலைவர் சுனில் ஹந்துன் நெத்தி எம்.பி.இந்த நிறுவனங்களினால் நாட்டுக்கு சுமார் 110 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.**

2016ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியில் இருந்து ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் விசாரிக்கப்பட்ட 15 நிறுவனங்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய கோப் குழு அறிக்கையே, நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது. தமது தலைமையிலான கோப் குழுவினால் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் மூன்றாவது அறிக்கை இதுவென்றும் அவர் இதன் போது தெரிவித்தார்.

கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் (ச.தொ.ச), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், அரச பொறியியல் கூட்டுத்தாபனம், தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு, இலங்கை கிரிக்கெட் நிறுவனம், இலங்கை ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனம், சபை, இலங்கை மின்சார சபைக்குரிய நிலைபெறுதகு சக்தி அதிகார சபையும் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம், இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனம், வீதி அபிவிருத்தி அதிகார சபை யின் கீழுள்ள 4 மகநெகும நிறுவனங்கள், துறைமுகங்கள் அதிகார சபை, குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி, ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகிய 15 நிறுவனங்கள் தொடர்பான விசாரணை விபரங்களே இந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ளன. கோப் குழுவின் இந்த அறிக்கையை சபைக்கு சமர்ப்பித்து உரையாற்றிய சுனில் ஹந்துன்நெத்தி எம்.பி. மேலும் தெரிவிக்கையில், "இந்த 15 நிறுவனங்களினாலும் எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பங்களிப்பு மற்றும் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து நாம் ஆராய்ந்துள்ளோம். கடந்த காலங்களில் நட்டம் என்பதை விடவும் வீண்விரயமிக்க, பொருளாதாரத்துக்குக் கேடான பல்வேறு திட்டங்கள் இந்த நிறுவனங்களின் ஊடாக மேற்கொள் ளப்பட்டுள்ளன. குறிப்பாக சூரியவெவ மைதானத்துக்கு தற்போது உரிமை யாளர் ஒருவர் இல்லாத நிலைமை யொன்றே இருக்கிறது. 5.3 பில்லி யன் ரூபாய் துறைமுகங்கள் அதிகார சபையினால் செலுத்தப்படுகிறதா அல்லது இலங்கை கிரிக்கெட் நிறுவனம் செலுத்துகிறதா என்ற பேச்சுக்களும் இருக்கின்றன. இதில் 5.3 பில்லியன் ரூபாய் நட்டம் இருக்கிறது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் அந்த அதிகாரசபைக்கு சம்பந்தமில்லாதவையாக மேற்கொள்ளப்பட்ட சில திட்டங்களினால் 57 ஆயிரம் மில்லியன் வரையான பொருளாதார கேடான விடயங்கள் இடம்பெற்றுள்ளன. இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்துக்கு மில்லியன் கணக்கான டொலர்களும் யூரோக்களும் கிடைத்துள்ளன. எனினும், அந்த நிதிகள் பயன்படுத்தப்பட்ட விதம் தொடர்பில் நாம் ஆராய்ந்து பார்த்துள்ளோம். இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் 2,918 மில்லியன் ரூபாய், அதேபோல், அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நட்டம் 37 ஆயிரம் மில்லியன் ரூபாய் என்று இந்த அறிக்கையில் இருக்கிறது. இதேவேளை, விடயதானங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் நிறுவனங்களுக்கும் இருக்கின்றன. இந்த அறிக்கையை விவாதத்துக்கு உட்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகரிடம் கேட்டுக் கொள்கிறேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)


ஈழத்து மெல்லிசை பாடகர்
ஓ! வண்டிக்காரா புகழ் மா.சத்தியமூர்த்தியின்
'சிறுநண்டு மணல் மீது'
இறுவட்டு வெளியீட்டு விழா

இடம்:- ராஜா கிறீம் கவுஸ், சரஸ்வதி மண்டபம்
(இராமநாதன் வீதி - நாச்சிமார் கோவிலடி)
காலம்:- 10.02.2017 வெள்ளிக்கிழமை
நேரம்:- மாலை - 5.00 மணி

தலைமை
"தெய்வத்தமிழிசைக் கவிஞர்"
இராசையா குகதாசன்
நாயன்மார்கட்டு
பிரதம விருந்தினர்
திரு. என். சண்முகலிங்கன்
(முன்னாள் துணைவேந்தர் , யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
கௌரவ விருந்தினர்
கலாபூஷணம், சங்கீதபூஷணம்
திரு. V.K.நடராஜா
(முன்னாள் ஆசிரிய ஆலோசகர், வலிகாமம், யாழ்ப்பாணம்)
மாலை நிகழ்ச்சிகள்

5.00 மங்கள விளக்கேற்றல்
5.05 தமிழ்த்தாய் வாழ்த்து (கலாபூஷணம். சி.சிவானந்தராஜா)
5.10 வரவேற்புரை
திரு.க.குமாரசாமி (ஓய்வு நிலை உதவிக்கல்விப்பணிப்பாளர்)
5.15 ஆசியுரை
வணக்கத்துக்குரிய
ஸ்ரீமத் வேதவித்தியாசாகரர் சுவாமிகள்
(குருபீடாதிபதி - சிவகுருநாதகுருபீடம், வேதாந்தமடம்)
5.20 வாழ்த்துரை
கௌரவ விருந்தினர் திரு.V.K.நடராஜா
(பாடகர் சத்தியமூர்த்தியின் ஆரம்பகுரு)
5.25 தலைமையுரை தலைவர் திரு.இ.குகதாசன் அவர்கள்
5.35 வெளியீட்டுரை திரு.N.சர்வேஸ்வரா
(உதவிப்பதிவாளர், மருத்துவபீடம் யாழ்.பல்கலைக்கழகம்)
6.00 இறுவட்டுவெளியீடு வெளியிட்டு வைப்பவர்
திரு.S.பத்மநாதன்
(ஓய்வுநிலை பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்).
முதற்பிரதி பெறுபவர்
திரு.S.கனகலிங்கம் J.P
(ஓய்வுநிலை சிரேஷ்ட கிராம சேவையாளர்)
6.15 நயப்புரை திரு.கு.பாலசண்முகன்
(விரிவுரையாளர்.கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
பாராட்டுரை
திரு.ச.வாசுதேவன் (லண்டன்) (கலை இலக்கிய ஆர்வலர்)
6.35 பாடகர் கௌரவம் - கலைஞர் கௌரவம்
6.40 பிரதம விருந்தினர் உரை
7.00 ஏற்புரை நன்றியுரை (7891)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


# சீனாவுடன் நெருங்கிய உறவை விரும்புகிறது இலங்கை அரசு

மங்கள சமரவீர தெரிவிப்பு



சீனாவுடன் நெருங்கிய வலுவான உறவுகளை ஏற் படுத்திக் கொள்ள இலங்கை அரசு விருப்பம் கொண் டுள்ளது என்று வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தில் நேற்று முன்தினம் செய்தியா ளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"சீனா உலகில் வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்று. இலங்கையில் சீனா பெருமளவில் முத லீடுகளைச் செய்துள்ளது.

அம்பாந்தோட்டையில் கைத்தொழில் வலயம் ஒன் றில் சீனா முதலீடு செய்துள்ளது. இதில் எந்த நாடும் முதலீடு செய்ய முடியும்.

இந்த வலயங்கள் சீனாவின் நிதியில் முதலீடு செய்யப்பட்டிருந்தாலும், ஏனைய நாடுகளும் முதலீடு செய்வதை எதிர்பார்க்கிறோம்.

இதற்குள் உலகம் வருவதை காண நாம் விரும்புகிறோம்.

முதலீடுகளுக்குச் சிறந்த இடமாக இலங்கை விளங்குகிறது. எனவே, முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலை நாம் உருவாக்க வேண்டும்.

திருகோணமலை மற்றும் ஏனைய துறைமுகங்களிலும், அனைத்துலக முதலீடுகளை எதிர்பார்க்கிறோம்" என்றும் வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (இ-3)


11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
12.04.1953
ஆண்டவன் அடியில்
10.02.2006

அமரர் லோறன்ஸ் அலெக்ஸ்சாண்டர்

அன்பின் உருவொன்று
அவனியை விட்டகன்று
ஆண்டு பதினொன்று ஆனதுவோ
பண்பாய், பாசமாய்
இன் முகத்துடன் வரவேற்கும்
இன்பமுகமெங்கே?
இனி எங்கு காண்போம்
உன் அன்பு வதனமதை?



(7893)

இல. 147, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

ஜோசேப் குடும்பம்
கம்சனா ஆடையகம்(A.J.M)


# வீதி விபத்துக்களில் சிக்கி 2016-ல் 2960 பேர் பலி

(கொழும்பு)

நாடு முழுவதும் கடந்த ஆண்டு 38 ஆயிரத்து 552 வீதி விபத்துக்கள் இடம் பெற்றுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.


இந்த விபத்துக்களில் இரண்டாயிரத்து 960 பேர் இத னால் உயிரிழந்துள்ளனர். அத்துடன், 8 ஆயிரத்து 518 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வீதி விபத்துக்களை குறைப்பது தொடர்பாக பாடசாலை மாண வர்களுக்கு விளக்கம் அளிக் கும் வேலைத்திட்டத்தை வீதிப் பாதுகாப்பு தேசிய பேரவை அறிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (சே-11)

# கலைத் தரிசனம்

***வைத்தியராக, பேச்சாளராக, கதாபிரசங்கியாக, கவிஞராக, நடிகராக, நெறியாளராக, எழுத்தாளராக, ஒப்பனைக் கலைஞராக, அரங்க அமைப்புக் கலைஞராக, பாடகராக எனப் பல்துறைகளில் விளங்கும் இவர் 1949.03.02 ஆம் திகதி திருகோணமலை மாவட்டத்திலுள்ள நிலாவெளியில் பிறந்தார். 12 வயதிலேயே நாடகத்தில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக நாடக உலகில் பிரவேசித்த இவர் நல்லதங்காள், அரிச்சந்திரன், பாஞ்சாலி சபதம், சாகுந்தலம் போன்ற மரபுவழி நாடகங்களையும் விதியா? சதியா?, மானம் காத்த மறவர், இன்பமே துன்பம், கலாட்டா காதல், நம்பிக்கைத் துளிர்கள், விடியலின் முகவரி, பண்பாடு படும்பாடு எனப்பல நாடகங்களை எழுதித் தயாரித்து நெறியாள்கை செய்து அரங்கேற்றினார். தமிழ் சித்த வைத்தியரான இவர் போர்க் காலத்தில் வைத்தியத் துறைக்குக் கணிசமான பங்களிப்புச் செய்து பல உயிர்களைக் காத்து, வன்னி மண்ணில் தனக்கான ஓர் இடத்தை பிடித்தார். இவர் 2015 இல் முல்லை. யோகாப் பயிற்சிக் கல்லூரியின் கலை இலக்கியப் பெரு மன்றத்தால் ''கலைத்தென்றல் '' என்ற விருதையும் 2016 இல் புதுவையான் கலை பண்பாட்டுப் பேரவையால் ''கலைச்சுடர்'' என்ற விருதையும் பெற்றார். சித்த வைத்திய கலாநிதி இரா. மாதவராசா அவர்கள் வலம்புரிக்கு தன்னைப் பற்றியும் கலைப்பணி பற்றியும் கூறியவற்றை இங்கே தருகின்றோம்.***



## சித்த வைத்திய கலாநிதி இரா.மாதவராசா அவர்களுடனான சந்திப்பு

**■ கலைப்பிரவேசம்**

எனக்கு எழு சகோதரர்கள். அதில் இரண்டு பெண்கள், ஐந்து ஆண்கள். எனது குடும்பமே ஒரு கலைக்குடும்பம். எனது தந்தை யார் நாடகத்தில் தீவிரமான நடிகர். அவர் நிலாவெளியில் ஒரு நாடக மன்றத்தை உருவாக்கிப் பல நாடகங்களை அளிக்கை செய்தார். அதில் ஐந்து ஆண் சகோதரர்களும் நடிப்பதற்கு வாய்ப் பேற்பட்டது. எனது அண்ணா வேதநா யகம் ஒரு வைத்தியர். அவர் சிறந்த நடிகர். அவர் அக்காலத்தில் ''தென்றலும் புயலும்'' என்ற நாடகத்தை ஆற்றுகை செய்தார். அதில் எனது மனைவியார்தான் கதாநாயகியாக நடித்தார். அப்போது ஒவ்வொருவரின் நடிப்பினை உற்றுநோக்குவேன். பின்னாளில் இந்நாடகம் முழுநீளத் திரைப்படமாக வெளிவந்தது. பின்னர் இந்நாடகத்தை நான் தயாரித்தேன். பாடசாலைக் காலத்தில் கத்தோலிக்க நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அதில் காப்பிலிப் பாத்திரத்தை ஏற்று நடித்தேன். பிறகு எனது தந்தையார், எனது சகோதரர்கள், எனது மனைவியாரின் நடிப்பினை விளங்கிக் கொண்ட நான் பல பாத்திரப் பண்புகளை வெளிப்படுத்தும் ஒத்திகைகளைச் செய்து அப்படியே நாடகத்தில் ஆர்வம் ஏற்பட்டது. அதனால் 12 வயதிலேயே நாடகத்திற்குள் நுழைந்தேன்.

**■ எனது படைப்புக்கள்?**

நானே நல்லதங்காள், அரிச்சந்திரன், பாஞ்சாலி சபதம், சாகு ந்தலம் போன்ற மரபுவழி நாடகங் களையும் விதியா? சதியா?, மானம் காத்த மறவர், இன்பமே துன்பம், கலாட்டாக் காதல், நம்பிக்கைத் துளிகள், தர்மத்தின் பதில் எங்கே, சிலுவையில் அறையப்பட்ட சின்ன றோஜாக்கள், விடியலின் முகவரி, அக்கறை இல்லாதவர்கள், கடைசியாக ஒரு கடிதம், நெஞ்சுவரை நெருப்பு, வசந்தமே வா, பண்பாடு படும்பாடு போன்ற 30 இற்கும் மேற்பட்ட சமூக நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்துள்ளேன்.

**■ சமூக அக்கறை கொண்ட சமுதாய மறுமலர்ச்சி மன்றம்**

1972 ஆம் ஆண்டு சமுதாய மறுமலர்ச்சி மன்றத்தை ஆரம்பித்தேன். இம்மன்றத்தின் பிரதான நோக்கம் இரண்டு. அதில் ஒன்று கலையினூடாக சமூக சீர்திருத்தத்தை ஏற்படுத்தல், இரண்டாவது சமூக சேவைகளை மேற்கொள்ளுதல். இதனடிப்படையில் 20 இற்கு மேற்பட்ட சமூக சீர்திருத்த நாடகங்களையும் அளிக்கை செய்திருந்தோம். சிரமதானப் பணிகள், மரணச் சடங்குகளுக்கு உதவி செய்தல், திருமண-பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் ஆகிய கொண்டாட்டங்களு க்கு மன்ற அங்கத்தவர் இணைந்து இலவசமாக பந்தல் அமைத்துக் கொடுத்தல், நோயாளர்களைப் பார்வையிடலும் உதவி செய்த லும் எனப் பல சமூக சேவைகளை முன்னெடுத்து சமூகத்தில் பல நன்மதிப்பைப் பெற்றிருந்தோம். இன்றுள்ள நிலைமையில் இங்கும் இதனை ஆரம்பிக்க பத்து வருடத்திற்கு முன்னர் முயற்சித்தேன். தற்பொழுதும் முயற்சித்த வண்ணமே உள்ளேன். அதன் பயனாக பலர் மனமுவந்து இம்மன்றத்தில் இணைந்து கொள்வதற்காகக் கூறினார்கள். இதன் தொடர்ச்சியாக அடுத்த மாதம் இம்மன்றத்தை உருவாக்கி கலாசாரத் திணைக்களத்திற்குக் கீழ் பதிவு செய்யவுள்ளேன்.

**■ நாடக ஆற்றுகைகளை புரையேற வைத்த தொலைக்காட்சித் தொடர்கள்**

இன்றுள்ள நிலைமையில் எல்லா வீடுகளையும் தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் ஆக்கிரமித்து நேரடியான ஆற்றுகை நாடகங்களைப் பார்வையிடாதபடி மக்களை அடக்கியுள்ளது. நாடக அளிக்கை முற்றுமுழுதாகக் குறைந்தது என்று கூறு விட முடியாது.

பல இடங்களில் நாடக அளிக்கைகள் நடைபெறுவதாகப் பத்திரிகையில் அறிகின்றேன். இன்று நாடகத்தைப் பாடமாகப் படித்தவர்களை விட ஆர்வத்தின் காரணமாச் சுயமாகக் கற்றவர்களே அதிகம். நாடகத்தை வளர்க்கின்றார்கள் என்று சொல்லக் கூடியளவிற்கு நிலைமை யுள்ளது. நல்லூர் உற்சவ காலத்தில் செயற்றிறன் அரங்க இயக்கத்தினால் மிகத் தரமான நாடகங்கள் அளிக்கை செய்யப்பட்டன. நாடகங்களை அளிக்கை செய்பவர்கள் நாடகத்தின் தரம் குன்றாமல் அளிக்கை செய்ய வேண்டும். ஒவ்வொரு நாடகக் கலைஞனும், நெறியாளரும், குழந்தை ம.சண்முகலிங்கம், பேராசிரியர் சி.மௌனகுரு, அ.தாசீசியஸ், நா. சுந்தரலிங்கம், கலையரசு சொர்ணலிங்கம், இ.முருகையன், க.சிதம்பரநாதன், பிரான்சிஸ்ஜெனம்முதலான நாடகக்காரர்களது நாடகங்களைப் படிக்க வேண்டும்.

அதனால் நாடகத்தினை புதிய கோணத்தில் படைப்பதோடு தரம் மிக்க, சமூகப் பொறுப்பு மிக்க நாடகங்களை தயாரித்து வழங்க முடியும். 1985 ஆம் ஆண்டு குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் தயாரித்த மண்சுமந்தமேனியர் நாடகம் 65 அரங்க அளிக்கைகளைச் செய்திருந்தது. அந்தளவிற்கு நாடகத்தின் தரமும் பார்வையாளரின் நாட் டமும் இருந்தது. இவை இரண்டும் ஒன்றுபட படைக்கும் நாடகத்தை பார்வையாளர்கள் விரும்பிப் பார்ப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

**■ யுத்த காலத்தில் மருத்துவம் செய்தமை மறக்கமுடியாத சுமை களைத் தாங்கியது**

மக்களுக்கான மருத்துவ சேவை விரிவுபடுத்தப்பட வேண்டிய சூழலில் அன்றைய ஆட்சியாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க வைத்திய சேவையைச் செய்தேன். மருந்துகள் இல்லாத அவதி ஒருபுறம், செல்லடிபட்டு குருதிகொட்டி எம் கண் முன்னாலே மனிதவுயிர்கள் விடைபெற்றதை, எனது மருத்துவ அனுபவத்தில் அன்று தான் கண்டேன். காயப்பட்டவர்களுக்கு மருந்து கட்டினேன். முதலுதவி மூலம் முடிந்த வரை உயிர்களைக் காப்பாற்றினேன். மருத்துவ மனைக்கு மக்களைக் கொண்டு சேர்க்கமுடியாத நிலை, பல மருத்துவமனைகள் செல்லடியால் தகர்ந்தன. எமது உயிர்களை பணயம் வைத்துத் தான் நோயாளிகளைக் காப்பாற்றினோம். எங்கு செல்- குண்டு விழுந்து மக்களின் அவலக்குரல் கேட்கின்றதோ அவ்விடத்திற்குச் சென்று என்னாலான மருத்துவ உதவிகளைச் செய்தேன். பதுங்கு குழிக்குள்ளிருந்து வெளியே வந்து பல உயிர்களைக் காத்தோம். போர்க்காலத்திலே மருத்துவச்சேவை நீளமானது. இப்பொழுது கடந்தவற்றை நினைக்கின்ற போது இதயம் கனத்தாலும், பல உயிர்களைக் காப்பாற்றினேன். என்ற செய்தியால் நெஞ்சு நிறைகின்றது.

**■ மனிதன் இயற்கையோடு ஒன்றி வாழாது விலகிச் செல்கின்றான்.**

சித்த வைத்தியம் என்பது மூலிகைகளைப் பிரதான மாகக் கொண்டது. அதனால் ஆயுள் நீண்டு வாழ்ந்தவர் கள் அதிகம். இன்று ஆயுள் குறைந்துள்ளது. காரணம் மனிதன் இயற்கையோடு ஒன்றி வாழாது விட்டது தான். இன்று மக்கள் அறியாமையாலும் அவசரத்தாலும் சித்த வைத்தியத்தை நாடுகின்ற தன்மை விடுத்து ஆங்கில வைத்தியத்தை நாடுகின்றனர். அவசரமான வாழ்வு, எதையும் உடனடியாக மாற்ற வேண்டும் என்ற தன்மை காரணமாக ஆங்கில வைத்தியத்துறையை நாடுகிறார்கள். அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் வட மாகாண சுகாதார அமைச்சும் இணைந்து கைதடியில் தமிழ் சித்த மருத்துவக் கண்காட்சியை நடத்தியது. இந்த மாநாட்டில் ''ஔடதமே இயற்கை, இயற்கையே ஔடதம்'' என்றதலைப்பில் ஆய்வுக் கட்டுரையினைச் சமர்ப்பித்தேன். தற்பொழுது இல 56, ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள சீதாதேவி கங்காதரன் ஆரோக்கிய நிலையத்தில் பின்வரும் சித்த மருத்துவத்தை மேற்கொ ண்டு வருகின்றேன். மகப்பேறின்மை, நீரிழிவு, இதயநோய், ஆண்மைக் குறைவு, முறிவு நெறிவு, ஆஸ்துமா, குடல்புண், வாத நோய், புற்றுநோய், பீனிசம், தோல் நோய்கள், குழந்தை நோய்கள், மன அழுத்தம், இள நரை, தலை முடி கொட்டுதல், போதை வஸ்துப் பாவனை, கைவிடப்பட்ட நோய்கள், விசக்கடி வைத்தியம், முதலியவற்றிலிருந்து விடுபட நிவாரணி வழங்கப்ப டுகின்றது. சித்த வைத்தியத்தில் தொற்றாத நோய்கள் ஏற்படாத வகையில் வாழ வழிவகை கள் இருக்கின்றன. இதற்கு மேலாக சித்த வைத்தியத்தில் யோகாசனம் இருக்கின்றது. இதில் ஒவ்வொரு நோய்களையும் குணப்படுத்த அதற்கென தகுந்த ஆசனங்கள் உள்ளன. இதனால் நோய் எதிர்ப்பு சக்தினை உண்டாக்கி, ஆயுள் நிறைந்து வாழலாம். தமிழ் சித்த வைத்தியம் விரிவுபடுத்தப்பட்டு அதனை யாவரும் எதிர்காலத்தில் பயன்படுத்துவார்கள் என்பது நிதர்சனமே!

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

# ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவாக இளைஞர்கள் திரள்வதற்கு வாய்ப்பு

## மெரினா கடற்கரையில் பொலிஸார் குவிப்பு



தமிழக முதல்வர் ஓ.பன்னீர செல்வத்துக்கு ஆதரவாக மெரினாவில் இளைஞர்கள் திரள வாய்ப்புள்ளதாக வந்த தகவலைத் தொடர்ந்து அங்கு அதிக அளவில் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்கான தடையை நிரந்தரமாக நீக்க வலியுறுத்தி கடந்த மாதம் இளைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள் மெரினாவில் தொடர் போராட்டம் நடத்தி வெற்றி பெற்றனர். அதைத் தொடர்ந்து மீண்டும் போராட்டம் நடந்து விடக் கூடாது என்பதற்காக மெரினா உட்பட 6 காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பின்னர் திரும்பப் பெறப்பட்டது.

இந்நிலையில், அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கும் தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்துக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவாக இளைஞர்கள் போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளதாக நுண்ணறிவு பிரிவு பொலிஸார் காவல் ஆணையர் எஸ்.ஜார்ஜ்க்கு தகவல் கொடுத்தனர்.

இதைத் தொடர்ந்து காமராஜர் சாலையில் கலங்கரை விளக்கம் முதல் நேப்பியர் பாலம் வரை பொலிஸார் அதிக அளவில் நிறுத்தப்பட்டிருந்தனர். சாதாரண உடை அணிந்த பொலிஸாரும் இரகசிய கண்காணிப்பில் ஈடுபட்டனர். (இ-7)

பாரதச் செய்தி

# பன்னீர்செல்வம் என்ன சின்னக் குழந்தையா?

## சுப்பிரமணியன் சுவாமி கிண்டல்



கட்டாயப்படுத்தியதால் இராஜினாமா செய்தேன் என்று சொல்வதற்கு பன்னீர்செல்வம் என்ன சின்னக் குழந்தையா? என்று பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சராக சசிகலா பதவியேற்க வேண்டும் என்று பா.ஜ.க. மூத்த தலைவரும் எம்.பியுமான சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு சுப்பிரமணியன் சுவாமி அளித்த பேட்டியில், " தற்போதைய சூழல் தெளிவாக உள்ளது. தமிழக முதல் அமைச்சராக சசிகலா பதவியேற்க வேண்டும். தாமதமானால் சட்டத்திற்கு புறம்பாகி விடும். இந்த பிரச்சினையில் ஜனாதிபதி தலையிட வேண்டும்" என்று தெரிவித்து இருந்தார்.

மேலும், "தமிழக ஆளுநராக பொறுப்பு வகித்து வரும் ராவ் மும்பையில் ஒளிந்து கொண்டிருக்கிறார். மும்பையில் அமர்ந்து கொண்டு என்ன செய்கிறார்? ஆளுநர் தமது பணியில் தவறி விட்டார். தனது ஆளுநர் நிலைமையை புறக்கணித்து விட்டார்.

தமிழக ஆளுநருக்கு எதிராக மத்திய அமைச்சரவையில் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று கூறினார். கட்டாயப்படுத்தி இராஜினாமா செய்ய வைத்தார்கள் என்ற பன்னீர்செல்வத்தின் குற்றச்சாட்டு குறித்த கேள்விக்கு பதிலளித்த சுவாமி, பன்னீர்செல்வம் ஒரு குழந்தையா? அவர் ஒரு முதலமைச்சர்.

ஒரு பெண், அதுவும் முதல்வராக கூட இல்லாதவர் அவருக்கு அழுத்தம் கொடுத்தாரா? இதுபோன்ற விடயங்கள் பேசப்பட்டு வருவது ஆச்சர்யமளிக்கிறது.

பன்னீர்செல்வம் படங்களை பார்ப்பதை நிறுத்தி விட்டு, சட்டப்படி கொடுக்கப்பட்ட இராஜினாமாவை திரும்ப பெற முடியாது என்பதை படிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கார்டனில் ஒருமையில் அழைக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார் முதலமைச்சர்

## ஆதங்கத்தைக் கொட்டும் ஆதரவாளர்கள்

போயஸ் கார்டனில் ஓ.பன்னீர்செல்வத்தை ஒருமையில் அழைத்து அவமானப் படுத்தியதாக அவரது நெருக்கமான ஆதரவாளர்கள் ஆதங்கப்பட்டுள்ளனர்.

அமைதி வடிவமாக இருந்த ஓ.பி.எஸ். கடந்த இரண்டு நாட்களாக ஊடகங்களில் மனம் திறந்து அதிரடியாய் சொல்லும் கருத்துக்கள் தமிழக மக்களால் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வருகின்றன. தான் தொடர்ந்து அவமானப்படுத்தப்பட்டது பற்றி பேசி வரும் ஓ.பன்னீர்செல்வம், "சொன்னது 10 சதவீதம் தான் சொல்லாதது 90 சதவீதம் இருக்கிறது" என சஸ்பென்ஸ் வைத்திருக்கிறார்.

ஜெயலலிதா இல்லாத போயஸ் தோட்டத்தில் ஓ.பி.எஸ். நடத்தப்பட்ட விதம் குறித்தும் கடந்த சில தினங்களாக அவர் எத்தகைய கசப்பான அனுபவங்களை எதிர்கொண்டு வந்தார் என்பது குறித்தும் அவருக்கு நெருக்கமான வட்டத்தினர் சில தகவல்களை பகிர்ந்து கொண்டனர்.

"முதலமைச்சர் பதவி தனக்கு நிரந்தரம் இல்லை என்பதும், சசிகலா அந்த இடத்துக்கு வருவார் என்பதும் அவருக்கு நன்றாகத் தெரியும். ஜல்லிக்கட்டு, கிருஷ்ணா நதி நீர் விவகாரம் உள்ளிட்டவைகளை திறம்பட அவர் சாதித்ததை போயஸ் தோட்டத்தில் இருப்பவர்கள் ரசிக்கவில்லை.



இதற்கிடையில், எப்படியாவது அ.தி.மு.க-வுக்குள் குழப்பத்தை விளைவிக்க நினைத்துக் கொண்டிருந்தது தி.மு.க. இதற்காகவே, சட்டமன்றத்துக்குள் ஓ.பி.எஸ். நுழைந்த போது, ஸ்டாலின் உள்ளிட்ட அனைவரும் எழுந்து நின்று அவருக்கு வணக்கம் செலுத்தினர். ஓ.பி.எஸ். காருக்கு வழி விட்டு தனது காரை ஓரம் கட்டினார் ஸ்டாலின். எல்லாவற்றுக்கும் மேலாக, "தேவைப்பட்டால் ஓ.பி.எஸ்ஸுக்கு நாங்கள் சக்தியளிப்போம்" என்றார் துரைமுருகன்.

இவை எல்லாமுமே, போயஸ் தோட்டத்தில் இருப்பவர்களுக்கு ஆத்திரத்தை மூட்டியது. இந்த நிகழ்வுகளுக்குப் பிறகு, ஓ.பி.எஸ்-ஸை வேண்டுமென்றே சிறுமைப்படுத்த ஆரம்பித்தார்கள். 66 வயதான ஓ.பி.எஸ்-ஸை போயஸ் தோட்டத்தில் இருக்கும் சிலர், "நீ.. வா.. போ..,' என ஒருமையில் அழைத்து அவமானப்படுத்தினர்.

தி.மு.க-வுக்கும் அவருக்கும் மறைமுக தொடர்புகள் இருப்பதாக சந்தேகித்தார்கள். இதையடுத்து, ஓ.பி.எஸ்-ஸை யார் யாரெல்லாம் சந்திக்க வருகிறார்கள், அவரது அசைவுகள் என்ன என்பதை தனியார் உளவு நிறுவனம் மூலம் கண்காணித்து வந்தனர்.

கடந்த 5ஆம் திகதி கூட்டப்பட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏ-க்கள் கூட்டம் பற்றிய தகவல் கூட ஓ.பி.எஸ்-ஸுக்கு முறையாக சொல்லப்படவில்லை. கூட்டம் குறித்த விபரம் முறையாக தனக்கு தெரிவிக்கப்படாததால் கடலில் கச்சாய் எண்ணெய் அள்ளப்படும் இடத்தை பார்வையிடுவதற்காக ஓ.பி.எஸ். மணலி சென்றுவிட்டார். அங்கிருந்து கோட்டைக்கு துறைமுக பொறுப்புக்கழக அதிகாரிகளுடனான சந்திப்புக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது, அவருக்கு அழைப்பு வர, கோட்டைக்குப் போகாமல் கார்டனுக்கு போயிருக்கிறார். அங்கு போன பிறகு தான் சசிகலா அ.தி.மு.க. சட்ட மன்றக் கட்சித் தலைவராக எம்.எல்.ஏ-க்களால் தேர்வு செய்யப்பட்டிருக்கும் விடயத்தை அவருக்கு தெரிவித்துள்ளனர்.

"சசிகலா முதலமைச்சராக வருவதை இப்போதைக்கு கட்சித் தொண்டனும் தமிழக மக்களும் ஏற்கும் மனநிலையில் இல்லை. அந்த மனநிலைக்கு அவர்களை தயார்படுத்தும் வரை இந்த முடிவை ஒத்திப் போடலாம்" என்று அவர் சொன்னதை அங்கிருந்த மூத்த அமைச்சர்களும் சசிகலாவின் உறவுகளும் ஏற்கவில்லை. "அதையெல்லாம் நாங்க பார்த்துக் கொள்வோம். நீ இராஜினாமா எழுதிக் கொடு'' என்று நெருக்கடி கொடுத்து இராஜினாமா கடிதத்தை வாங்கி உள்ளனர்.

கடந்த 7ஆம் திகதி காலை 8.45 மணிக்கு சசிகலா தலைமையில் புதிய அமைச்சரவை பதவி ஏற்பது என முடிவு செய்யப்பட்டது. புதிதாக அமைச்சர்கள் பட்டியலில் கடந்த காலங்களில் ஜெயலலிதாவால் ஓரங்கட்டப்பட்ட சிலரது பெயர்கள் இருந்துள்ளன. இதுகுறித்து ஓ.பி.எஸ்.ஸிடம் ஒப்புக்குக்கூட கலந்தாலோசிக்கவில்லை. கடுமையான மன உளைச்சலுக்கு ஆளான ஓ.பி.எஸ். தன் மனக்குமுறலை கொட்டியுள்ளார். அடுத்த சில நாட்களில் மிச்சத்தையும் அவர் கொட்டுவார் என்று ஓ.பி.எஸ்-ஸுக்கு நெருக்கமான வட்டத்தினர் தெரிவித்தனர். (இ-7)

# இங்கிலாந்து பாராளுமன்றில் ட்ரம்ப் உரை நிகழ்த்த எதிர்ப்பு

## சபாநாயகர் போர்க்கொடி

(லண்டன்)

அகதிகளுக்கு அமெரிக்காவில் நுழையத்தடை விதிக்கப்பட்டதால் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் ட்ரம்ப் உரை நிகழ்த்த சபாநாயகர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்றுள்ள டொனால்ட் ட்ரம்பை இங்கிலாந்து பிரதமர் தெரசாமே அண்மையில் சந்தித்தார். அப்போது இங்கிலாந்துக்கு வருகை தரும்படி ட்ரம்புக்கு அழைப்பு விடுத்தார்.

அதை ஏற்ற ட்ரம்ப் இந்த ஆண்டு இறுதியில் இங்கிலாந்து செல்ல ஒப்புக்கொண்டார். அப்போது இங்கிலாந்து பாராளுமன்றத்தில் வெஸ்ட் மினிஸ்டர் ஹாலில் இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் அவர் உரை நிகழ்த்துவார் என அறிவிக்கப்பட்டது.

ஆனால் அவர் பாராளுமன்றத்தில் பேச சபாநாயகர் ஜான்பெர்கவ் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவுக்குள் அகதிகள் நுழைய ட்ரம்ப் தடை விதித்துள்ளதை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

மேலும் இனவெறிகும் நான் கடுமையான எதிர்ப்பாளன். சட்டத்துக்கு முன்பு அனைவரும் சமம் என்பதை நான் ஆதரிக்கிறேன். எனவே அவர் பாராளுமன்ற கூட்டத்தில் பேச இருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆப்கானிஸ்தானில் செயற்பாடுகளை இடைநிறுத்தியது செஞ்சிலுவை சங்கம்


ஆப்கானிஸ்தானில் சர்வதேச செஞ்சிலுவை சங்க உறுப்பினர்கள் ஆறு பேர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து அங்கு தமது செயற்பாடுகளை இடைநிறுத்திக் கொள்வதாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் வடக்கு பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் மீது ஐ.எஸ். தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஆறு உறுப்பினர்கள் கொல்லப்பட்டதை அடுத்தே இந்த அதிரடி தீர்மானம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களின் தொடரணி மீதான தாக்குதலானது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என சர்வதேச செஞ்சிலுவைச் சங்க செயற்பாடுகளுக்கான பணிப்பாளர் தெரிவித்தார்.

செஞ்சிலுவைச்சங்க உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நாம் தொடர்ந்தும் முயற்சித்து வந்தோம்.

ஆனால் குறித்த பயங்கரமான தாக்குதல் சம்பவத்தை அடுத்து நாடளாவிய ரீதியில் நாம் முன்னெடுத்து வந்த அனைத்து செயற்பாடுகளையும் நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.



ஆப்கானிஸ்தானில் முதல்முறையாக செஞ்சிலுவைச் சங்க ஊழியர்கள் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலானது, ஊழியர்களை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாகிஸ்தானில் நிலநடுக்கம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவாகியது.

இந்த நிலநடுக்கம் குறித்து அமெரிக்க புவியியல் மையம் வெளியிட்ட தகவலில், "பாகிஸ்தானின் கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை 3.03 மணியளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவாகியது.

நிலநடுக்கத்தின் மையம் பாகிஸ்தானின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள பஸ்னி கடற்கரை நகரை மையமாகக் கொண்டுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து உடனடி தகவல் ஏதும் வெளிவரவில்லை.

கடந்த 2015 ஆம் ஆண்டு பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்துக்கு 400 பேர் பலியாகினர்.

மேலும், கடந்த 2005 ஆம் ஆண்டு பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் ரிக்டர் அளவுகோலில் பதிவான 7.6 சக்தி வாய்ந்த நிலநடுக்கத்துக்கு 73,000 பேர் பலியாகினர். 3 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் தங்கள் வீடுகளை இழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)





# மணிலா நகரில் பயங்கரத் தீ விபத்து; 15,000 பேர் வீடுகளை இழந்து தவிப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸ் தீவிலுள்ள மணிலா நகரில் ஏற்பட்ட பயங்கரத்தீ விபத்தால், 15 ஆயிரத்துக்கும் மேலானோர் தங்களது வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர்.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவிலுள்ள குடிசைப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு பயங்கரத்தீ விபத்து ஏற்பட்டது.

நள்ளிரவில் ஒரு இடத்தில் ஏற்பட்ட தீயானது, பரோலா காம்பவுண்டு முழுவதும் மளமளவென பரவியதுடன், அருகிலுள்ள பகுதிக்கும் பரவியது. தீ கொழுந்துவிட்டு எரிந்ததால், அந்த பகுதிகள் முழுவதும் புகை மூட்டத்தால் சூழப்பட்டன.



மணிலா துறைமுகம் அருகே உள்ள பகுதிகளில் ஏற்பட்ட இந்த தீ விபத்தால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் முற்றிலும் சேதம் அடைந்துள்ளதாக அந்நாட்டு தீயணைப்பு துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால், 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்களது வீடுகளை இழந்து தவித்து வரும் அவல நிலை உருவாகியுள்ளது.

இந்த விபத்தில் ஏராளமானோர் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனையடுத்து மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும், வீடுகளை இழந்தோருக்கு உணவு மற்றும் குடிநீர் வழங்கும் பணிகள் தொடங்கியுள்ளதாகவும் அந்நாட்டு சமூக நலத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீ விபத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளை இழந்த பலர் வீதிகளில் சிறிய குடில்களை அமைத்து தற்காலிகமாக வசித்து வருகின்றனர். (இ-7)

# அமெரிக்க குடியுரிமை பெற்றவர்களின் எண்ணிக்கையை குறைக்க அரசு முடிவு

## அடுத்த அதிரடிக்கு தயாராகிறார் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

அமெரிக்க குடியுரிமை பெற்று நிரந்தரமாக இருப்பவர்களின் எண்ணிக்கையை 50 வீதமாக குறைக்க அரசு முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனாலட் ட்ரம்ப் பதவி ஏற்றதற்கு பிறகு வெளிநாட்டினருக்கு எதிராக பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

அமெரிக்கர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் வெளிநாட்டினரை அங்கிருந்து வெளியேற்ற அவர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் அங்கு தங்கி பணிபுரிய வசதியாக வெளிநாட்டினர் 10 இலட்சம் பேருக்கு கிரீன் கார்டு வழங்கப்படுகிறது.

இத்துடன் 5 இலட்சம் பேருக்கு நிரந்தர குடியுரிமை வழங்கப்படுகிறது. இந்த வசதிகளை இந்தியர்கள் அதிக அளவில் பெற்று வந்தனர்.

ஆனால், இதில் மாற்றங்களை கொண்டுவர ட்ரம்ப் முடிவு செய்துள்ளார்.

இதற்காக புதிய சட்டம் கொண்டு வரப்பட இருக்கிறது. இதன் சட்ட முன்வடிவை 2 செனட் உறுப்பினர்கள் தாக்கல் செய்துள்ளனர்.

இது நிறைவேற்றப்பட்டு அமுலுக்கு வந்தால் இனி அதிக அளவில் வெளிநாட்டினர் குடியேற முடியாது.

அமெரிக்க குடியுரிமை பெற்று நிரந்தரமாக இருப்பவர்களின் எண்ணிக்கையை 50 வீதமாக குறைக்கும் திட்டத்துடன் இந்த சட்டம் வருகிறது.

இதனால் குறிப்பாக இந்



தியர்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். ஏற்கனவே பல ஆண்டுகளாக அங்கு தங்கி இருக்கும் இந்தியர்கள் அமெரிக்க குடியுரிமை பெறமுடியாத நிலை ஏற்படும் எனத் தெரிய வருகிறது. (இ-7)

# அமெரிக்க குண்டு வீச்சில் பின்லேடன் கூட்டாளி பலி

(டமாஸ்கஸ்)

அமெரிக்கா நடத்திய தாக்குதலில் பின்லேடன் கூட்டாளியான அபுஹனி அல் மஸ்கி உட்பட 11 அல்-கொய்தா தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பின்லேடன் ஆப்கானிஸ்தானில் பதுங்கி இருந்த போது, அவனுடன் நெருங்கிய கூட்டாளியாக இருந்தவன் அபுஹனி அல்மஸ்கி.

இவன், ஆப்கானிஸ்தானில் அல்-கொய்தா படைகளுக்கு பயிற்சி கொடுக்கும் தளபதியாக செயற்பட்டு வந்தான்.

தற்போதைய அல்-கொய்தா தலைவன் அல்சவஹாரிக்கும் இவன் நெருக்கமானவனாக இருந்தான். அண்மையில் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறிய இவன் சிரியாவில் அல்-கொய்தா படையினருடன் சேர்ந்து தாக்குதல் நடத்தி வந்தான்.

தற்போது சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்க படைகள் விமான தாக்குதல் நடத்தி வருகின்றன. இதில், இத்லிப் என்ற இடத்தில் அல்-கொய்தா தீவிரவாதிகள் பதுங்கி இருப்பது அமெரிக்க படைகளுக்கு தெரிய வந்தது.

இதையடுத்து அந்த இடத்தை குறிவைத்து 2 தடவை விமானம் மூலம் வெடிகுண்டு வீசப்பட்டது. இதில், அவர்கள் தங்கி இருந்த இடம் வெடித்துச் சிதறியது. இதற்குள் சிக்கி இருந்த 11 அல்-கொய்தா தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அதில் அபுஹனி அல்மஸ்கியும் ஒருவன் என்று தெரிய வந்துள்ளது. இந்த தகவலை அமெரிக்க இராணுவ தளபதி ஜெப் டேவிஸ் உறுதிப்படுத்தியுள்ளார். (இ-7)

# போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமில்லை

## வெளிவிவகார அமைச்சர் மங்கள கூறுகிறார்

(கொழும்பு)

**போர்க்குற்ற பொறுப்புக் கூறலுக்கான நீதிப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்பட மாட்டார்கள் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

வெளிநாட்டுச் செய்தியாளர்களை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொறுப்புக்கூறலுக்கான நீதிப் பொறிமுறை, வெளிநாட்டு பங்களிப்புடன் கூடிய உள்நாட்டு பொறிமுறையாகவே இருக்கும்.

ஆனால் நிச்சயமாக வெளிநாட்டு நீதிபதிகள் இதில் இடம்பெறமாட்டாரகள். ஏனென்றால் அதற்கு நாட்டின் சட்டங்களை மாற்றவேண்டும்.

வெளிநாட்டு பங்களிப்புக்கு நாம் எதிரானவர்கள் அல்ல. ஆனால், வெளிநாட்டு நீதிபதிகளை நியமிப்பதென்றால், நாட்டின் நீதித்துறைச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

நம்பகமான, சுதந்திரமான உள்நாட்டு பொறிமுறை ஒன்றை அமைக்கும் எமது யோசனையை ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

எத்தகைய நீதிப் பொறிமுறையை உருவாக்குவது என்பது குறித்து தீர்மானிக்கும் உரிமை இலங்கைக்கு



இருப்பதாக, ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் இலங்கைக்கான பயணத்தின் போது கூறியிருந்தார்.

நாம் பொறுப்புக்கூறல் பொறிமுறை தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கு அளித்த வாக்குறுதியில் இருந்து குத்துக்கரணம் அடிக்கவில்லை.

போர்க்குற்ற விசாரணை தொடர்பாக வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுகிறது.

அதனையே ஜெனிவாவில் கோரவிருக்கிறோம்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# 'எமக்கு யாரும் படிப்பிக்க தேவையில்லை'

## உயர்கல்வி அமைச்சர் கிரியெல்ல கருத்து

(கொழும்பு)

இலவசக் கல்வியை நாங்களே ஆரம்பித்தோம். அது பற்றி எமக்கு யாரும் படிப்பிக்கத் தேவையில்லையென உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து, சைற்றம் கல்லூரி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"சைற்றம் மருத்துவக் கல்லூரி தொடர்பில் நீதி மன்றம் அளித்த தீர்ப்பினை எம்மால் மாற்ற முடியாது. ஆனால், அந்தத் தீர்ப்புத் தொடர்பில் மேன் முறையீடு செய்ய முடியும்.

நாட்டில் கல்வித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். வெளிநாட்டில் உள்ள வர்கள் இங்கு வந்து, கல்விகற்க ஆர்வமாகவுள்ளனர்.


இந்த வருடத்துக்குள் இரண்டு வைத்தியக் கல்லூரிகளைப் 'புதிதாக அமைக்க நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். வயம்ப மற்றும் ருவன் புரவில் இரண்டு மருத்துவ கல்லூரி கள் இந்த வருட இறுதிக்குள் திறந்து வைக்கப்படும். இவை இரண்டும் அரசாங்க மருத்துவக கல்லூரிகளாக இருக்கும்.

நாட்டில் வைத்தியசாலை ஒன்றை அமைப்பது மிகவும் கடினம். அதற்கு அதிக நிதி தேவைப்படும். இங்கு கல்லூரிகளை அமைக்க விரும்பும் நிறுவனங்கள், வைத்தியசாலைகளை அமைக்க முன்வருவதில்லை.

எனவே, அரசாங்க வைத்தியசாலைகளிலேயே, அவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மக்களின் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் முன்வர வேண்டும்

## டக்ளஸ் எம்.பி. வலியுறுத்து



வடக்கு மக்களின் காணிப் பிரச்சினையை வைத்து சிலர் சுயலாப அரசியலில் ஈடுபடுகின்றனர். காணியற்ற மக்களின் பிரச்சினையைத் தீர்க்க, அரசாங்கம் முன் வரவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிதி அமைச்சின் கட்டளைச் சட்டங்களின் கீழான கட்டளைகளை அங்கீகரிப்பதற்கான பிரேரணைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"வலி. வடக்கு பிரதேசத்தில் பொது மக்களின் காணிகள் இன்னும் விடுவிக்கப்படாமல் உள்ளன என்றும் அவர் தெரிவித்தார். மக்களின் காணிப்பிரச்சினையை வைத்து சிலர் சுயலாப அரசியலை நடத்திச் செல்கின்றனர். அவர்கள் இதனை விடுத்து மக்களின் காணிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கேப்பாப்பிலவு, பிலவுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களில் 22.9 குடும்பங்களுக்குச் சொந்தமான 6.65 ஏக்கர் காணி இன்னும் படையினரின்வசம் உள்ளது. அதனை விடுவிக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

மக்களின் காணிகளைப் பெற்றுக்கொடுக்க காணிக் கச்சேரிகளை நடத்துமாறு நான் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றேன். தமது சொத்துகளை உறுதிப்படுத்த, அடையாளம் காண முடியாத மக்களும் உள்ளனர். காணி, சொத்து ஆவணங்கள் சேதமடைந்த, அழிவடைந்த நிலையிலும் மக்கள் உள்ளனர். அவர்களுடைய காணிகளைப் பெற்றுக்கொடுக்க உரிய வழிமுறையை உருவாக்க வேண்டும்.

யாருடைய காணிகளில் மற்றவர்கள் உள்ளனர், விவசாய நிலங்களில் வேறு பயிர்ச்செய்கை மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு பல பிரச்சினைகள் காணப்படுகின்றன" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# இன்று ஒரு தகவல்

## பெரிய இடத்து சிநேகிதங்கள்

அந்தந்த உயரங்களில் உள்ளவர்கள் அந்தந்த உயரங்களில் தாம் நட்பு வைத்து கொள்கிறார்கள். மிக அபூர்வமாகவே மிகச் சாதாரண நிலையில் உள்ளவர்கள் மிக உயர்ந்த நிலையில் உள்ளவர்களுடன் நட்பு கொள்ள முடிகிறது.

இத்தகைய நட்புமே தாமரை இலை மீதான தண்ணீர் போல இருக்கிறதே தவிர இறுக்கமாக இருப்பதில்லை. நன்கு பழகுவதாகக் காட்டிக் கொண்டாலும் மனதளவில் இவர்களுக்குள்ளே ஒரு பெரிய இடைவெளி இருக்கத்தான் செய்கிறது.

இதற்கு காரணமில்லாமலில்லை. ஆழ்மட்டத்திலுள்ள பலருக்கு இவர்களுடன் பழகத் தெரியவில்லை. பெரிய இடத்து நட்பு என்றாலே அமயஞ் சமயத்திற்கு உதவுவார்கள் என்று நெருங்கிப் பழக முயற்சி செய்கிறார்கள்.

பெரிய இடத்துக்காரர்களோ நம்மை இவன் நன்கு மதிக்கிறான், நாம் சொல்லுகிறபடியெல்லாம் கேட்கிறான். அடிக்கடி நம்மை புகழ்ந்து பாடி இருக்கிறான். இவன் நமக்குப் பயன்படுவான் என்று கணக்குப் போட இடமிருக்கிறது. இப்படிப் பெரிய இடத்து நட்பைப் பெற்றவர்கள் ஓர் அடிப்படையான சில உண்மைகளைப் புரிந்து கொள்வது நல்லது.

அவை என்னென்ன?

பிடுங்கித் தின்பவர்கள் நடுவே நாம் விதிவிலக்காக இருக்க வேண்டும். விண்ணப்ப மனுவை நீட்டியபடி இருக்கும் கும்பலிலிருந்து நாம் விலகி இருக்க வேண்டும். நாம் பழகுவது எந்தவிதமான எதிர்பார்ப்பையும் வைத்து அல்ல என்பதைச் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் இவர்களுக்கு உணர்த்தியபடி இருக்க வேண்டும். நம்மைச் சுரண்டவே இந்த வேசமெல்லாம் என அவர்கள் எண்ண ஒரு சிறிதும் இடம் தந்து விடக்கூடாது.

மொத்தத்தில் இவரால் நமக்கு எந்த விதத் தொந்தரவும் இல்லை. இவரது நட்பு நட்புக்காகவே என அவர்கள் எண்ண இடமிருக்க வேண்டும்.

இந்த நல்ல அபிப்பிராயத்தை முதலில் பெற்று விட்டால் நாமே வேண்டாம் வேண்டாம் என்று சொல்லும் அளவிற்கு உதவ இவர்கள் முன் வருவார்கள்.

எனினும் இது முக்கியமில்ல. வேறு சில முக்கியமான விடயங்கள் உள்ளன.

யாரையும் நெருங்க விடாத இந்தப் பெரிய மனிதர் இவரிடம் மட்டும் எப்படிப் பிரியமாக இருக்கிறார் என்று நம்மைச் சுற்றியுள்ளவர்களை வியக்க வைக்க வேண்டும்.


நம் வீட்டு விசேடங்களுக்கு இவர்கள் வரப்போக இருப்பதும் பலர் மத்தியில் நம் கையை மட்டும் பிடித்துக்கொண்டு என்ன சௌகரியமா? என்று இவர்கள் கேட்பதும் தாம் நமக்கு முக்கியம்.

பெரிய இடத்துச் சிநேகிதங்களால் கிடைக்கக் கூடிய பெருமையையும் பாதுகாப்பு உணர்வையும் கௌரவத்தையும் பெரிதாக எண்ணாமல் சிறுசிறு உதவிகளைக் கேட்டுக் கொண்டு இந்த நட்பை ரயில் நட்பைப் போல் ஒரு நாள் நட்பாக ஆக்கிக் கொள்கிறார்கள் உலகம் புரியாதவர்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 2

*(08.02.2017 பகுதி 2 இன் தொடர்ச்சி)*

20. 

நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்?
............. ....................................

21. மேலே ஒரு சிறிய சதுரத்தின் பரப்பளவு ஒரு சதுர சென்ரிமீற்றர் எனின் முழு உருவின் சுற்றளவு யாது?..............................................

22. 

இக்கடிகாரம் பிற்பகல் வேளை 10 நிமிடங்கள் முந்தி ஓடுகிறது எனின் கடிகாரம் காட்டும் சரியான நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.
.........................................................

23. 


உருவில் உள்ள உருளையில் இருக்கும் தட்டையான மேற்பரப்புக்கள் எத்தனை?
...................................................

24. 12cm நீளமும் 1cm அகலமும் கொண்ட ஆறு செவ்வகக் கீலங்கள் ஒவ்வொன்றும் 3cm அளவில் ஒன்றன்மீது ஒன்று வைத்து தொடராக ஒட்டும்போது கிடைக்கும் கீலத்தின் மொத்த நீளம் யாது?
............................................................................

25. பொதியொன்றில் 18 இனிப்புக்கள் வீதமுள்ள 5 பொதிகளும், 12 இனிப்புக்கள் வீதமுள்ள 3 பொதிகளும் உள்ளன. எல்லாமாக எத்தனை இனிப்புக்கள் உள்ளன? ........................................

26. தொட்டி ஒன்றின் கொள்ளளவு 36 l ஆகும். அதில் 1/4 பங்கிற்கு நீர் உள்ளது. தொட்டியில் 3/4 பங்கிற்கு நீர் நிரப்ப வேண்டுமாயின் எவ்வளவு நீர் தொட்டியில் நிரப்பப்பட வேண்டும்?
.......................................................

27. உருவில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் உள்ள வெற்றிடத்தை நிரப்புக.




| இருந்து | வரைக்கும் | தூரம் |
|---|---|---|
| கொழும்பு | அம்பாந்தோட்டை | 230 Km |
| கொழும்பு | மாத்தறை | 140 Km |
| காலி | அம்பாந்தோட்டை | 135 Km |
| காலி | மாத்தறை | ......Km |

28. 1750g பருப்பு சம அளவு கொண்ட 10 சரைகளாக கட்டப்பட்டது. இரு சரைகளில் உள்ள பருப்பின் மொத்த நிறை யாது?
..........................................


29. குறித்த தொகை மாணவர்கள் ஒரு வரிசையில் நின்றிருந்தனர். முன்புறமாகப் பார்க்கையில் கண்ணன் 8 ஆவதாகவும் பின்பக்கத்திலிருந்து பார்க்கையில் கண்ணன் 17ஆவதாகவும் இருந்தான். வரிசையில் நின்ற மாணவர்கள் எத்தனை பேர்?
........................................

(30புள்ளிகள்)

♦ **மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. காற்றின் மூலம் பரம்பலடையும் தாவரம்?
1) மரமுந்திரிகை 2) தேக்கு 3) கொய்யா 4) எருக்கலை


31. இத்தையல் முறைக்கு வழங்கும் பெயர்?



1. சங்கிலித் தையல் 2. நரம்புத்தையல்
3. கம்பளித் தையல் 4.பூத்தையல்


32. மூல வர்ணங்கள் என அழைக்கப்படுவன?
1) சிவப்பு, நீலம், பச்சை 2) மஞ்சள், நீலம், வெள்ளை
3) சிவப்பு, நீலம், மஞ்சள் 4) மஞ்சள், நீலம், பச்சை

33. இலங்கைப்படத்தில் A,B இனால் குறித்துக் காட்டப்படும் தரைத்தோற்ற உறுப்புக்கள் முறையே?




1) தாழ்பிரதேசம், மலைப் பிரதேசம்
2) மலைப் பிரதேசம், வயற்பிரதேசம்
3) பிரதான ஆறுகள், மலைகள்
4) இடங்கள், எல்லைகள்

34. காந்தம் பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றது. இக்காந்தத்தின் பெயர் என்ன?



1. வட்டக் காந்தம் 2. பரிலாடக் காந்தம்
3. U வடிவக் காந்தம் 4. சட்டக் காந்தம

35. இலங்கைக்கே உரித்தான பறவை எது?
1. மயில் 2. கிவி 3. காட்டுச்செண்பகம் 4. கழுகு

36. குழந்தைப் பருவத்தில் பால் குடித்து வளர்வது?
1) நாகணவாய் 2) வௌவால் 3) கிவி 4) இரட்டைவாற் குருவி

37. மின்னல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மிகவும் பாதுகாப்பாக இருக்கும் முறை?
(1) மரத்தின் நிழலில் நிற்றல்
(2) சமவெளியான இடத்தை நோக்கி ஓடுதல்
(3) வீட்டில் கதிரை மீது இருத்தல்
(4) உயரமான இடத்தில் ஏறி நிற்றல்

38. சூரியனுக்கு மிக அண்மையில் இருக்கும் கோள் எது?
1) பூமி 2) புதன் 3) செவ்வாய் 4) வியாழன்

39. காந்தத்தினைக் கிட்டக் கொண்டு வரும்போது காந்தத்தினால் கவரப்படாத பொருள் எது?
1) இரும்பு ஆணி 2) தகரப்பேணி 3) குண்டூசி 4) பித்தளை

40. இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படும் குறியீடாக இருப்பது,
1) அரசமிலை 2) சூரியன் 3) மயில் 4) காட்டுக்கோழி

41. இலங்கையின் மிகவும் உயரமான நீர்வீழ்ச்சி எது?
1) தியலும 2) துன்கிந்த 3) பம்பரகந்த 4) அபர்டீன்


42. "வானம் என்னும் திரையிலே - நீல
வண்ணம் அடித்தோர் ஆராமோ? ....." எனும் பாடலைப் பாடியவர்?
1) அழ.வள்ளியப்பா 2) அப்துல் காதர்
3) கவிஞர் வாகரை வாணன் 4) தேசிகவிநாயகம்பிள்ளை

43. கார்த்திகை, வேட்டைக்காரன், பெருங்கரடி ஆகிய பெரிய உடுக்கோலங்களைக் காணக்கூடிய மாதங்கள்?
1) மாசி, பங்குனி 2) மாசி , வைகாசி
3) கார்த்திகை, மார்கழி 4) சித்திரை, வைகாசி

44. சந்தையில் பொதி செய்யப்பட்ட பொருட்களை வாங்கும்போது நீங்கள் முதலில் கவனத்தில் கொள்ளவேண்டியது எது?
1) காலாவதித் திகதி 2) பொதி செய்த திகதி
3) உற்பத்தித் திகதி 4) விற்கப்படும் திகதி

45. தரமற்ற தேயிலையைத் தண்ணீரில் இட்டால் தோன்றும் நிறம்?
1) கபிலம் 2) மண்ணிறம் 3) இளங்கபிலம் 4) இளம் மஞ்சள்

46. மின்காந்தத் தொழிற்பாட்டில் அதிகமான குண்டூசியைக் கவரக் கூடிய உரு எது?



# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 2

47. தாவரத்திற்குப் பூவிலிருந்து கிடைக்கும் பயன்?
1) அழகூட்டல் 2) நறுமணத்தைப் பரப்பல்
3) இனத்தைப் பரப்ப உதவுதல் 4) தாவரத்தின் ஆயுட் காலத்தைக் கூட்டல்

48. கண்டக் கழலை நோய்க்கு மிகப் பிரதான காரணம் யாது?
1) கல்சியக் குறைபாடு 2) விற்றமின் A குறைபாடு
3) அயடீன் குறைபாடு 4) இரும்புச் சத்துக் குறைபாடு

49.இலங்கை மின்சார சபை என்பதைக் குறிக்கப் பயன்படும் குறியீடு எது?

1) 2) 3) 4)

50. வடமேல் மாகாணத்தினுள் அடங்கும் மாவட்டம் யாது?
1).குருநாகல் 2) பதுளை 3) அநுராதபுரம் 4) அம்பாந்தோட்டை

51. அவுஸ்திரேலியாவின் தேசிய சின்னம்?
1) பண்டா 2) கங்காரு 3) கிவி 4) மயில

52. பின்வரும் விளையாட்டுக்களில் சுவட்டு நிகழ்ச்சி அல்லாதது எது?
1) சட்டவேலி 2) 75 மீற்றர் ஓட்டம்
3) நீளம்பாய்தல் 4) அஞ்சலோட்டம்

53. புரதச்சத்து அதிகமாகவுள்ள தாவரவுணவு
1) மரவள்ளிக் கிழங்கு 2) மீன்
3) வல்லாரை 4) சோயாஅவரை

54. பூச்சியொன்றின் மிகப் பெரிய உடற்பாகம்?
1) கால் 2) தலை
3) வயிறு 4) நெஞ்சு

55. மணல் மண்ணில் காணக்கூடிய இயல்புகளில் ஒன்று எது?
1) பயிர்ச்செய்கைக்கு உகந்தது. 2) போசணைப் பொருட்கள் அடங்கியது.
3) நீரைத்தேக்கும் இயல்புடையது. 4) காற்றிடைவெளி கூடியது.

56. ஓரிகாமி ஆக்கம் என்பது?
1) கோடுகள் மூலம் வரையப்படும் ஆக்கம்
2) கடதாசியைக்கரைத்துச் செய்யப்படும் ஆக்கம்
3) வித்துக்களைப் பயன்படுத்திச் செய்யும் ஆக்கம்
4) கடதாசியை மடித்துச்செய்யப்படும் ஆக்கம்

57. படத்தில் காணப்படும் பறவை எது?



1. காகம்
2. பருந்து
3. நீர்க்காகம்
4. மரங்கொத்தி

58. எரிந்துகொண்டிருக்கும் நெருப்பினுள் காய்ந்த உப்புக்கட்டி ஒன்றை இடும்போது நடைபெறுவது யாது?
1) உப்புக்கட்டி உருகும் 2) உப்புக்கட்டி சத்தத்துடன் வெடிக்கும்.
3) உப்புக்கட்டி நன்கு எரியும் 4) தீ அணைந்துபோகும்.

59. தொற்று நோய் (பிரதேசம் பூராகவும்) பரவும் போது உடனடியாக எவருக்கு அறிவிக்கவேண்டும்?
1) பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு
2) மருத்துவமனை அதிகாரிக்கு
3) பாடசாலை அதிபருக்கு
4) பொதுச்சுகாதாரப் பரிசோதகருக்கு

(30புள்ளிகள்)

## பகுதி 2 இற்கான விடைகள்

(1) 1) எண்ணிய முடிதல். நல்லவே எண்ணல் (பொருத்தமானது)
2) தெளிந்த 3)உடன் மறைதல் 4) அறிவு
5) பனி 6) அன்னாய் / அன்னை
(2) 1) கறி 2) கைம்மாறு 3) பயிற்சி
(3) 1) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
2) இலங்கைப் போக்குவரத்துச்சபை 3) தேசிய கல்வி நிறுவகம்

(4) 1) பதற்றக்காரன் 2) அனுபவமில்லாத கல்வியறிவு / பயனற்ற கல்வியறிவு 3) தந்திரமாய்ப் பேசுதல்
(5) 1) தேசாபிமானி / நாட்டுப்பற்றாளர் 2) சுயநலவாதி (3) அகிம்சை / வருத்தாமை / துன்புறுத்தாமை
(6) 1) ✓ 2) x 3) x
(7) 1) குண்டு 2) அளகு
(8) 1) Horse 2) Ruler
(9) 1) நான் உங்களுக்கு உதவலாமா?/ நான் உங்களுக்கு உதவ முடியுமா?
2) உமது / உங்களுடைய பெயர் என்ன?
(10) 1) Close your eyes 2) Let's go home
(11) 1) கலு ஜோல்ல 2) லேனா
(12) 1) அம்மா சமைத்துவிட்டாரா? 2) அதோ ஆசிரியர் வருகிறார்.

(13) 1) மம நான்ன (Dh) த?
(14) பொருத்தமான வாக்கியங்கள்

(15) ஐயாயிரத்து எழுபத்தொன்பது / ஐந்தாயிரத்து எழுபத்தொன்பது
(16) x
(17) 15 cm
(18) 5 மணித்தியாலம் 10 நிமிடங்கள்
(19) 8l 960ml
(20) 8/32, 1/4, 4/16
(21) 16 cm
(22) 14:25 மணித்தியாலயங்கள்
(23) 2
(24) 42 cm
(25) 126 இனிப்புக்கள்
(26) 18 l
(27) 45 km
(28) 350 g
(29) 24 பேர்

| | | |
|---|---|---|
| (30) 4 | (41) 3 | (52) 3 |
| (31) 3 | (42) 3 | (53) 4 |
| (32) 3 | (43) 2 | (54) 3 |
| (33) 1 | (44) 1 | (55) 4 |
| (34) 2 | (45) 1 | (56) 4 |
| (35) 3 | (46) 2 | (57) 3 |
| (36) 2 | (47) 3 | (58) 2 |
| (37) 3 | (48) 3 | (59) 4 |
| (38) 2 | (49) 2 | |
| (39) 4 | (50) 1 | |
| (40) 2 | (51) 2 | |

# வெலிக்கடை படுகொலைச் சம்பவம் குறித்து விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் தீர்மானம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் கொழும்பு - வெலிக்கடை சிறையில் இடம்பெற்ற படுகொலைக்கு காரணமானவர்கள் தொடர்பாக பொலிஸ்விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் தீர்மானம் எடுப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட 16 பேருக்கு தலா 5 இலட்சம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாவும் நட்டஈடாக வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில கூடியது.

பிரதமரிடம் வினா எழுப்பும் நேரத்தில் சபையில் எழுந்த ஜே.வி.பியின் தலைவரும், எதிர்க்கட்சி பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸாநாயக்க, கொழும்பு வெலிக்கடை சிறையில் இடம்பெற்ற படுகொலை தொடர்பாக வினா எழுப்பினார்.

கடந்த 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி வெலிக்கடை சிறைக்குள் நுழைந்த இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 27 பேர் வரை உயிரிழந்திருந்ததோடு 40 இற்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.

இந்தப் படுகொலைக்குப் பின்னால் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ர்ராஜபக்ஷ செயற்பட்டிருப்பதாக சிவில் அமைப்புக்கள் மற்றும் பலரும் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்தப் படுகொலையில் உயிரிழந்த கைதிகளின் குடும்பத்தினருக்கும், சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்கும் வழங்கப்படவேண்டிய நட்டஈடு குறித்தும் பிரதமரிடம் கேள்வி கேட்டார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவினால் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் திகதி குழு நியமிக்கப்பட்டது. ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் நிமல் நம்புவசம், நீதியமைச்சின் முன்னாள்செயலாளர் எஸ்.கே. லியனகே, முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அசோக்க விஜேதிலக ஆகியோரை உள்ளடக்கிய இந்தக் குழுவினால் தயாரிக்கப்பட்ட விசாரணை அறிக்கை ஜூன் மாதம் 9ஆம் திகதி நதியமைச்சரிடம் கையளிக்கபட்டுள்ளது.

அந்த அறிக்கையில் சம்பவத்தில் உயிரிழந்த 16 பேருக்கும் தலா 5 இலட்சம் ரூபாவும், காயமடைந்த 40 பேருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாவும் நட்டஈடாக வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதனை அமைச்சரவை அங்கீகாரம் பெற்று நடவடிக்கை எடுப்பதாக சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சரினால் எனக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பொலிஸ் அறிக்கை கிடைத்த பின்னர் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை அமுல்படுத்த கவனம் செலுத்தப்படும். மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிகாலத்தில் இடம்பெற்ற இந்த படுகொலையை அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் கண்டனம் தெரிவிக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-11)




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழக அரசியலில் திடீர் திருப்பங்கள் அதிகரிப்பு

# சசிகலாவை நிராகரிக்க வேண்டும்

## அ.தி.மு.க.வினருக்கு அவைத்தலைவர் மதுசூதனன் வேண்டுகோள்



(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ள அ.தி.மு.க. அவைத் தலைவர் மதுசூதனன், சசிகலாவை அ.தி.மு.க. வினர் நிராகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு ஆளுங்கட்சியான அ.தி. மு.க. வின் தலைமைப் பொறுப்பான பொதுச் செயலாளர் பதவிக்கு சசிகலா தேர்வு செய்யப்பட்டார். பின்னர் அதிரடியாக அவர் முதலமைச்சர் பதவிக்கு வரும் வகையில் சட்டமன்றக் கட்சி தலைவராக தேர்வு செய்யப்பட்டார். அவரது பதவியேற்பு விழாவிற்கான நடைமுறைகள் தொடங்கி உள்ள நிலையில் இராஜினாமா செய்த முதலமைச்சர் பன்னீர் செல்வம் சசிகலாவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கினார்.

சில எம்.எல்.ஏ.க்கள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் ஓ.பன்னீர்செல்வத்துக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், திடீர் திருப்பமாக கட்சியின் அவைத் தலைவர் மதுசூதனன் நேற்று மதியம், முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின் வீட்டிற்கு சென்று ஆதரவு தெரிவித்துள்ளார்.

பின்னர் அவர் ஓ.பன்னீர்செல்வத்துடன் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது மதுசூதனன் கூறியதாவது,

அ.தி.மு.க. காப்பாற்றப்பட வேண்டும். எம்.ஜி.ஆரால் தொடங்கப்பட்ட இயக்கத்தை காக்கவே முதலமைச்சர் பன்னீர்செல்வத்திற்கு ஆதரவு அளித்துள்ளேன்.

சசிகலாவை அ.தி.மு.க. வினர் நிராகரிக்க வேண்டும். ஜெயலலிதாவின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக கருதுகிறேன். ஜெயலலிதாவின் நம்பிக்கையைப் பெற்றவர் ஓ.பன்னீர்செல்வம். யாருடைய நிர்ப்பந்தமுமின்றி அவருக்கு ஆதரவு அளிக்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பின்னர் பேசிய முதலமைச்சர் பன்னீர்செல்வம், உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தபோதும் கழகத்தை வளர்க்க அரும்பாடுபட்டவர் மதுசூதன் என பாராட்டினார்.

முன்னாள் அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் பேசும் போது, கட்சியில் குடும்ப ஆதிக்கத்தை தடுக்க வேண்டும் என்று கூறியதுடன், எம்.ஜி.ஆருக்கு உறு துணையாக இருந்தவர் மதுசூதனன் என்றும் பாராட்டினார்.

ஓ.பன்னீர்செல்வம் மக்கள் புரட் சியை தொடங்கியிருப்பதாக முன்னாள் சபாநாயகர் பி.எச். பாண்டியன் தெரிவித்தார். (இ)

### பாரதச் செய்தி

## ஓ.பன்னீர்செல்வத்தை சந்திக்கும் திட்டம் தற்போது இல்லை: ஜெ.தீபா



தன்னுடைய வீட்டில் நிருபர்களுக்கு தீபா பேட்டி அளித்தபோது 'ஓ.பன்னீர் செல்வத்தை சந்திக்கும் திட்டம் தற்போது இல்லை' என்று தெரிவித்தார்.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் ஜெ.தீபா, எதிர்வரும் 24ஆம் திகதிக்கு பிறகு முழுவீச்சில் பொதுவாழ்க்கையில் இறங்கவிருப்பதையொட்டி, சென்னை, தியாகராயநகரில் உள்ள அவருடைய வீட்டுக்கு அவருடைய ஆதரவாளர்கள் தினசரி வந்து செல்கின்றனர். அந்தவகையில் நேற்று முன்தினம் கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்தவர்கள் வருகை தந்தனர். அவர்களுடன், தீபாவின் நெருங்கிய ஆதரவாளர்கள் சந்தித்து பேசினார்கள்.

முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம், தற்போதைய அரசியல் சூழ்நிலையில் ஜெ.தீபாவுக்கு அழைப்பு விடுக்கப்படும் என்று பத்திரிகையாளர்கள் சந்திப்பு கூட்டத்தில் கூறினார். இது குறித்து தகவல் அறிந்த ஜெ.தீபாவின் ஆதரவாளர்கள் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் தங்கள் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.

பின்னர் தன்னுடைய வீட்டில் நிருபர்களுக்கு தீபா பேட்டி அளித்தார். அப்போது நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு,

**கேள்வி:-** தமிழ்நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை குறித்து என்ன கூற விரும்புகிறீர்கள்?

**பதில்:-** யாரும் எதிர்பார்க்காத சூழ்நிலையில், அனைவருக்கும் அதிர்ச்சி அளிக்கும் வகையில் தான் இந்த செயல்கள் நடந்துள்ளன.

**கேள்வி:-** காபந்து முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் பத்திரிகையாளர்கள் சந்திப்புக் கூட்டத்தில் உங்களுக்கு அழைப்பு விடுத்ததாக கூறப்பட்டுள்ளதே?

**பதில்:-** நீங்கள் கூறும் இந்த தகவலை ஊடகங்களை பார்த்து தான் நானும் தெரிந்துகொண்டேன்.

**கேள்வி:-** நேரடியாக உங்களுக்கு யாராவது அழைப்பு விடுத்தார்களா?, அ.தி.மு.க. முக்கிய பிரமுகர்கள் யாராவது உங்களுடன் தொடர்பு கொண்டார்களா?

**பதில்:-** நேரடியாக என்னை யாரும் அழைக்கவில்லை. அதேபோல் அ.தி.மு.க. முக்கிய பிரமுகர்கள் யாரும் என்னை தொடர்பு கொண்டு பேசவில்லை.

**கேள்வி:-** தற்போதைய அரசியல் சூழ்நிலையில் உங்களுடைய திட்டத்தில் ஏதாவது மாற்றம் செய்ய உள்ளீர்களா?

**பதில்:-** திட்டமிட்டபடி, எதிர்வரும் 24ஆம் திகதி அரசியலுக்கான அறிவிப்பையும், கொள்கையையும் அறிவித்து, என்னுடைய அரசியல் பயணத்தை முழுவீச்சில் தொடங்குவேன். இதில் எந்த மாற்றமும் இல்லை.

**கேள்வி:-** காபந்து முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்துக்கும், தி.மு.க.வுக்கும் தொடர்பு இருப்பதாக கூறப்படுகிறதே?

**பதில்:-** அது வதந்தி தான். இதற்கு பதில் அளிக்க விரும்பவில்லை.

**கேள்வி:-** நீங்கள் காபந்து முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வத்தை சந்திக்க செல்லவிருப்பதாக கூறப்படுகிறதே?

**பதில்:-** அதுமாதிரியான எந்த திட்டமும் என்னிடம் தற்போது இல்லை.என்று அவர் பதில் அளித்தார். (இ-7)

## நான் ஜெயலலிதாவால் அடையாளம் காட்டப்பட்டவன் - ஓ.பன்னீர்செல்வம்

'தனக்கும், தி.மு.க.வுக்கும் எந்தவித ஒட்டோ, உறவோ கிடையாது' என்றும், 'நான் ஜெயலலிதாவால் அடையாளம் காட்டப்பட்டவன்' என்றும் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தந்தி டி.வி.க்கு கேள்வி-பதில் மூலம் அளித்த சிறப்பு பேட் டியில் கூறியிருப்பதாவது,

**கேள்வி:-** ஆளுநரிடம் கொடுக்கப்பட்ட உங்களது இராஜினாமாவை 'வாபஸ்' பெறுவீர்களா?

**பதில்:-** இராஜினாமாவை வாபஸ் பெறுவேன் என்ற வாதத்துக்கு உள்ளே நான் செல்லவில்லை. எந்த சூழ்நிலையில் இந்த கடிதத்தை (இராஜினாமா) கொடுத்தேன் என்பதற்கு சரியான விளக்கத்தை அம்மா நினைவிடத்தில் விளக்கமாக சொல்லி விட்டேன்.

அவரது எண்ணங்கள் மனநிறைவு பெறும் வகையில் நான் பணியாற்றிய காரணத்தினால் 13 வருடங்கள் கழித்தும் எனக்கு 2ஆவது முறையாக அம்மாவுக்கு சோதனை வந்த காலத்தில் இந்த பொறுப்பை எனக்கு தந்தார்கள் என்ற மனநிறைவு இருக்கிறது.

**கேள்வி:-** உங்கள் பின்னணியில் தி.மு.க. செயற்படுவதாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா குற்றம் சாட்டியுள்ளாரே?

**பதில்:-** எந்த அடிப்படையில் அந்த குற்றச்சாட்டை வைத்தார் என்று அவரிடம் தான் கேட்க வேண்டும். நான் எந்த தொழிலிலும் தி.மு.க. வுடன் இணக்கமாக சென்றது இல்லை. அனைவருக்கும் சரித்திரத்தை பின் னோக்கி சென்று பார்த்தால் நன்றாக தெரியும்.

நாங்கள் எதிர்க்கட்சியாகவும், தி.மு.க. ஆளுங்கட்சியாக இருந்த நிலையில் மிடாஸ் என்ற மதுபான ஆலைக்கு யார் அவர்களிடம் (தி.மு.க.) சென்று மதுபானங்களை அதிகமாக கொள்முதல் செய்ய வேண்டும் என்று பரிந்துரை செய்தார்கள் என்பது நாட்டு மக்களுக்கும் தெரியும்.

எனக்கும், தி.மு.க.வுக்கும் எந்தவித ஒட்டோ, உறவோ கிடையாது. நானும் மு.க.ஸ்டாலினும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்ததாக கூறி இருக்கிறார். மனிதனுக்கு மனிதர் அன்பு பாராட்டும் வகையில் அவர் சிரித்தால் நாம் சிரிக்கவேண்டும், அவர் புன்முறுவல் கொடுத் தால் நாம் புன்முறுவல் கொடுக்கவேண்டும். இதுதான் மனித பண்பு.

இந்த அடிப்படை தெரியாமல் கூடவா அம்மாவால் நான் இங்கு அடையாளம் காட்டப்பட்டு இருக்கிறேன், இது வியப்பாக இருக்கிறது. மனிதனுக்கும், விலங்குக்கும் வேறுபாடு சிரிப்பது தான். விலங்குக்கு சிரிக்க தெரியாது. மனிதர்களுக்கு தான் சிரிக்க தெரியும்.

**கேள்வி:-** உங்களை பொருளாளர் பதவியில் இருந்து நீக்கம் செய்து, அப்பொறுப்புக்கு திண்டுக்கல் சீனிவாசன் நியமனம் செய்யப்பட்டு உள்ளாரே? அதுபற்றி உங்கள் கருத்து?

**பதில்:-** ஏற்கனவே சட்ட பிரச்சினை இருக்கிறது. கட்சிக்கு ஒரு அசாதாரண சூழல் ஏற்படும் போது, தற்காலிகமாக பொதுச்செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தான் பொதுச்செயலாளரை நாம் தேர்ந்தெடுத்தோம். அது கட்சியின் நடைமுறை. பொதுச செயலாளர் சட்டபூர்வ மான அங்கீகாரம் பெற்றவர் என்ற நிலை எப்போது வரும் என்றால், எம்.ஜி.ஆர். கட்சியை உருவாக்கும்போது கழக சட்டவிதியின் படி, கழக அடிப்படை உறுப்பினர் அனைவரும் பொதுச்செயலாளரை தேர்வு செய்ய வேண்டும் என்ற போது தான்.

அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பொதுச் செயலாளருக்கு தான் கழக உறுப்பினர்களை நியமிக்கவும், நீக்குவதற்கும் உரிமை இருக்கிறது. அந்த கோணத்தில் பார்த்தால் நீங்களே இந்த முடிவை பற்றி தெரிந்து கொள்வீர்கள்.

**கேள்வி:-** முதலமைச் சர் பதவிக்கான உரிமையை ஆளுநரிடம் கோருவீர்களா?

**பதில்:-** பொறுத்திருந்து பாருங்கள்.

**கேள்வி:-** அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு இன்னும் 4 ஆண்டுகளுக்கு மேல் பதவிக்காலம் இருக்கிறது. எனவே, அவர்கள் யாரை கைகாட்டுகிறார்களோ அவர்கள் தான் முதலமைச்சராக முடியும். மக்கள் இன்னொரு முறை வாக்களிக்கும் நிலை ஏற்படவில்லையே?

**பதில்:-** சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதி மக்களின் மனநிலையை அறிந்து, ஜெயலலிதாவின் ஆன்மாவுக்கு, ஜெயலலிதா எந்த நோக்கத்திற்காக இந்த இயக்கத்தை ஆரம்பித்து கட்டுப்பாட்டோடு இயக்கத்தை நடத்தினார்களோ அவை எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். அதே கட்டுப்பாட்டோடு அவரகள் மனச்சாட்சிப படி நடந்தால் நான் மீண்டும் முதலமைச்சர் என்று பதவியேற்கும் நல்ல சூழல் உருவாகும். இதை நான் அவர்களுக்கு வேண்டுகோ ளாகவே விடுக்கிறேன்.

**கேள்வி:-** 131 எம்.எல்.ஏ.க்கள் அவர்களது பக்கம் ஆதரவாக இருக்கும்போது, உங்கள் பக்கம் குறைந்தது 25 சட்டமன்ற உறுப்பினர்களாவது வந்திருந்தார்கள் என்றால், அவர்களுடைய கூற்று கேள்விக்குறி ஆகியிருக்கும். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லையே?

**பதில்:-** பொறுத்திருந்து பாருங்கள்.

**கேள்வி:-** முதலமைச்சரின் முயற்சி தனிக்கட்சி அல்ல என்று புரிந்துகொள்ள லாமா?

**பதில்:-** உறுதியாக.

**கேள்வி:-** உண்மையான அ.தி.மு.க. உங்கள் தலைமையில் தான் இருக்கிறது என்று நினைக்கிறீர்களா?

**பதில்:-** உண்மையான அ.தி.மு.க., ஜெயலலிதாவினுடைய அ.தி.மு.க. உறுதியாக நல்லவர் பக்கம் இருக்கும். அதற்குரிய சாதகமான சூழ்நிலை உருவாகும்.

மேற்கண்டவாறு அவர் பதிலளித்தார். (இ-7)

## முதல்வர் பன்னீர்செல்வம் நினைத்தாலும் இராஜினாமாவை திரும்பப்பெற முடியாது



முதலமைச்சர் பன்னீர் செல்வத்தால் தன்னுடைய இராஜினாமாவை திரும்பப்பெற முடியாது என்று முன்னாள் அட்டார்னி ஜெனரல் சோலி சொரப்ஜி கருத்து தெரிவித்துள்ளார். தமிழகத்தில் தற்போது நிலவி வரும் அரசியல் சூழல் குறித்து முன்னாள் அட்டார்னி ஜெனரல் சோலி சொரப்ஜி பல்வேறு கருத்துக்களை கூறியுள்ளார்.

அதில், முதலமைச்சர் பன்னீர்செல்வத்தால் தன்னுடைய இராஜினாமாவை திரும்பப்பெற முடியாது என்று தெரிவித்துள்ளார். மேலும் சோலி சொரப்ஜி தெரிவிக்கையில்,

தமிழகத்தில் தற்போது வினோதமான அரசியல் சூழல் நிலவி வருகிறது. சசிகலா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு அடுத்த வாரம் வரவுள்ள நிலையில் ஆளுநர் காத்திருப்பதில் தவறில்லை.

தீர்ப்பு வருவதற்கு வாரங்களோ, மாதங்களோ இல்லை. வெள்ளி அல்லது திங்கள ன்று தீர்ப்பு வரவிருப்பதால் காத்திருக்கலாம். நல்ல காரணங்களுக்காக ஆளுநர் பதவியேற்பை ஒத்தி வைக்கலாம்.

முதலமைச்சர் இராஜினாமா கடிதத்தை கொடுத்துவிட்டார். அதனை ஆளுநரும் ஏற்றுக் கொண்டு விட்டார். இதன் பின்னர் இராஜினாமாவை திரும்பப்பெற முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாராளுமன்றத்தில் குழப்பம்; ஆசனத்தில் ஏறிய கூட்டு எதிரணி

பாராளுமன்றத்தின் நேற்று முன்தின அமர்வின் போது ரஞ்சன் ராமநாயக்க பதில் கூற முற்பட்டதால் சபையில் பல மணி நேரத்திற்கு குழப்பம் ஏற்பட்டிருந்தது.


இந்திக் அநுருத்த ஹேரத் காணி தொடர்பிலான கேள்வியை எழுப்பும் போது ரஞ்சன் ராமநாயக்க குறித்த பிரச்சினை தொடர்பில் பதில் வழங்க முயன்ற வேளை கூட்டு எதிரணி உறுப்பினர்கள் கூச்சலிட்டதால் சபையில் குழப்பம் ஏற்பட்டது.

இவ்வாறு காணி தொடர்பான கேள்விகளின் போது காணி அமைச்சர் மற்றும் அதன் பிரதி அமைச்சர்களே அதற்கு பதிலளிக்க வேண்டும் என்பது பாராளுமன்ற நிலையியல் கட்டளையில் உள்ளது. ஆனால் ரஞ்சன் ராமநாயக்க பதில் கூற முற்பட்டதால் ஆசனத்தில் ஏறி கூட்டு எதிரணியினர் கூச்சலிட்டனர்.

அத்துடன் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க எழுந்து, குறித்த கேள்விகளுக்கு அமைச்சராக உள்ள கயந்த கருணாதிலகவே பதில் வழங்க வேண்டும் என்றும் வேறு ஒருவர் பதில் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

இதன்காரணமாக சபையில பிரதமர் எழுந்து, பாராளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தான் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு அனுமதி வழங்குவதாக தெரிவித்தார்.

இடையில் குறுக்கிட்ட சபாநாயகர் புதிய விடயங்களைச் சபையில் கொண்டு வர இடமளிக்க முடியாது எனக் கூறி, குறித்த கேள்விகளுக்கு அமைச்சர் கயந்தவை பதில் கூறுமாறு தெரிவித்திருந்தார். (இ-3)



கேலிச்சித்திரம்

# மைத்திரி தனது நண்பர் ராஜிதவை காப்பாற்ற முயற்சிக்கின்றார்- அநுர





(கொழும்பு)

தனது நண்பரும், சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரட்னவை பாதுகாக்கும் நோக்கிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சைற்றம் சர்ச்சை தொடர்பில் எவ்வித கருத்தையும் வெளியிடாமல் மௌனியாக இருப்பதாக ஜே.வி.பி. குற்றம்சாட்டியுள்ளது.

சைற்றம் கல்வி நிறுவனத்தில் மாணவர்களை இணைத்துக்கொள்ளக் கூடாதென தற்போதைய ஜனாதிபதி, சுகாதார அமைச்சராக இருந்த சமயத்தில் அவராலேயே நியமிக்கப்பட்ட குழு வலியுறுத்தியிருந்த நிலையில ஏன் அவர் அது தொடர்பில் கருத்து வெளியிடவில்லை என அக்கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

சைற்றம் பல்கலைக்கழக பிரதான நிறைவேற்று அதிகாரி மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் ஜே.வி.பியின் தலைமையகத்தில் நடைபெற்றது.


இந்த ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அநுர குமார திஸாநாயக்க "அரசாங்கம் மாணவர்களின், பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு காது கொடுக்காமல் சைற்றம் முதலாளியின் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க ஆரம்பித்துள்ளது.

ஆகவே இந்த சூழ்ச்சி நடவடிக்கைகளை உடனே நிறுத்திக்கொள்ள வேண்டும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் என்ன நடைபெற்றாலும் தனது கருத்தினை வெளியிட்டிருந்தார். ஒரு சிறிய சம்பவத்திற்குப் தனது கருத்தினை முன்வைத்திருந்தார். எனினும் சைற்றம் தொடர்பில் அவர் வாய் திறக்கவில்லை.

தற்போதைய ஜனாதிபதி சுகாதார அமைச்சராக இருந்த சந்தர்ப்பத்தில் அவர் நியமித்த குழுவே சைற்றத்தில் மாணவர்களை இணைத்துக் கொள்ளக்கூடாது என பரிந்துரைத்திருந்தது.

ஆகவே ஜனாபதிபதி உடனடியாக தனது கருத்தினை வெளியிட வேண்டும். அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கருத்து வெளியிடும் ஜனாதிபதி இந்த விடயத்தில் மௌனமாக இருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

அவர் தனது நண்பரை பாதுகாக்க முயற்சிக்கின்றார். ஜனாதிபதி மைத்திரிபால தனது நண்பர் ராஜித சேனாரட்னவை பாதுகாக்கும்பொருட்டு தன்னைச் சந்திக்க வரும் தரப்பினர், போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றார்' எனத் தெரிவித்தார். (இ-11)



# இராணுவ உதவியுடன் அரசைக் கவிழ்க்கச் சதி

## கலாநிதி விக்கிரமபாகு எச்சரிக்கை

சைற்றம் விவகாரத்தை பூதாகரப்படுத்தி இராணுவத்திலுள்ள ஒரு பிரிவினரையும் இணைத்துக் கொண்டு அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான தயார்படுத்தல் நடைபெறுவதாக நவசமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் விக்கிரமபாகு கருணாரட்ண எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே நவசமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் விக்கிரமபாகு கருணாரட்ண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படும் சதிகாரர்கள் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான வழிமுறைகளைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். எனினும் ஜனநாயக ரீதியாக பாராளுமன்றத்தினூடாக நல்லாட்சி அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது.

நாட்டில் சதி முயற்சிகளை தயார்படுத்துவதற்கு ஏராளமான நிதி தேவை. அதற்கான நிதியினையும் தற்போது சிலர் சேகரித்துக் கொண்டிருக்கின்றனர்.

தமது ஆதரவுக் குழுக்களுக்கு பணத்தை வாரி இறைதது வன்முறை நிலையினை தோற்றுவித்து நாட்டில் ஆட்சி மாற்றம் தேவை எனவும் இராணுவத்தை பலமாக்க வேண்டுமெனவும் கடும்போக்கு கருத்துகளை வெளியிட்டு சதி செய்து ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான திட்டம் தயார்படுத்தப்படுகிறது.

எனவே அது தொடர்பில் மக்கள் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறான சதிமுயற்சிகளுக்கு உட்பட்டுவிடக்கூடாது. மேலும கடந்தகால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு புத்திசாதுரியமாக நடந்து கொள்ள வேண்டும் என கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார். (செ-11)

# அமைச்சர் ஹக்கீம் மீது விசாரணை வேண்டும்

## உலமா கட்சி கோரிக்கை

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மீதும் தாருஸ்ஸலாம் பற்றியும், அக் கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் அக்கட்சியின் மசூரா சபை மௌலவிமார், விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என உலமா கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது,

"உலமா கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் மிக அதிகமாக முஸ்லிம் காங்கிரஸை விமர்சித்து வந்துள்ளது. அக்கட்சித்தலைமை முஸ்லிம் சமூகத்தை பச்சையாக ஏமாற்றுகின்றது என்றும் முஸ்லிம் சமூகத்தின் வாக்குகளை விற்று அனைவரும் சுகபோகம் அனுபவிக்கிறார்கள் என்றும் பலதடவை குற்றம்சாட்டினோம். இப்போது அவை யாவும் அக்கட்சிக்காரர்களாலேயே உண்மைப்படுத்தப் படுவதால் மு.கா. பற்றிய விமர்சனங்களை இறைவன் எம் மூலம் பேச வைத்துள்ளான் என்பதே உண்மை.

மது, மாது, கோடி என பல குற்றச்சாட்டுக்களை பசீர் சேகுதாவூத் முன்வைத்துள்ளார். இந்த நாட்டில் உள்ள எந்த ஒரு கட்சித்தலைவருக்கும் இத்தகைய மோசமான முற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதில்லை. அத்தனை மோசமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டும் மு.காவின் மசூரா சபையில உள்ள மௌலவிமார் மௌனமாக இருப்பது கவலை தருவதாகும். அவர்களின் மசூரா என்ற ஆலோசனையை பெற்றுத் தான் தலைவர் இத்தகைய பாதகங்களை செய்தாரா? என்ற கேள்வி எழுகிறது. பசீர் சேகுதாவூத் கட்சித் தலைவரை காட்டிக் கொடுத்துவிட்டார் என மு.கா. போராளிகள் குற்றம் சாட்டுவதன் மூலம் மேலும் மேலும தலைவரதும் உயர்பீட உறுப்பினர்களினதும் சமூக விரோத செயல்களுக்கு துணை போகிறார்கள்.

கூட இருந்து குற்றம் செய்து விட்டு அதனை மறைக்கும் சமூகத்துரோகத்தை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. அந்த வகையில் இப்போதாவது ஞானம் பெற்று உண்மையை சொல்வதை உலமா கட்சி பாராட்டுகிறது.

அதேவேளை குற்றச்சாட்டை முன்வைத்த பசீரை இடைநிறுத்தியுள்ள முஸ்லிம் காங்கிரஸ் மோசமாக குற்றம் சாட்டப்பட்டுள்ள ஹக்கீமை இன்னமும் விசாரணைக்குட்படுத்தாமல் இருப்பது அவர்களின் சுயநலனை காட்டுகிறது.

இப்படியான குற்றச்சாட்டுக்களுக்கு வெளிநாடுகளில் முஸ்லிமல்லாத தலைமைகள் கூட உட்படுத்தப்பட்டால் அவர்கள் உடனடியாக தமது பதவிகளை இராஜினாமா செய்து விட்டு விசாரணைக்கு முகம் கொடுப்பதையும் காண்கிறோம்.

ஆகவே பசீரால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் முதல் கடமை அக்கட்சியின் உயர்பீட மௌலவிமார்களுக்கு உண்டு என்பதை அவர்கள் உணர்வதுடன் குற்றச்சாட்டுகள் பகிரங்கத்துக்கு வந்தால் அவற்றை பகிரங்கமாக விசாரிப்பதே நபி வழி என்பதால் உடனடி விசாரணை செய்து சமூகத்தின் மானம் காக்க முன்வர வேண்டும் என உலமா கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-3)

# ஆடுகளத்தை வழங்கினால் போட்டியை நடத்தத்தயார்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

ஆடுகளத்தை வழங்கினால் போட்டியை நடத்தத் தயார் என தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்த வேண்டுமாயின் அரசாங்கம் அது குறித்த சட்டத் திருத்தங்களையும் வர்த்தமானி அறிவிப்பினையும் வெளியிட வேண்டுமென அவர் தெரிவித்தார்.

இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் ஆணைக் குழுவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டத்தின் தொழில்நுட்பக் கோளாறுகளுக்கு தீர்வு காணப்பட்டு; நாடாளுமன்றில் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் [illegible] நாட்களுக்குள் தேர்தலை நடத்த முடியும்.

போட்டியை நடத்த வேண்டுமாயின் ஆடுகளத்தை சரியாக செய்ய வேண்டும். ஆடுகளத்தை உரிய முறையில் செய்து கொடுத்தால் போட்டியை நடத்த முடியும்.

தேர்தலை நடத்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படாத போதிலும் தேர்தல் நடத்துவதற்கு அறிவிக்கப்பட்டால் நிதியை வழங்க முடியும் என திறைசேரி இணங்கியுள்ளதாக மகிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)




# ஆல்ப்ரெட் ராஜாவும் பிச்சைக்காரனும்

...அவர் கொடுத்த ஆடை அழுக்காகவோ, கிழியவோ இல்லை. ஆனாலும், அந்த யாசகனுக்குப் பழைய உடைகள் மீது நாளுக்கு நாள் பிடிப்பு அதிகமானது. மக்களும் அவனது ராஜ உடையைக் கவனிக்காமல், அந்த கந்தல் மூட்டையையே பார்த்தனர். அவனைக் "கந்தல் பொதி கிழவன்" என்றே அழைத்தனர்.

இறக்கும் தருணத்தில் இருந்த அவனைப் பார்க்க, அரசர் வந்தார். அவனது தலைமாட்டில் இருந்த கந்தல் மூட்டையைப் பார்த்து, அரசரின் முகம் சோகமாவதைக் கண்டான்.

ஆரம்பத்திலேயே அரசர் சொன்ன செய்தி நினைவுக்கு வந்தது. பழைய துணி மூட்டை, அவனது வாழ்நாளின் மொத்த மகிழ்ச்சியையுமே பறித்து விட்டது.

அந்த யாசகனிடம் மட்டுமல்ல, நம் எல்லோரிடமும் அப்படியரு மூட்டை இருக்கிறது.

அதனுள் விரோதம், கோபம், கவலை, சோகம், பகைமை... எனப் பல பெயர்களில் வேண்டாத பொருட்கள் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாப்பதிலேயே கவனம் செலுத்துவதால், நமது வாழ்வில் வீசுகின்ற மகிழ்ச்சித் தென்றலை நுகர முடியாமல் இருக்கிறோம். நம்முடைய தீராத கோபம், எத்தனை இன்பம் வந்தாலும், அதை ஏற்றுக் கொண்டு ஆனந்தப்பட முடியாமல் செய்து விடுகிறது.

அரண்மனைகளில்கூட, இன்றும் பலர் பிச்சைக்காரர்களாகவே வாழ்கின்றனர். அனாதை ஆஸ்ரமங்களில் அரசர்களாக வாழ்வோரும் உண்டு.



மனதில் இருக்கிறது மகிழ்ச்சி. வாழ்க்கை தினமும் நமக்கு புதுத் துணிகளை நெய்து தருகிறது. நமக்கோ, பழைய துணிகளில் ஒரு நூலைத் தூக்கி எறியவும் மனமில்லை. நம் வீடுகளில், என்றோ வாங்கிய பல பொருள்கள் நிரம்பி இருக்கின்றன.

அவற்றால் எந்தப் பயனும் இல்லாவிட்டாலும், தூக்கி எறிய மனமில்லை. வீடையே குடோனுக்கு இணையாக மாற்றிக் குடித்தனம் நடத்துபவர்களும் இருக்கின்றனர்.

இல்லத்தை மட்டுமல்ல, உள்ளத்தையும் குடோனாக்கி பழைய சரக்குகளைப் பத்திரப்படுத்தினால், அவற்றின் அழுகல் நாற்றம் உதடுகளின் வழியே சொற்களாகவும் கரங்களின் வழியே செயல்களாகவும் வெளிப்பட்டு வேதனையையே விநியோகிக்கும் வெளிச்சத்தை வழங்காது.

***நீதி:- மகிழ்ச்சியாக இருப்பதற்குக் காரணங்கள் தேவையே இல்லை.***

*(முற்றும்)*




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1355 - இங்கிலாந்து, ஒக்ஸ்போர்டில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலவரத்தில் 63 மாணவர்களும், 30 பொது மக்களும் கொல்லப்பட்டனர்.
- 1763 - பிரான்ஸ் கியூபெக் மாநிலத்தை ஐக்கிய இராச்சியத்திற்கு அளித்தது.
- 1798 - லூயி அலெக்சாண்டர் பேர்த்தியர் ரோமைக் கைப்பற்றி அதனை பெப்ரவரி 15 இல் ரோமன் குடியரசாக அறிவித்தான்.
- 1815 - கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றும் நோக்கில் பிரித்தானியர் கண்டியினுள் நுழைந்தனர்.
- 1846 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்கும் பஞ்சாபின் சீக்கியருக்கும் இடையில் இடம் பெற்ற போரில் பிரித்தானியர் வெற்றி பெற்றனர்.
- 1863 - அலன்சன் கிரென் தீயணைக்கும் கருவியின் காப்புரிமம் பெற்றார்.
- 1870 - கிறிஸ்தவப் பெண்கள் இளையோர் அமைப்பு (YWCA) அமைக்கப்பட்டது (நியூயோர்க் நகரம்).
- 1897 - மடகஸ்காரில் மதச் சுதந்திரம் அறிவிக்கப்பட்டது.
- 1914 - யாழ்ப்பாணத்தின் அரச அதிபராக சார்ள்ஸ் கம்பர்லாண்ட் நியமிக்கப்பட்டார்.
- 1931 - புது டில்லி இந்தியாவின் தலைநகராக்கப்பட்டது.
- 1954 - வியட்நாம் போர்: அமெரிக்க அதிபர் டுவைட் ஐசன்ஹோவர் வியட்நாம் மீது ஐக்கிய அமெரிக்கா தாக்குதல் நடத்தும் என எச்சரித்தார்.
- 1964 - ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் கரையில் HMAS மெல்பேர்ன் என்ற விமானந்தாங்கிக் கப்பலும் HMAS வொயேஜர் என்ற கடற்படைக் கப்பலும் மோதிக் கொண்டதில் 82 பேர் கொல்லப்பட்டனர்.
- 1969 - தமிழ் நாட்டின் முதலமைச்சராக மு. கருணாநிதி தெரிவு செய்யப்பட்டார்.
- 1991 - வன்னி மீதான இலங்கை இராணுவத்தினரின் வன்னி விக்கிரம படையெடுப்பு விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டதுடன் உலங்குவானூர்தி ஒன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டது.
- 1996 - சதுரங்கக் கணினி "டீப் புளூ" உலக முதற்தரவீரர் காரி காஸ்பரோவை வென்றது.
- 2009 - தகவல் தொடர்பு செயற்கைக்கோள்கள் இரிடியம் 33, காசுமசு-2251 ஆகியன விண்வெளியில் மோதி அழிந்தன.

### பிறப்புகள்

- 1887 - ஜோன் என்டேர்ஸ், நோபல் பரிசு பெற்றவர். (இ. 1985)
- 1890 - போரிஸ் பாஸ்டர்நாக், நோபல் பரிசு பெற்றவர். (இ. 1960)
- 1902 - வால்ட்டர் பிராட்டன், நோபல் பரிசு பெற்றவர். (இ. 1987)
- 1910 - ஜோர்ஜஸ் பயர், நோபல் பரிசு பெற்றவர். (இ. 1969)

### இறப்புகள்

- 1837 - அலெக்சாண்டர் புஷ்கின், ரஷ்ய எழுத்தாளர், கவிஞர். (பி. 1799)
- 1912 - ஜோசப் லிஸ்டர், பிரித்தானிய அறிவியலாளர். (பி. 1827)
- 1918 - ஏர்னெஸ்டோ மொனெட்டா, நோபல் பரிசு பெற்ற இத்தாலியர். (பி. 1833)
- 1923 - வில்ஹெம் ரொண்ட்ஜென், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானியர். (பி. 1845)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 150 | 90 | 200 | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 180 | 300 | 180 | 200 | 180 | 200 | 200 |
| தக்காளி | 60 | 100 | 60 | 70 | 70 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 120 | 60 | 60 | 70 | 80 | 60 |
| கோவா | 20 | 100 | 20 | 30 | 30 | 60 | 40 |
| கரட் | 80 | 100 | 50 | 80 | 60 | 120 | 40 |
| பூசணி | 60 | 100 | 80 | 50 | 50 | 60 | 50 |
| புடோல் | 60 | 100 | 40 | 80 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 40 | 60 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 150 | 80 | 120 | 120 | 140 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 70 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 400 | 100 | 160 | 200 | 300 | 150 |
| வெண்டிக்காய் | 140 | 200 | 60 | 200 | 160 | 160 | 250 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 50 | 80 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 300 | 300 | 300 | 240 | 300 | 240 | 300 |
| லீக்ஸ் | 80 | 100 | 60 | 80 | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 60 | 100 | 40 | 40 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 100 | 400 | 130 | 160 | 160 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 550 | 1000 | 500 | 600 | 100 | 800 | 700 |
| போஞ்சி | 80 | 200 | 40 | 120 | 100 | 200 | 100 |
| கத்தரிதம்புள்ள | 70 | 200 | 60 | 120 | 40 | 100 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 40 | 30 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 | 200 | 140 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 60 | 60 | 60 | 50-70 | 50 |
| இராசவள்ளி | 180 | 100 | 150 | 200 | 180 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 60 | 100 | 60 | 60 | 80 | 120 | 200 |
| முள்ளங்கி | 50 | 100 | 30 | 60 | 60 | 60 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 100 | 10 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 10 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | 50 | 60 | 60 | 80 | 60 |

> அடங்காப்பிடாரியான பெண் இருந்தால் பத்து வீடுகளுக்கு நாய்களே தேவையில்லை.
>
> – பங்களாதேஷ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பன்னீர்ச்செல்வம் எதிர் சசிகலா தமிழகத்தின் அடுத்த ஜல்லிக்கட்டு

தமிழகத்தின் முதல்வராக இருந்த செல்வி ஜெயலலிதா அவர்களின் மரணத்துக்குப் பின்னால் அதிமுகவின் ஒற்றுமைப் பலம் என்பது கேள்விக் குறியாயிற்று.

ஜெயலலிதா அம்மையாரின் மரணத்தில் கூட சந்தேகம் எழும் அளவிலேயே அவரின் இறுதிக் காலம் அமைந்து போனது.

முதல்வர் ஜெயலலிதா அவர்கள் அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதில் இருந்து அவர் பற்றிய விபரங்களை மக்கள் அறிய முடியாமல் போயிற்று.

தமிழகத்தின் 8 கோடி மக்களின் தாயாக இருந்த ஜெயலலிதா பற்றிய விபரங்களை பொது மக்களுக்குத் தெரிவிப்பதில் சசிகலாவும் அவர் தரப்பும் அறவே விரும்பவில்லை.

ஏதோ ஜெயலலிதா குணமடைந்து வருகிறார். பாதி இட்லி சாப்பிட்டார் என்பதெல்லாம் ஊடகச் செய்திகளேயன்றி அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதில் இருந்து அவரின் மரணம் வரையில் அவர் தமிழ்நாட்டு மக்களுக்கு எதுவும் சொல்லவில்லை.

தவிர, முதல்வர் ஜெயலலிதா வயோதிபம் காரணமாக இறக்கக்கூடிய வாய்ப்பு இருந்திருக்குமாக இருந்தால் கூட, அதிமுகவின் அடுத்த தலைமை யார் என்ற தீர்மானங்களை எடுத்திருக்க முடியும். ஆனால் ஜெயலலிதா இறந்து விடுவார் என்று எவரும் நினைத்திலர்.

சரி இப்படியான நினைப்புத்தான் இல்லை என்றால் எழுபது நாட்களுக்கு மேற்பட்ட சிகிச்சையிலாவது ஜெயலலிதா அம்மையார் இடைசுகம் பெற்று தனது கட்சி பற்றியோ அல்லது அடுத்த முதலமைச்சர் பற்றியோ கருத்துரைத்து அவை ஊடகங்களிலும் பதிவாகி இருந்தால், அதிமுக தனது ஒற்றுமைப் பலத்தைத் தொடர வாய்ப்பிருந்திருக்கும்.

ஆனால் எட்டுக்கோடி மக்களின் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவின் மரணம் கூட மர்மமானது என்று மற்றவர்கள் பேசுவதற்கும் ஊகிப்பதற்குமான வாய்ப்புக்கள் இருக்கும் போது அதிமுகவின் அடுத்த தலைவர் யார்? தமிழகத்தின் அடுத்த முதல்வர் யார்? என்ற கேள்விகளுக்கு விடை காண்பது கடினமே.

எதுவாயினும் முதல்வர் பதவியில் இருக்கும்போதே இரண்டு தடவைகள் தனது பதவியை இன்னொருவருக்குக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஜெயலலிதாவுக்கு ஏற்பட்டபோது அவர் அந்த பதவியை இரண்டு தடவையும் ஓ. பன்னீர்ச்செல்வத்திடமே ஒப்படைத்தார். அவ்வாறாயின் பன்னீர்செல்வம் மீது ஜெயலலிதாவுக்கு நன்மதிப்பு இருந்தது என்பது உறுதியாகிறது.

இது ஒருபுறம் இருக்க ஜெயலலிதாவின் உற்ற தோழியாக சசிகலா இருந்தபோதிலும் ஜெயா சந்தித்த அவமானங்களும் சிறை வாசங்களுக்கும் காரணமாக இருந்தவர் சசிகலா என்பது மறுக்க முடியாத உண்மை.

சசிகலா அவர்கள் ஜெயலலிதாவுக்கு நண்பியாக கிடைக்காமல் இருந்திருந்தால் சிலவேளை அவர் இப்போதும் உயிருடன் இருந்திருப்பார் என்று நினைக்குமளவிலேயே சசிகலாவின் நட்பு இருந்துள்ளது.

எது எவ்வாறாயினும் சசிகலாவும் அவர் குடும்பமும் சண்டித்தனப் போக்கில் செயற்பட்டு வருவது உறுதியாகிறது.

இதன் ஒரு சாட்சியமாக தமிழகத்தின் தற்போதைய முதலமைச்சர் ஓ. பன்னீர்ச்செல்வம் அவர்களே இருக்கிறார் எனலாம்.

எனது இராஜினாமா கடிதம் என்பது என்னைக் கட்டாயப்படுத்திப் பெறப்பட்டது என முதல்வர் ஓ. பன்னீர்ச்செல்வம் கூறியதில் இருந்து சசிகலா தரப்பின் போக்கு எத்தன்மையது என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எது எவ்வாறாயினும் சசிகலா எதிர் பன்னீர்ச்செல்வம் என்ற சமகாலப் போட்டிச் சூழ்நிலை ஜல்லிக்கட்டுக்கான போராட்டத்துக்குப் பின்பான அடுத்த கட்டமான போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் குழப்பங்களையும் தமிழகத்தில் ஏற்படுத்தும் என்பது மறுக்க முடியாத உண்மை.

எல்லாவற்றுக்கும் தமிழகத்தின் ஆளுநரின் முடிவுகளும் அறிவிப்புக்களுமே தீர்வு தரும் என்பதால், தமிழக ஆளுநரின் நடவடிக்கைகளைப் பொறுத்தே தமிழகத்தின் எதிர்கால அமைதி தீர்மானிக்கப்படும்.

எது எவ்வாறாயினும் சசிகலாவும் பன்னீர்ச்செல்வமும் மோதிக் கொண்டால் தமிழகத்து அரசியலில் அமைதியின்மை ஏற்படும் என்பதற்கு அப்பால், முதல்வர் ஜெயலலிதாவின் மரணம் குறித்த மர்மங்களும் ஊகங்களும் தமிழக அரசியல் பரப்பில் மிகப் பெரும் பேசுபடு பொருளாக அமைவது திண்ணம்.

இந்நிலைமை பன்னீர்ச்செல்வத்துக்குச் சாதகமாகவும் சசிகலாவுக்குப் பாதகமாகவும் அமையும்.

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கரணவாய்)

அம்பன் அ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும். பாடசாலை அதிபர் வி. பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) ஆர். தமிழ்மாறன், சிறப்பு விருந்தினராக அம்பன் கிராம அலுவலர் எஸ். தோமஸ் யூட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(3-60)

▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 11ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் பே. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) சண். தயாளன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் சொ. லோகேஸ்வரன், பிரசித்தி பெற்ற சட்டத்தரணியும் பழைய மாணவனுமான வி.திருக்குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲

(யாழ்ப்பாணம்)

யாழ்.தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் பரமானந்தம் சுதானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நவரத்தினம் பாஸ்கரன் (பழைய மாணவர்), சிறப்பு விருந்தினர்களாக திருமதி கலாறஞ்சினி வைகுந்தநாதன் (பழைய மாணவர்), திருமதி கலாறஜனி சர்வானந்தன் (பழைய மாணவர்),கௌரவ விருந்தினர்களாக முன்னாள் உப அதிபர் செல்வி மகாலட்சுமி மாரிமுத்து, துறைசார் விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲

(கரணவாய்)

யாழ்.வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 11ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் திருமதி. தேவராணி நவரட்ணம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், சிறப்பு விருந்தினராக சிவன் பவுண்டேசன் நிறுவுநர் வேலாயுதம் கணேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் பரிசில்களை திருமதி சிவஞானகுமாரி சிறிதரன் வழங்குவார். (3-60)

▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲

(கரணவாய்)

யாழ்.வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் திருமதி பாலராணி ஸ்ரீதரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சிற்றம்பலம் புஸ்பலிங்கம் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் பரிசில்களை திருமதி புஸ்பகுமாரி புஸ்பலிங்கம் வழங்குவார். (3-60)

# மஹோற்சவம் ஆரம்பம்

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய மஹோற்சவம் நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.35 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 6.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம் பெற்று அன்றைய தினம் இரவு மகா சிவராத்திரிப் பூஜைகள் இடம்பெறவுள்ளன. 25ஆம்திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# அன்டிகனி நாடகம் இன்று

(யாழ்ப்பாணம்)

கிரேக்கத்தின் தலைசிறந்த அவலச்சுவை நாடக ஆசிரியராகிய சோ. பகிளீஸினால் எழுதப்பட்ட அவலச்சுவை நாடகங்களில் ஒன்றான அன்டிகனி இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிரதான வீதியிலுள்ள திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நாடக அரங் கக் கல்லூரி தயாரிப்பாக மேடையேற்றப்படவுள்ளது.

க.பொ.த உயர்தர மாணவர்களின் கலைத்திட்டத்திலுள்ள இந் நாடகம் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாய் அமையும்.

நாடகம் இரு மணி நேர ஆற்றுகை யாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# புதிய பதிவுகள் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையமூடாக எந்திரவியல் கற்கை நெறிக்காகப் பதிவு செய்த மாணவர்களுக்காக நாளை சனிக்கிழமை நடத்தப்படவிருந்த புதிய பதிவுகள் யாவும் பிற்போடப்பட்டு எதிர்வரும் 14, 15, 16 ஆகிய தினங்களில் நடைபெறும் என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ




### இலஞ்சம் வாங்கினால் சாபம்

❖ தண்ணீர் கிடைக்காத இடத்தில் ஒருவருக்கு குடிக்க தண்ணீர் வழங்குபவன் அவருக்கு வாழ்வு அளித்தவன் போல் ஆவான்.

❖ பொருளாதார சமத்துவம் இயற்கைக்கு எதிரானது. ஆனால், செல்வம், நீதியின் அடிப்படையில் பங்கிடப்பட வேண்டும்.

❖ தனது கரங்களால் உழைத்து உண்ணும் உணவை விடச் சிறந்த உணவு எதுவுமில்லை.

❖ இறை நம்பிக்கை கொண்டவர்களே! பன்மடங்காகப் பெருகி வளரும் வட்டியை உண்ணாதீர்கள். இறைவனுக்கு அஞ்சுங்கள். நீங்கள் வெற்றி பெறக்கூடும்.

❖ உங்களில் ஒருவர் மற்றொருவரை நம்பி ஏதேனும் பொருளை ஒப்படைத்தால் நம்பப்பட்டவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொருளைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

❖ இலஞ்சம் வாங்குபவர், கொடுப்பவர், அதற்கு ஏற்பாடு செய்பவர் ஆகியோர் மீது இறைவனின் சாபம் உண்டாகும்.


❖ எவருக்கும் உரிமை இல்லாத நிலத்தை எவர் உழுது பயிரிடுகிறாரோ, அந்நிலத்தின் மீது அவருக்கே அதிக உரிமை உண்டு.

- வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து

# கற்கைநெறிகள் ஆரம்பம்

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் புதிய கல்வியாண்டு 2017 ஆம் ஆண்டுக்கான பின்வரும் சான்றிதழ் தர கற்கை நெறிகளுக்கு அனுமதிகள் வழங்கக் கூடியதாக உள்ளதால் கற்க விரும்புவோர் விரைவாக எமது கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் தொடர்பு கொண்டு கற்கை நெறிகளுக்கான அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும். தொலைபேசி இலக்கம் 021 221 2403.

கற்கை நெறிகள் இலத்திரனியல், கைத்தொழில்துறை மின்னியலாளர், வீட்டுப்பாவனை மின் உபகரணங்கள் திருத்துதல், மின்னியலாளர், வெல்டிங் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## எந்தெந்தப் பொருட்களை தானம் செய்தால் என்ன பலன்?

❖ அன்னதானம், பால், தயிர் இவற்றை தானம் செய்தால் மனம் நிம்மதியடையும், வாக்கு பலிதம் உண்டாகும், உடல் ஆரோக்கியம் பெரும். தீவினை கர்மாக்கள் நீங்கும்.

❖ வஸ்திர தானம் செய்தால், ஆயுள் விருத்தி உண்டாகும். மானம் காக்கப்படும். உப்பு.

❖ வெல்லம் இவைகளை தானம் செய்தால், சாப்பாட்டுக்கு பஞ்சம் வராது.

❖ பூசணிக்காயை தானம் செய்தால், சகல வியாதிகளும் விலகும். பித்ருக்களின் ஆசி பரிபூரணமாக கிட்டும், இஷ்ட சித்தி கைக்கூடும்.

❖ ஏழை கன்னிப் பெண்களுக்கு திருமணம் செய்து வைத்தால், இதுவரையில் எடுத்த அனைத்து ஜென்மங்களின் பாவங்கள் நிவர்த்தியாகும்.

❖ இசை வாத்திய கருவிகளை தானம் செய்தால், இந்திரனுக்கு நிகரான சுகபோகமான வாழ்க்கை அமையும் பொன் தானம், மோச்சத்தை கொடுக்கும்.

❖ தைலம், பருத்தி, துணி, பால் போன்றவை தானம் செய்தால், குஷ்ட ரோகம் உட்பட உடலில் இருக்கும் அனைத்து ரோகங்களும் நீங்கும்

❖ தீப தானம் செய்தால் கண் பார்வை பலப்படும். நல்ல எதிர்காலம் தேடி வரும். பிரச்சினைகளுக்கு விடிவு காலம் பிறக்கும். தயிர்சாதம் தானம் செய்தால் நல்ல பிள்ளைகளை பெறுவீர்கள். பிள்ளைகளின் எதிர்காலமும் மகிழ்சியாக அமையும்.

❖ தேன், பொன், நெய்தானம் செய்தால் சகல போகங்களையும் அனுபவிப்பார்கள்.

❖ இரும்பு, எண்ணெய், உளுந்து, பழங்கள், நீர் இவைகளை தானம் செய்தால், கஷ்டங்கள் விலகும். உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

# சுதந்திர தின சம்பியன் கிண்ணம் கொக்குவில் இந்திரா அணி வசம்







சுதந்திர தினத்தை முன்னிட்டு 521 ஆவது படைப்பிரிவின் அனுசரணையில் கோல்ட்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் கொக்குவில் இந்திரா அணி சம்பியன் கிண்ணம் வென்றது.

அண்மையில நடைபெற்ற இவ் இறுதிப்போட்டியில் பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக்கழகமும், கொக்குவில் இந்திரா விளையாட்டுக்கழகமும் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று வீனஸ் அணி முதலில் களத்தடுப்பினை மேற்கொண்டது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திரா அணி நிர்ணயிக்கப்பட்ட 15பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கையும் இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது.

வின்சன் 37 ஓட்டங்களையும் சுரேஸ் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வீனஸ் அணி சார்பாக கஜேந்திரன் மற்றும் நிரோசன் தலா 3 இலக்குகளையும் பிரதீப் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.


பதிலுக்கு 90 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய வீனஸ் அணி 13.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் வீனஸ் அணி சார்பாக பிரதீப் 32 ஓட்டங்களையும், திருவாரன் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இந்திரா அணி சார்பாக பிரி மற்றும் சுரேஸ் தலா 3 இலக்குகளையும், மயூரன், பானு தலா ஒவ்வோர் இலக்கினையும் கைப்பற்றினர்.

இறுதியில் இந்திரா அணி 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீனஸ் அணியினை வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

இறுதிப்போட்டி நாயகனாக இந்திரா அணியின் சுரேஸ், தொடர் நாயகனாக வீனஸ் அணியின் விவேக், அதிக ஆறு ஓட்டங்களை பெற்றவராக வீனஸ் அணியின் பிரதீப் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ் இறுதிப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக 521ஆவது படைப்பிரிவின் தளபதி கேணல். சுஜீவ கெட்டியாராச்சி, சிறப்பு விருந்தினர்களாக கோல்ட்ஸ்ரார் அணியின் ஆலோசகர் என். கஜேந்திரன் (ISA) மற்றும் கோல்ட்ஸ்ரார் அணியின் அனுசரணையாளரும் தர்சா தமிழ் பதிப்பக உரிமையாளருமாகிய ஆர். தனுசன், கௌரவ விருந்தினராக ரி. நிரோயன் (zonal manager of ceylinco life) கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தனர். (கு)











## மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியது வீனஸ், தெல்லிப்பழை கலைஒளி





கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் 60 ஆவது ஆண்டின் நிறைவினை முன்னிட்டு நடத்தும் மாவட்ட ரீதியிலான பட்டத்திற்கானமாபெரும் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகின்றது.

கடந்த 5 ஆம் திகதி திங்கட் கிழமையன்று மின்னொளியில் நடைபெற்ற தகுதிச்சுற்று ஆட்டத்தில் 8அணிகள் மோதின. இதில் வீனஸ் மற்றும் தெல்லிப்பழை கலைஒளி அணி மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றது.

இரண்டாம் சுற்றின் முதல் போட்டியாக மானிப்பாய் bright அணி எதிர் தெல்லிப்பழை கலைஒளி அணி மோதிக் கொண்டது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கலைஒளி அணி முதலில் துடுப்பாட்டத்தை மேற்கொண்டது. 7ஓவர் நிறைவில் 4 விக்கெட்டை இழந்து 69 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் bright அணி 7ஓவர் நிறைவில் 3 விக்கெட் இழப்பிற்கு 41 ஓட்டங்கள் மாத்திரம் பெற்றது. இறுதியில் 29 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியீட்டி மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றது தெல்லிப்பழை கலைஒளி அணி.

அடுத்த போட்டியில் கொக்குவில் அணி எதிர் பருத்தித்துறை வீனஸ் அணி மோதியது. நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய வீனஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. ஓரளவு ஓட்டங்களை கட்டுப்படுத்தியது கொக்குவில் AB அணி. 6 ஓவர் நிறைவில் 6 விக்கெட் இழப்பிற்கு 45 ஓட்டங்கள் பெற்றது. வீனஸ் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் AB அணி ஆரம்பம் முதலே சுற்றுத் தடுமாறியது.

அடுத்து வந்த வீரர்கள் சிறப்பாக ஆடியிருந்தாலும் வீனஸ் அணியின் பந்து வீச்சில் தடுமாறியது. இறுதி 7ஓவர் நிறைவில் 44 ஓட்டங்கள் மாத்திரம் பெற்றது. 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியீட்டி மூன்றாம் சுற்றுக்கு தகுதியானது வீனஸ் அணி. (க)

## சதுரங்கப் போட்டிகள் - 2017

இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் நொவிஸ் (NOVICE) பிரிவிற்கான சதுரங்கப் போட்டிகள் - 2017 ,இன்று வெள்ளிக்கிழமை மற்றும் (10,11,12) சனி , ஞாயிறு ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் ஆண், பெண் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ள முடியும்.

பங்கு பற்ற விரும்புபவர்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு முன்னர் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் போட்டிக்கான கட்டணத்துடன் யாழ். இந்துக் கல்லூரியில் சமுகம் தரும்படி போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## நல்லூர் பிரதேச செயலகத்தின் பெண்களுக்கான எல்லே போட்டி அரியாலை ஐக்கியம் சம்பியன்



நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் கடந்த 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற பெண்களுக்கான எல்லே போட்டியில் சம்பியனாகியது அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம். (கு)



பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் உள்ள கழகங்களுக்கு இடையிலான கரம் போட்டியில் வல்லியானந்தம் விளையாட்டுக்கழகம் 2 ஆம் இடத்தை தட்டிச் சென்றது. முதலாம் இடத்தை சென்தோமஸ் விளையாட்டுக்கழகம் பெற்றுக் கொண்டது. இரண்டாம் இடத்தினை பெற்ற வல்லியானந்தம் விளையாட்டுக்கழகத்தை படத்தில் காணலாம்.

## இராணுவ ஜீப் ...

யாழ்ப்பாணம் அரியாலை நெடுக்குளம் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரத கடவையில் இராணுவத்தினர் பயணித்த ஜீப் ரக வாகனத்துடன் புகையிரதம மோதியதில் சம்பவ இடத்திலேயே ஒரு இராணுவ வீரர் பலியாகியதுடன் மேலும் ஒரு இராணுவ வீரர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இயக்கச்சி 513ஆம் டிவிசன் - விஜயபாகு ரெஜிமென்ட் இராணுவ முகாமில் கடமைபுரியும் மதவாச்சியை சேர்ந்த ஏகநாயக்க (வயது 26) சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன் கண்டி வீதி மாவட்டஹமவை சேர்ந்த புஸ்ப குமார (வயது 34) என்பவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவராவார்.

நேற்றைய தினம் காலை வாகன சுத்திகரிப்பை மேற்கொள்வதற்காக இயக்கச்சி இராணுவ முகாமில் இருந்து இரு இராணுவ வீரர்களும் நெடுங்குளம் பகுதியில் உள்ள வாகன சுத்திகரிப்பு நிலையத்தை நோக்கி ஜீப் ரக வாகனத்தில் பயணித்துள்ளனர்.

காலை 10 மணியளவில் மேற்படி பாதுகாப்பற்ற புகையிரத கடவையை அவர்கள் கடக்க முற்பட்ட வேளை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற யாழ் தேவி புகையிரதம் ஜீப் ரக வாகனத்தை மோதியதுடன் சுமார் 300 மீற்றர் தூரம் வரை வாகனத்தை இழுத்துச் சென்றுள்ளது.

இதில் சம்பவ இடத்திலேயே சாரதியான ஏகநாயக்க பலியாகியதுடன் மற்றைய வீரர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(செ-4, 9, 30, 85, 89)

## விடுவிக்கப்பட்ட ...

யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து விடுவிக்கப்பட்ட காணிகளில் மீள் குடியேறியுள்ள மக்களுக்கு வீட்டுத் திட்டத்தை விரைவாக வழங்குவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் பலாலியில் உள்ள யாழ் பாதுகாப்பு படை தலைமையகத்தில் நடைபெற்றது

குறித்த கலந்துரையாடல் தொடர்பாக யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காக 1950ஆம் ஆண்டு மற்றும் 1985ஆம் ஆண்டு காணி சுவீகரிப்பு நடவடிக்கை நடைபெற்றது. அதில் சிலர்தான் கொடுப்பனவுகளை பெற்றுள்ளார்கள் என்றும் ஏனையவர்களுக்கான நஷ்டஈடு வழங்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களின் சில காணிகள் இந்த வருடத்துக்குள் விடுவிப்பதற்கான சந்தர்பங்கள் இருப்பதாகவும் குறித்த கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக இடம்பெயர்ந்து முகாம்களில் உள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. அதில் மீள்குடியேறியுள்ள பகுதிகளில் மக்களுக்குரிய வீட்டுத்திட்டங்கள் அமைப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

ஏற்கெனவே கீரிமலைப் பகுதியில் 100 வீடுகள் கட்டப்பட்டு மக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் 33 வீடுகள் கட்டப்பட்ட நிலையில் உள்ளது. அதனை தொடர்ந்து 225 வீடுகள் கட்டுவதற்குரிய நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

முகாம்களில் உள்ள காணி அற்றவர்களுக்கு காணி கொள்வனவு செய்து வழங்குவதாக கடந்த வருடம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்தவகையில் 251 பேர் காணி இல்லாதவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. அதில் 130 பேர் தமக்கான காணிகளை அடையாளம் காட்டியுள்ளனர்.

விரைவில் உரிய நடைமுறைகள் மேற்கொண்டு காணிகள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ராஜபக்ஷ, காணி அமைச்சின் மேலதிக செயலாளர் தயாரட்ண, யாழ் பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதி மகேஸ் சேனநாயக்க, யாழ் மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன், யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், தெல்லிப்பளை, உடுவில், கோப்பாய், பருத்தித்துறையைச் சேர்ந்த பிரதேச செயலர்கள், சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர், விலை மதிப்பீட்டு அதிகாரி உள்ளிட்ட பலர் மேற்படி கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தனர். (செ-9)

## சந்தேக நபர்களின் ...

ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தினை சேர்ந்த இரு மாணவர்கள் மீது கொக்குவில் குளப்பிட்டி சந்திக்கு அண்மையில் வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்திருந்தனர்.

இதனையடுத்து இச் சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தை சேர்ந்த ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணையானது யாழ். நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையிலேயே நேற்றைய தினமும் குறித்த வழக்கு விசாரணையானது யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்கரன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருந்த போது, குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வரும் குற்றப் புலனாய்வு பிரிவு பொலிஸார் விசாரணை தொடர்பான மேலதிக அறிக்கையை தாக்கல் செய்திருந்தனர்.

இதனை தொடர்ந்து குறித்த வழக்கு விசாரணையை எதிர் வரும் 23ஆம் திகதி வரை ஒத்தி வைத்ததுடன் அதுவரை குறித்த ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்களையும் விளக்கமறியலில் வைக்க நீதவான் எஸ்.சதீஸ்கரன் உத்தரவிட்டிருந்தார். (செ-4)

## இராணுவத்துக்கென...

முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பாக வட மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கில் காணி சுவீகரிக்கும் விடயத்தில் முதலமைச்சர் கவனத்தில் எடுக்கவேண்டும். ஏனெனில் காணி விடயத்தில் திரைமறைவில் காணி சுவீகரிப்பு நடைபெற்று வருகிறது. பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளருடன் யாழ் மாவட்ட செயலகத்தில் இன்றைய தினம் (நேற்று) கலந்துரையாடல் என தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் நாம் எதிர்ப்பு தெரிவிக்கவுள்ளோம் என அறிந்தவுடன் குறித்த கலந்துரையாடலை பலாலி பாதுகாப்பு தலைமையகத்தில் நடத்துகின்றனர்.

காணி தொடர்பான என்ன இணக்கப்பாடு எடுப்பதாக இருந்தாலும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளின் அனுமதி இல்லாமல் செய்ய முடியாது என அரச அதிபருக்கு திட்டவட்டமாக தெரிவித்திருந்தேன். அதனை மீறி முடிவுகள் எடுக்கப்பட்டால் அரச திணைக்களங்கள், படை முகாம்களை முடக்கி போராட்டங்கள் மேற்கொள்வோம்.

யாழ்ப்பாணத்தில் தற்போது 1600 ஏக்கர் காணியை சட்ட பூர்வாக சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் பதிலளித்த முதலமைச்சர், படையினர் யாராக இருந்தாலும் அவர்களுக்கு காணி தேவையென என்னிடம் வந்தால் இதுவரை அனுமதி வழங்கவில்லை. இனியும் வழங்க மாட்டேன் என தெரிவித்து வருகிறேன்.

அதனால் அவர்கள் நேரடியாக கொழும்பில் இருந்து அனுமதி எடுக்கிறார்கள் என கேள்விப்பட்டேன். அது எவ்வாறு எந்த சட்டத்தின் கீழ் மேற்கொள்கிறார்கள் என்று கவனத்தில் கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## கேப்பாப்பிலவு...

மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் போராட்டம் நடைபெறும் இடத்திற்கு விஜயம் செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 84 ஆவது அமர்வு நேற்றையதினம் மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சபையின் உறுப்பினர் ரவிகரனால் கேப்பாப்பிலவு போராட்டம் தொடர்பில் பிரேரணையொன்று கொண்டு வரப்பட்டது.

அதாவது கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தில் தற்காலிகமாகக் குடியேற்றப்பட்டிருக்கும் மக்கள் தங்களின் பூர்வீக கிராமங்களான கேப்பாப்பிலவு மற்றும் பிலவுக் குடியிருப்பு பகுதிகளில் குடியமர்த்தும்படி பல தடவைகள் பல்வேறு தரப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்து வந்திருந்தனர்.

அதேநேரம் பல தடவைகள் போராட்டங்களையும் மேற்கொண்டிருந்தனர். ஆயினும் இன்றுவரை முழுமையான தீர்வுகள் கிடைக்கவில்லை. இதனால் கடந்த 31ஆம் திகதி முதல் பிலவுக் குடியிருப்புக் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி விமானப்படை முகாமுக்கு முன்பாக இரவு பகலான தொடர்ச்சியான போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு பல தரப்பினர்களும் ஆதரவுகளை வழங்கி வருகின்றனர். எனவே அவர்களது கோரிக்கைகளை ஏற்று உரிய தீர்வினை ஜனாதிபதி பெற்றுக் கொடுக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கு சபையின் முதலமைச்சர் உட்பட ஆளும் மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஆதரவை தெரிவித்ததையடுத்து மேற்படி பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை விமானப்படையினர் வைத்திருக்கின்ற காணிகள் பொது மக்களின் காணிகள் என்றால் விடுவதாக பாராளுமன்றத்திலும் கூறப்பட்டிருக்கின்றது. அந்தக் காணிகள் பொது மக்களுடையதுதான் என்று பல தடவைகள் நாங்கள் கூறியிருக்கின்றோம். அக் காணிகள் பொது மக்களின் காணிகள் என்பதற்கான ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன.

அத்தகைய ஆதாரங்களை நாம் மக்களுக்கேகொடுக்கவேண்டும் அதே போன்றே புதுக்குடியிருப்பிலும் படையினர் வைத்திருக்கின்ற காணிகளை விடுவிக்க வலியுறுத்தி மக்கள் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். அக்காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் சபையில் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## வடக்கு தண்ணீர்...

யின் 84ஆவது அமர்வு நேற்றையதினம் அவைத்தலைவர் சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது அவைத் தலைவரின் சபை அறிவிப்பில் மேற்படி நீர் விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண சபையின் நீர்ப் பிரச்சினை தொடர்பில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட உள்ளதால் அது தொடர்பான சிறப்பு அமரவொன்றை நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் தவராசா மற்றும் உறுப்பினர்களான சிவாஜிலிங்கம் ஆகியோர் அவைத்தலைவருக்கு கடிதம் மூலம் கோரிக்கையொன்றை விடுத்திருந்தனர்.

குறித்த கடிதத்தை நேற்றைய அமர்வில் சுட்டிக்காட்டிய அவைத் தலைவர், சிறப்பு அமர்வொன்றை நடத்துவதற்கு இச்சபை அனுமதி வழங்க வேண்டுமென கோரியிருந்தார். எனினும் சுன்னாகம் நீர்ப் பிரச்சினை தொடர்பில் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கொன்று நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் அது தொடர்பான விடயத்தை இங்கு ஆராய்வது பொருத்தமற்றது.

இந்த வழக்கில் மற்றொரு வழக்கும் உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகையால் குறித்த சிறப்பு அமர்வை இப்போது நடத்துவது பொருத்தமற்றது என முதலமைச்சர் தெரிவித்தார்.

எனினும் குறித்த அமர்வு யாழ் மாவட்டத்தின் தண்ணீர்ப் பிரச்சினையை ஆராய்வதாக மட்டுமில்லாமல் வடக்கு மாகாணத்தின் தண்ணீர்ப் பிரச்சினைகளை ஆராய்வதாகவே அமையுமென சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, குறித்த அமர்வை அவசியம் நடத்தியே தீர வேண்டுமென வலியுறுத்தினார்.

மேலும் சுன்னாகம் நீர் தொடர்பில் பல்வேறு அறிக்கைகள் முறையற்ற விதத்தில் வெளியிடப்பட்டுள்ளன என்றும் அவற்றில் ஊழல்கள் நிறைந்திருப்பதாகவும் மல்லாகம் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த நிலையில் இது தொடர்பில் ஆராய்வதற்கு சிறப்பு அமர்வு அவசியமானது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக் கொண்டார்.

எனினும் இதற்கு எதிர்புத் தெரிவித்த முதலமைச்சர், குறித்த சிறப்பு அமர்வில் ஆராயப்படும் விடயங்கள் எந்த வரையறைக்குள் ஆராயப்படுமென்பதை சபைக்கு முன்னரே அறியத் தரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

சிறப்பு அமர்வில் ஆராயப்படும் விடயங்களை ஒரு வரையறைக்குள் நின்று ஆராய முடியாதென முதலமைச்சரின் கருத்தை நிராகரித்த எதிர்க்கட்சித் தலைவர் நீதிமன்றத்தின் வழக்குகள் முடிய பல காலம் எடுக்கலாம். அதுவரை மக்களுடைய அத்தியாவசிய பிரச்சினையான தண்ணீர்ப் பிரச்சினைகளை மக்கள் பிரதிநிதிகள் ஆராயாமல் இருப்பது எதிர்விளைவுகளை ஏற்படுத்துமென சுட்டிக்காட்டி சிறப்பு அமர்வொன்று அவசியமென மீண்டும் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண சபையில் ஆராயப்படும் அனைத்து விடயங்களும் நீதிமன்றத்தின் வழக்குகளோடு சம்மந்தப்பட்டவையாகவே இருக்கின்றன.

எனவே அவற்றையெல்லாம் கருத்திலெடுத்தோ செயற்படுகின்றீர்கள். அப்படியாயின் இச் சபையில் எந்த விடயமும் ஆராய முடியாது எனச் சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன், இது தொடர்பில் தீர்க்கமான முடிவொன்றை சபை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

தவநாதனின் கருத்தை மறுத்துப் பேசிய ஆளும்கட்சி உறுப்பினர் விந்தன், நீதிமன்றத்தில் இருக்கும் விடயத்தை சபை சரியா பிழையா என ஆராய்வது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும். ஒரு விடயம் தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு நீதிமன்றத்திற்கு உச்சபட்ச அதிகாரம் உள்ளது. எனவே நீதிமன்றத்தில் இருக்கின்ற விடயங்கள் பற்றி இங்கு பேசுவது பொருத்தமில்லை என்றார்.

இதன் பின்னர் சபை முடிவை அறிவித்த அவைத் தலைவர், உச்ச நீதிமன்றத்தில் பிறிதொரு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதாக முதலமைச்சர் கூறியுள்ளார். அது தொடர்பான ஆவணங்கள் எதிர்க் கட்சித் தலைவர் கேட்டதற்கிணங்க என்னிடம் அனுப்பி வைப்பார். அதனை நான் உறுப்பிர்களுக்கு அனுப்பி வைப்பதாக கூறினார்.

அத்தோடு எதிர்வரும் 23ஆம் திகதி வடக்கு தண்ணீர் பிரச்சினை தொடர்பில் சிறப்பு அமர்வும் நடத்தப்படும் எனவும் அவைத் தலைவர் அறிவித்தார். (செ-4)

## சுமந்திரன் பாதுகாப்பு...

இதனைத் தெரிவித்தார்.

சுமந்திரனுக்கு விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் உயிர் அச்சுறுத்தல் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் ஏற்கெனவே சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதாக தெரிவித்துள்ள சபாநாயகர், அவரது பாதுகாப்பு தொடர்பான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என சபையில் தெரிவித்தார். (செ-11)

## உள்ளூராட்சி மன்றங்...

வருடங்களுக்கு முன்னர் வழங்கிய அதிகாரங்களைத் தற்போது மீளப் பெறுவதென்பது யதார்த்த ரீதியாக உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளை முடக்குவதாகவே அமைகின்றது.

13ஆவது அரசியல் திருத்தத்தில் முழுமையாக மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட உள்ளூராட்சி எனும் விடயத்தில் மத்திய அரசின் இத்தகைய நடவடிக்கையானது அதிகாரத்தைப் பறிக்கும் ஒரு உள்நோக்க நடவடிக்கையாகவே மாகாண சபை கருதுகின்றது.

எனவே மத்திய அரசினால் தற்போது வெளியிடப்பட்டிருக்கின்ற புதிய சுற்றுநிரூபத்தை இரத்துச் செய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய சபையில் இந்தப் பிரேரணை ஏகமனதான தீர்மானமாக நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## கிழக்கில் இன்று...

னேஸ்வரன் பங்கேற்கிறார்.

தமிழ்மக்கள் பேரவை ஏற்பாடு செய்துள்ள கிழக்கில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியானது வடக்கில் பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் நடந்தது போன்று மட்டு. நகரிலும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை பேரினவாத அரசாங்கங்களால் தொடர்ந்து தமிழினத்திற்கு எதிராக ஏவப்பட்டு வரும் இன அடக்கு முறைகளுக்கு எதிராக இப்பேரணியின் முடிவில் பிரகடனம் வெளியிடப்படவுள்ளது.

கிழக்கில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் வர்த்தக சங்கங்கள் ஆதரவளித்துள்ள அதே வேளை பேரணியில் அணி திரளுமாறும் அழைப்பு விடுத்துள்ளன.

எழுக தமிழ் எழுச்சிப் பேரணியானது சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளை உலகறியச் செய்யும் ஒரே நோக்குடன் நடத்தப்படுவதால் மாணவர்கள் மற்றும் கல்விப்புலம் சார்ந்தோர் எழுக தமிழ் பேரணிக்கு ஆதரவளித்து பங்கேற்பதாக அறிவித்துள்ளனர். (இ-5)

## அரசியல் கைதிகள்...

ஆகியோரே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கடந்த 2009ஆம் ஆண்டு. கைது செய்யப்பட்டு கண்டி தும்பற சிறையில் இவர்கள் வைக்கப்பட்டிருந்தனர். இருவருக்கும் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு கொழும்பு, வவுனியா, கண்டி ஆகிய நீதிமன்றங்களில் வழக்கு நடைபெற்று வந்த நிலையில் இருவரும் நேற்றைய தினம் அனைத்து வழக்குகளிலும் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (செ-9)

## உள்ளூராட்சி...

வரப்பட்ட மேற்படி பிரேரணை ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது. அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 1985.03.01 ஆம் ஆண்டு 01ஆம் இலக்க சுற்று நிருபம் மூலம் உள்ளூர் அதிகார சபைகளுக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்கள் பாரிய நகர மற்றும் அபிவிருத்தி அமைச்சின் பணிப்பின் பெயரில் 2017.02.01இல் இருந்து மீளப் பெறப்படுவதாக 2017.01.23 ஆம் திகதிய 01.11 இலக்க சுற்று நிருபம் மூலம் மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசாங்கம் மாகாண சபைக்கு உள்ளூராட்சி மன்றங்களை நிர்வகிக்கும் அதிகாரங்களை 13 ஆவது திருத்தத்தின் மூலம் கையளிக்கும் போது உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட அதிகாரங்களை மீளப் பெறமுடியாது என்று மேற்படி திருத்தத்தின் 09ஆம் அட்டவணையில் 01 ஆம் நிரலில் தெரிவித்துள்ளது. ஆனால் அபிவிருத்தி அடைந்து வருகின்ற இந்தக் காலகட்டத்தில் மேலதிக அதிகாரங்களைக் கையளிக்க வேண்டிய நிலையில் நகர அபிவிருத்தி சபையானது 32

23ம் பக்கம் பார்க்க...


### ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0767070069

(7899) M.Suren

### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்



UK-550/=Kg

DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

### வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500
021 221 5656

உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட

அண்ணா அன் கோ

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்

எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்

### CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
follow us : cnrworldwideexpress

(சி-7515)

### காணி விற்பனை

இருபாலை கிழக்கு இராஜபாதை வீதியில் இருபாலை கோண்டாவில் வீதி சந்திக்கும் மூலையில் தென்கிழக்கு பக்கமாக இரண்டாவது காணி 5 நிலப்பரப்பு, கிணறு மற்றும் மோட்டார் tank, மூன்று தென்னை மரங்கள் 10 அடி பாதையுடனும் தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:-
0750455171,
0033753595983

(சி-7514)

### வாகனம் விற்பனைக்கு

Lx... தொடரிலக்கம் உடைய JAC புள்பொடி லொறி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
(7901) 0713058779

### வீடு வாடகைக்கு தேவை

நுணாவிலுக்கும் மீசாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் தனியார் கல்வி நிலையம் நடத்தக்கூடிய வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு:-
(4681) 0750480935

### கார் விற்பனைக்கு

Toyota Aqva hybrid 2013 in Jaffna, Doctor used wp KX xxx Grey colour Fully Loaded Low mileage in superb condition

Price-Negotiable

Tel-0777968805

(7904)

### KBK ACCOUNTING CENTRE

(கணக்கீட்டுக்கான பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கான நிலையம்)

| | |
|---|---|
| கிளை 01 சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். Sat & Sun → 2 - 8pm | கிளை 02 பலாலி வீதி, கந்தர்மடம் (கந்தர்மடச்சந்தி) Thu, Fri → 3.30 - 6.30pm |

ACCOUNTING - Mr.BALAKAJEN
B.Com (Jaf), H.N.Dip.in-ACC(ATI), Dip.in.Edu (OUSL), M.Com (HONS)
(Tutorial Staff)

கணக்கீடு → A/L 2017 & Day, A/L 2018, A/L 2019
வணிகக்கல்வியும் கணக்கீடும் → O/L 2017, Grade 10

தமிழ், ஆங்கில மொழி மூலம் (4682)

### மக்களின் நன்மதிப்பை பெற்ற உலக நாடுகளில் முதன்மை நாமமான

20% OFF

BLACK+DECKER DEWALT Ohms STANLEY

PowerTools மற்றும் வீட்டு இலத்திரனியல் உபகரணங்கள்

மீண்டும் யாழ் மக்களுக்காக 20% விசேட விலைக்கழிவுடன்

KINGS ELECTRONICS(PVT) LTD

வடமாகாண ஏகவினியோகத்தர்

NO.12, POINT PEDRO ROAD, JAFFNA. | WEB: MYKINGS.LK Tel: 0214546699

(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)

10.02.2017 தொடக்கம் 17.02.2017 வரை பெற்றுக்கொள்ளலாம்

150 வருடத்திற்கு மேலான நம்பிக்கை வாய்ந்த Delmage கம்பனியிடம் இருந்து




மேலும்

நந்தலாலா ஹாட்வெயர்
No.29 Stanly வீதி யாழ்ப்பாணம்.

ஜெசீமாஸ்
K.K.Sவீதி யாழ்ப்பாணம்.

ARK Enterprises
Stanly வீதி யாழ்ப்பாணம்.

தில்லயம்பதி மோட்டர்ஸ்
Stanly வீதி யாழ்ப்பாணம்.

லிங்கம் & Co
No.48 Stanly வீதி யாழ்ப்பாணம்.

நாராயணா ஹாட்வெயர்
Stanly வீதி யாழ்ப்பாணம்.

கஜமுகன் ஹாட்வெயர்
Stanly வீதி யாழ்ப்பாணம்.

ஆகிய இடங்களிலும் மேற்குறிப்பிட்ட திகதிகளில் 20% விலை கழிவுடன் பெற்று கொள்ளலாம்

Delmege Forsyth & Co. Ltd
101 Vinayalankara Mawatha, Colombo 10

(சி-7508)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.